உ
சிவமயம்

காரைநகர்

# திக்கரை முருகமூர்த்தி கோவில்

# குடமுழுக்கு விழா



# சிறப்பு மலர்

1990

University of Jaffna
235.5
KAR
49716(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RAJA TOURS

168/1, STANLEY ROAD, JAFFNA.

## தென் இந்திய ஸ்தல, வட இந்திய காசி யாத்திரைகள்

## பாங்கொக் - சிங்கப்பூர்

## சுற்றுலாக்கள்

**ஸ்தல யாத்திரைகள் 2 மாதங்களுக்கு ஒருமுறை.**
**சுற்றுலாக்கள் 3 மாதங்களுக்கு ஒருமுறை**

எப்பொழுதும் பெயர்களைப் பதிவு செய்யலாம்.

ஸ்தாபிதம் 1961 - கடந்த 28 வருடங்களாக சிறப்பாக பங்குபற்றுவோர் போற்றும் வண்ணம் பணிபுரிபவர்கள்.

10,000 பெண்கள் 7,000 ஆண்கள் வரை பங்கு பற்றியுள்ளனர்.
எமது தாழ்மையான சேவைகளை பொது ஸ்தாபனங்கள்,
ஆலய தர்மகர்த்தா சபைகள், அரசாங்கங்கள் மற்றும் பல ஸ்தாபனங்கள் போற்றியுள்ளன.

**துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பளை - வாழ்த்துரை**

கடமையுணர்வும் நம்பிக்கையும் கொண்டவர்கள் ராஜா டூர்ஸ் ஸ்தாபனத்தினர் என்பதை நான் நன்கு அறிவேன். அவர்கள் ஒழுங்கு செய்த குழுவுடன் எமது துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையினரும் நானும் 1982ம் ஆண்டு டிசம்பர் மாதம் யாத்திரை செய்து நிறைவு பெற்ரேம். 162 வது தடவையாக தென்னிந்திய யாத்திரையும் சுற்றுலாவும் இவ்வாண்டு சித்திரை முதல் வாரம் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுவதாக அறிகிறேன். மிகவும் மகிழ்ச்சி தரும் இந்த யாத்திரையினுல் மேலும் மேலும் தலயாத்திரைகளினுல் பெறும் அனுபவம் சிறக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். அரசாங்க உல்லாசப் பயண ஸ்தாபனத்தில் அங்கீகரிக்கப்பட்ட இந்த ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்குத் திருவருள் துணைபுரியும் என்று வாழ்த்தி அமைகிறேன்.

**தலைவர்: தங்கம்மா அப்பாக்குட்டி**

ஏமாற்றுப்படாமல் பண்பான, கௌரவமான யாத்திரைச் சுற்றுலா சேவைகளைப் பெறுவதற்கு

## "ராஜா டூர்ஸ்"

168/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வடமாகாணத்தில் அரசாங்க உல்லாசப்பயண சபையால்
அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு ஸ்தாபனம்.
அந்நிய செலாவணி ஏற்க, மாற்ற அதிகாரம் பெற்றதும்
அரசாங்க பெயர் திணைக்களத்தில் பதிவும் பெற்ற ஸ்தாபனம்.

**வி. அமிர்தேஸ்வரராஜா (அதிபர்)**
சமாதான நீதிபதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007

UNIVERSITY OF JAFFNA LIBRARY

AL

235.5
KAR

# NEWTON ELECTRICALS

**141, 143 Stanley Road,**
**Jaffna.**

காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி கோவில் கும்பாபிஷேக விழா சிறப்புடன் நடைபெற வாழ்த்துகிறோம்.

இத்திருநாளில் யாழ்ப்பாணம் நியூரோன் எலக்ரிக்கல்ஸ் ஸ்தாபனத்தாரின் 40வது வருடம் பூர்த்தியானதையிட்டு எமது வாடிக்கையாளருக்கும் மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

கீழ்க்காணும் பொருட்கள் எம்மிடம் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

ARCHIVES
Donated by:-
Mr. K. C. KULARATNAM

- ★ *எஸ்லோன் பைப்புகள்*
- ★ *C.E.B. மின்சார பல்புகள்*
- ★ *எவரெடி பற்றறிகள்*
- ★ *N.E.I. எலெக்ரிக் நீர் இறைக்கும் பம்புகள்*
- ★ *Robin மண்ணெண்ணெ பம்புகள்*
- ★ *சகல விதமான மின் பாவனைப் பொருட்கள்*

N.A

# நியூரோன் எலக்ரிக்கல்ஸ்

**141, 143, ஸ்ரான்லி வீதி**
**யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான தங்க நகைகளுக்கு

# Kalaivani Jewels House

**111B Kasthuriar Road**
**Jaffna.**

# கலைவாணி நகை மாளிகை

**111 B, கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

FROM

# V. K. Rajaratnam

**Stanley Road**
**Jaffna**

*With the Best Compliments*

FROM

# Newton Trade Centre

**50, Kasthuriar Road,**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் களபூமி திக்கரை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி கோயில்
குடமுழுக்கு கும்பாபிஷேகம் சிறப்புடன் நடக்க
அன்புடன் வேண்டுகிறோம்.

# இந்திரா ஸ்ரோர்ஸ்

**76 மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்**

தொலைபேசி 23882

# INDRA STORES

**76, Manipay Road**
**Jaaffna**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இம்மலரில் . . . .


1. நுழைவாயில்
   கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
2. ஆசிச் செய்திகள்
3. திருப்பணிச்சபையின் செயலாளர் அறிக்கை
   திரு. வே. நடராசா
4. காரைநகர் திக்கரை முருகன் திருத்தல வரலாறு
   திரு வே. நடராசா
5. திக்கைத் திரிபந்தாதி
   சிவஸ்ரீ. க. வைதீசுவரக் குருக்கள்
6. கும்பாபிஷேக மகத்துவம்
   திரு. த. அம்பிகைபாகன்
7. கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
   கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
8. திருமுருகாற்றுப்படையும், ஆறுபடை வீடுகளும்
   திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் B.A. (Hons) M.A
9. அருணகிரிநாதரும் திருப்புகழும்
   வண்ணை ப. கணேசலிங்கம்
10. ஈழத்தில் கிறிஸ்தவத்திற்கு முன்னர் நிலவிய முருக வழிபாடு பற்றிய தொல்லியற் சான்றுகள்
    கலாநிதி சி. க. சிற்றம்பலம்
11. இலங்கையிலே பரத நாட்டியம்
    பேராசிரியர் வீ. சிவசாமி
12. ஈழத்தில் முருக வழிபாடு
    திரு. சிவ. மகாலிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. காரைநகர் திக்கரை முருகன் அந்தாதிக் கீர்த்தனைகள்
பிரம்மஶ்ரீ ந. வீரமணி ஐயர்

14. திருப் பொன்னூஞ்சல்
அளவையூர் அருட்கவி. சி. விநாசித்தம்பி

15. தேவஸ்தான திருவிழா உபயகாரர்கள்

16. கும்பாபிஷேக மண்டலாபிஷேக உபயகாரர்கள்

---


அச்சிட்டோர்.

CHUDEROLLI PRINTERS

121/4 மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

காரைநகர் - திக்கரை

முருகமூர்த்தி கோவில்

# மஹா கும்பாபிஷேக

# சிறப்பு மலர்

235.5
AR. KAR

*மண்டலாபிஷேகம்:*

சுக்கில ஆண்டு தைத் திங்கள் 18ம் நாள் புதன்கிழமை
31-01-1990

*மஹா கும்பாபிஷேகம்:*

சுக்கில ஆண்டு பங்குனித்திங்கள் 3ம் நாள் வெள்ளிக்கிழமை
16-03-1990

*பிரதம ஆசிரியர்:*

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்

N.A
249716
249716
University of Jaffna
249716
Library

*வெளியீடு*

ஆலயத் திருப்பணிச் சபை
1990

N.A
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் ஆசிரியர் குழு:

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
(பிரதம ஆசிரியர்)

திரு. த. அம்பிகைபாகன்

திரு. ஐ. தி. சம்பந்தன்

சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்

திரு. க. நாகேஸ்வரன்

திரு. ப. கணேசலிங்கம்

முகாமையாளர்:

க. நடராசா

## திருப்பணிச் சபை

போசகர்கள்:

சி. க. கந்தையா
(கோவில் முகாமையாளர்)

எஸ். கே. பொன்னம்பலம்
(தலைவர் இந்து வாலிபர்சங்கம் காரைநகர் கிழக்கு

சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

தலைவர்:

ச. வி. முருகேசு

உபதலைவர்:

மு. பாலசிங்கம்
க. நடராசா

செயலாளர்:

வே. நடராசா

உபசெயலாளர்:

இ. கனகரத்தினம்

பொருளாளர்:

பே. பாலசுப்பிரமணியம்

உபபொருளாளர்:

க. சிவபாதசுந்தரம்
கா. தியாகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

செந்தமிழும் சைவநெறியும் தழைத்தோங்கும் காரைநகரின் கண்ணே பிரசித்தி பெற்று விளங்கும் சைவாலயங்களில் ஒன்றாக விளங்குவது திக்கரை முருகமூர்த்தி கோவில். இவ்வாலயத்திலே திருப்பணிகள் செவ்வனே நிறைவேறி அடியவர்கள் துயர்தீர்க்கும் முருகப் பெருமானுக்கு 31-01-1990 அன்று இனிதே நடந்தேறிய கும்பாபிஷேகத்தையொட்டி இச்சிறப்புமலர் மலர்கின்றது. கும்பாபிஷேக விழாமலர் ஒன்றினை வெளியிட வேண்டுமென திருப்பணிச் சபையினர் தீர்மானித்து அதற்கான முயற்சிகளுக்கு அனைத்து வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் தந்தனர். இவர்களது இவ்வெண்ணத்தை நடைமுறைப்படுத்த முன்னின்று உழைத்த அன்பர்கள் பலர். இவர்கள் அனைவரும் முருகனது திருவருள் பெற்று எல்லா நலன்களையும் பெறுவார்களாக.

கும்பாபிஷேகத்தையொட்டி இம்மலர் வெளிவருகின்ற போதும், எம்பெருமானது ஆலயத்தில் அடுத்து இடம்பெற வேண்டிய முக்கிய திருப்பணியாகிய ராஜ கோபுரத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறுவதாகவும் இம்மலர் விளங்குகின்றது. இத்தகு அழகுமிக்க ஆலயத்திற்கு ராஜகோபுரம் அமையுமிடத்து மேலும் பொலிவு பெற்றுத் திகழும். அத்தகைய திருப்பணிகளை நிறைவேற்றுவதற்குரிய ஆர்வத்தை அடியவர்களிடத்தே ஏற்படுத்துவதே இம்மலரின் முக்கிய நோக்கமாகும். கோபுரத்தின் வரலாறு, பெருமை, தத்துவம், சிறப்பு ஆகியவற்றை அடியவர்களுக்கு எடுத்துக் கூறும் சிறப்புக் கட்டுரையொன்று இம்மலரில் இடம்பெறுகின்றது. சிவபுண்ணியச் செயலாகிய இத்திருப்பணியினை நிறைவேற்றுவதற்கு ஆலய பரிபாலனத்திற்கு அடியவர்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கி, திக்கரை முருகனின் திருவருளுக்குப் பாத்திரராவார்களாக.

இம்மலருக்கு காஞ்சி ஸ்ரீ காமகோடிபீட ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள், நல்லை ஆதீன குருமகா சந்நிதானம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமட அதிபர் ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகள், பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள், பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள், ஈழத்துச் சிதம்பரம் சிவஸ்ரீ. க. மங்களேசுவரக் குருக்கள், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகிய பெரியோர்கள் ஆசிகூறி வாழ்த்து தெரிவித்துள்ளார்கள், இப்பெரியோர்களின் ஆசிகள் முருகனது திருவருளைப் பெற எம்மை ஆற்றுப்படுத்துகின்றன.

மலர் சிறப்புற ஆக்கங்களைக் குறுகியகால அவகாசத்துள் தந்துதவிய அன்பர்களுக்கும் மற்றும் இம்மலர் வெளிவர சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் விளம்பரங்கள் தந்து ஆதரவு நல்கிய அன்பர்களுக்கும், ஆலயத்தோடு தொடர்புடைய விடயங்களைச் சேகரிக்க உதவிய அன்பர், ஆசிரியர் திரு. அம்பிகைபாகன் அவர்களுக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சகத்தோடு தொடர்புடைய வேலைகளைக் கவனித்து உதவிய திரு. ப. கணேசலிங்கம் அவர்களுக்கும் திக்கரை முருகனின் நல்லருள் கிட்டுவ வதாகுக.

இம்மலர் சிறந்த முறையில் வெளிவர வேண்டுமென்ற பெரு நோக்கில் தொடக்கம் முதல் பெரிதும் ஈடுபாடு காட்டியவர் திரு. ஐ. தி. சம்பந்தன் அவர்கள். மலர் உருவாகிக் கொண்டிருக்கும்போது அவரது மேலான உதவிகள் கிடைக்கவில்லையே என் எண்ணிக் கொண்டிருந்தபோது திக்கரை முருகன் அவரது துணையினை இறுதி நேரத்தில் கிடைக்கும் வண்ணம் செய்தருளியுள்ளான். அவர்களுக்கும் சகல நலன்களும் கிடைக்கும் வண்ணம் திக்கரை முருகனின் திருவருள் பொலிந்து விளங்குவதாகுக.

யாழ்ப்பாணம் இணுவில் கவிமாமணி பிரமஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள் திக்கரை முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு தாம் பாடிய அந்தாதிக் கீர்த்தனைகளை இம்மலரில் பதிப்பிக்க இசைந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு அவருக்கும் எம்பெருமானின் திருவருள் கிட்டுவதாகுக.

இம்மலரினை பல சிரமங்களுக்கும் மத்தியில் குறுகிய கால அவகாசத்தினுள் சிறப்புற அச்சிட்டு உதவிய சுடரொளி அச்சகத்தாருக்கும் சிறப்பாக திருமதி சம்பந்தன் அவர்களுக்கும் முருகப் பெருமானின் திருவருள் பொலிவதாகுக.

மங்களம்

காரைநகர்
23-02-1990

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
மலராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
## ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

அவர்களின்

# ஆசியுரை

அருட்பெருந்தகையீர்;

காரைநகர், திக்கரை ஸ்ரீ முருகப் பெருமான் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நனிதே நிறைவுற்று அதனை முன்னிட்டு ஒரு சிறப்பு மலர் வெளியிடுவது காலம் பொருத்தமாகும். இஃது சைவப் பெருமக்கள் உள்ளங்களிலே தெய்வ உணர்வு, தெய்வ நம்பிக்கை ஊன்றி எழவும், நற்றமிழ் ஆர்வம் பொங்கவும் வழிவகுப்பன.

உளங்குழைந்து, ஒருமையுடன், ஒருத்தரம் முருகாவென்று ஓது வார் தமக்கு பெருவரம் அளிக்கும் பெரும் பெயர் 'முருகா' கலியுக வரதனும் கண்கண்ட தெய்வமான அப்பெருமானருளால் அநுபூதி பெற்ற மகான்களின் உண்மைச் சரிதைகள் இதற்குச் சான்று பகரும்

இம்மலர்க்குழுவினரின் தளர்விலாத் தொண்டுகள் மேன்மேலும் வளர்கவென முருகப் பெருமானின் பாத கமலங்களைத் தியானித்து எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பேராசிரியர், கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள்

அவர்களின்

# ஆசிச் செய்தி

காரை நகர் களபூமி திக்கரைத் தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் முருகப்பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் 31-01-1990ம் தினத்தில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நிறைவேறியமை எம்பெருமானின் திருவருட்பேறினுலாகும். இப்பெருஞ் சாந்தி வைபவத்தைத் தொடர்ந்து நாற்பத்தைந்து தினங்கள் மண்டலாபிஷேகம் நிறைவேறி வருகின்றமை எமக்கு மிக்க மகிழ்ச்சியளிக்கின்றது.

மண்டலாபிஷேக பூர்த்தியன்று கும்பாபிஷேக வைபத்தினைக் காலந்தோறும் அடியார்கள் நினைவிற் கொண்டு எம்பெருமானது அரிய தெய்வீகப் பெருமைகளை உய்த்துணர்வதற்கு ஏதுவாக சிறப்பு மலரொன்று வெளிவருவது பொருத்தமான காரியமாகும். அம்மலர் கும்பாபிஷேகம் பற்றிய பல செய்திகளையும் சமயஞ் சார்ந்த கட்டுரைகளையும் தாங்கி சைவமணம் கமழும் அரிய மலராக அமையும் என நிச்சயமாக நம்பலாம்.

மலரின் ஆக்கத்திற்கு உழைத்த மலராசிரியருக்கும், அவருக்கு உறுதுணையாக விளங்கிய ஏனைய குழு அங்கத்தினர்க்கும், மற்றும் அம்மலருக்குப் பல்வேறு வகைகளில் உதவிய அன்பர்களுக்கும் மலர் வெளியீட்டுக்குப் பொறுப்பான தேவஸ்தான திருப்பணிசபையினருக்கும் திருப்பணி சிறப்புற தொண்டாற்றிய அன்பர்களுக்கும் முருகப் பெருமானின் திருவருளால் சகல நலன்களும் கிடைக்க வேண்டுமென முருகப் பெருமானின் திருவடிகளைப் போற்றி ஆசி கூறுகின்றோம்.

இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
12-3-90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிக்கூட்டுக் கோபுரத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KUMARAN TEXTILES

**148, New Market,**

**Jaffna.**

காரைநகர் - திக்கரை

முருகமூர்த்தி கோவில் மகா கும்பாபிஷேகம்

சிறப்புற வாழ்த்துகிறோம்

# குமரன் ரெக்ஸ்ரைல்ஸ்

**148, நவீன சந்தை**

**யாழ்ப்பாணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

நம்பாபிஷேகம் மண்டலாபிஷேகம் இனிது நிறைவேற

வாழ்த்துபவர்கள்

# கு. க. சங்கரப்பிள்ளை

308 ஆஸ்பத்திரி வீதி

யாழ்ப்பாணம்

ங்களிடம் நல்ல தரமான அரிசி குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

# K. K. SANGARAPPILLAI

308, HOSPITAL ROAD

JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவசிவ

கயிலைமாமுனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசி வாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்

சுவாமிகள் அவர்களின்

# வாழ்த்துரை

மேன்மைகொள் சைவ நீதியையும், மிகு பழமைமிக்க தமிழ் மொழியையும் ஒருங்கு போற்றும் உள்ளங்கொண்ட ஈழப்பெரு மக்கள் கூடி, காரைநகர் திக்கரை அருள்மிகு முருகமூர்த்தி கோவில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகத்தை மங்கலமுற நிகழ்த்துவதும், விழாவின் சிறப்பினைக் கூட்டிட மலரொன்று வெளியிடுவதும் அறிந்து மகிழ்ச்சி.

''அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்'', ''அவன ருளாலே அவன்தாள் வணங்கி'' எனும் அருள் மொழிகள் எம் பிரான் பாதம் போற்றிப் பரவிடும் வாய்ப்பும் முன்னைநாட் பணிந் தேத்தி யோர்க்கே எய்தும் என்பதை உள்ளுறுத்து உரைப்பன. அது வாய்த்த ஈழமக்கள் இப்பணியைச் செம்மைபெறச் செய் வது பாராட்டிற்குரியது.

உலக மேன்மையினையும், சமய வளர்ச்சியையும் உளங் கொண்டு அமைக்கப்பெற்றுள்ள இப்புனித விழா மாண்புற நிக ழவும், விழாமலர் பன்மணம் கமழும் பைந்தமிழ்ப் படைப்புகளு டன் மலரவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்து கிறோம்.

சுபம்

249716

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

புடவை, கிராமிய தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர்

## மாண்புகு. சௌ. தொண்டமான்

அவர்களின்

# ஆசிச் செய்தி

காரைநகரின் பழம்பெரும் ஆலயமான காரைநகர் களபூமி திக்கரை முருகன் ஆலய மகா கும்பாபிஷேகம் அண்மையில் சிறப்புற நடைபெற்றதாக திரு. கே. கே. சுப்பிரமணியம் மூலம் அறிந்து பெரு மகிழ்ச்சியடைந்தேன்.

மண்டலாபிஷேகத்தன்று, விசேட மலர் வெளியிடுவது அறிந்து திருப்பணி சபையினரை உளமாரப் பாராட்டுகின்றேன்.

இன்று நாடெங்கிலும் நிலவும் நிலைமை மாறி, சுபிட்சமும், சாந்தியும், சமாதானமும் நிலவ, முருகப்பெருமானின் நல்லருள் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

காரைநகர் மக்கள் என்பால் மிகுந்த நம்பிக்கையும் அன்பும் கொண்டவர்கள். அவர்கள் வாழ்வில் வளம்பெற முழுமனத்துடன் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

45, சென். மைக்கல்ஸ் வீதி,
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வராய நம:
ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பரை
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம்
ஸம்ஸ்தானம்
காஞ்சீபுரம் – 631502
அவர்களின்

# ஆசிச்செய்தி

ஸ்ரீ ஆதிசங்கர பகவதபாதாள் நிறுவிய ஆறு மதங்களுள் ஒன்றாகிய கௌமாரம் முருகனைப் பற்றியது ஸ்ரீலங்காவின் ஒரு பகுதியாகிய முருகனது ஸான்னித்தியம் நிரம்பிய பல தலங்களைக் கொண்ட பகுதி. இவைகளுள் ஒன்றாக விளங்கும் காரை நகர் திக்கரை ஸ்ரீ முருகமூர்த்தி திருக்கோவிலுக்கு ஆலயப் பராமரிப்பால் மிகமிகப் புண்ணியமான பணியாக விளங்கும் புனராவர்த்தன கும்பாபிஷேகம் செய்வித்து மலர் வெளியிடப்படுவது குறித்து மகிழ்கிறோம்.

இந்து வாழ்க்கை முறைக்கு அஸ்திவாரமாக அமையும் இறைவழிபாடு, ஆலயம், அதன் பராமரிப்பு முதலிய பல விஷயங்களையும் விளக்குவதாக மலர் அமைந்து விளங்கவும் விழா நிர்விக்னமாக நடந்தேறவும் ஸ்ரீமுருகன் அருள் கிடைக்க ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய, இந்து கலாசார தமிழ் அலுவல்கள்
இராஜாங்க அமைச்சர்

## மாண்புமிகு. பி. பி. தேவராஜ்

அவர்களின்

# ஆசிச் செய்தி

கும்பாபிஷேகம் செய்வதும், அதைச் செய்விப்பதும், பார்த்து மகிழ்வதும், கோடி புண்ணியம் என ஆகமம் கூறுகின்றது. இந்த வகையில் காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது மிகவும் பேறுடையது. அதை யொட்டி மண்டலாபிஷேகம் நடந்து சங்காபிஷேகம் காணவிருப் பது இப்பகுதி மக்களுக்கு கிடைத்த திருவருட் கடாட்சமாகும். இத்தகைய நாளில் சகல இந்துக்களும் மனநிறைவு கொள்வர். இவ்வாலயத்தின் பெருமைபற்றி பலர் சொல்லிக் கேள்விப்பட்டி ருக்கின்றேன். இந்நன்நாளில் சகலருக்கும் முருகன் திருவருள் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன். இப்பணியை மேற் கொண்ட அனைவரையும் பாராட்டுவதோடு ஆலயத்தை சிறப்பாக நடாத்தி இப்பகுதி மக்கள் அனைவரையும் பாடுபட வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன். குடமுழுக்கு மலர் வெளியிடுவது மிகவும் பொருத்தமானதும் வரவேற்கத்தக்க துமாகும். இந்நன்நாளில் எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொள் கின்றேன்.

இந்துசமய இந்து கலாச்சார அமைச்சு
கொழும்பு 2
06-03-90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தின்

பிரதம குருக்கள்

## சிவஸ்ரீ க. மங்களேசுவரக் குருக்கள்

அவர்களின்

# ஆசியுரை

காரைநகர் களபூமியில் உள்ள திக்கரைத் திருத்தலத்தில் கோயில் கொண்டருளி அருள்பாலிக்கும் முருகப் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகட்கும் யாதொரு குறைவுமின்றி மகாகும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்தி இனிதே நிறைவுற்று நாற்பத்தைந்து தினங்கள் மண்டலாபிஷேகம் நிகழ்ந்து, இன்று பூர்த்திவிழா நடைபெறுவது எமக்கெல்லாம் மகிழ்ச்சியளிக்கும் தெய்வீக நற்காரியமாகும். இதனைக் காலந்தோறும் நினைவிற் கொள்ளும் வகையில் முருகப் பெருமானின் அடியவர்களுக்கு ஏற்ற ஒரு வரப்பிரசாதமாக வெளிவருகின்றது இக்கும்பாபிஷேக சிறப்பு மலர். இதன் கண்ணே கும்பாபிஷேகம் பற்றிய பல செய்திகளும் அறிஞர் பெருமக்களின் அரிய கருத்துக்கள் அடங்கிய ஆக்கங்களும் எமது சமய பாரம்பரியத்தை யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ள வழி வகுப்பன. இம்மலர் சிறப்புற அமைந்து சைவ மணங்கமழ திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

கும்பாபிஷேக கைங்கரியத்தில் தொண்டு புரிந்த அடியவர்களுக்கும், சிறப்பு மலரின் ஆசிரியர் குழுவுக்கும், மலருக்குத் துணைபுரிந்த ஏனைய அன்பர்களுக்கும் தேவஸ்தான திருப்பணிச் சபையினருக்கும் இக்கிராமத்தின் மக்கள் அனைவருக்கும் எம்பெருமானின் திருவருள் கிடைக்கப்பெற்று சகல வளங்களும் பெருகி இன்புற்று வாழ எம்பெருமானின் திருவருள் துணைக்கொண்டு ஆசி கூறுகின்றோம்.

சுபம்

ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம்,
காரைநகர்.
01-02-1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான தலைவர்
துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி

## பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின்

# ஆசியுரை

'முடியாப் பிறவிக் கடலிற்புகார் முழுதுங்கொடுக்கும்
மிடியால் படியில் விதனப்பட்டார் வெற்றிவேற் பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமான் அவுணர் குலமடங்க
பொடியாக்கிய பெருமான் திருநாமங்கள் புகழ்பவரே''

கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாக விளங்கும் எம்பெருமான் முருகனுக்கு காரைநகர் திக்கரையில் *31-1-90*ல் நடைபெற்ற குடமுழுக்குத் தரிசனம் பெற்ற புண்ணியம் எனக்கும் கிடைத்தது. அந்தணப் பெருமக்களின் மந்திர ஒலியும் அடியார்களின் அரோகரா ஒலியும் கலைஞர்களின் மங்கல வாத்திய முழக்கமும் ஒன்று சேர்ந்து அனைவரையும் அப்பெருமானிடத்தில் கொண்டுபோய் நிறுத்திவிட்டது. ''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே'' என்று நான் எண்ணத் தோன்றியது. கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவைக் கண்ட பூரிப்பில் அனைவரும் மலர்ந்த முகத்துடனே காணப்பட்டனர். மனித வாழ்க்கையிலே இத்தகைய பேறு கிடைத்தற்கரியது என்பது முற்றிலுமுண்மை

திருக்கோயில்களும் அமைப்புகளும் அங்குள்ள திருவுருவங்களும் அருமையான உட்பொருளைக் காட்டுவனவாகும். இதே போன்று இங்கு நடைபெறும் விழாக்களும் நிறைந்த உண்மைகளை விளக்குவன. இதனாலேயே காலத்துக்குக் காலம் ஆலயங்களையும், இயந்திரத் தகட்டையும், அட்டபந்தனத்தையும் மற்றும் அனைத்தையும் புதுக்குவித்துக் குடமுழுக்குச் செய்து திருவருளைப் பெருக்குவதற்கு வழி காணப்படுகிறது. சிறந்த முறையில் நித்திய நைமித்தியங்கள் நடைபெறுங் கோயில்களில் மந்திர சக்தியாலும் அடியவர்கள் செய்யும் வந்தனையாலும் மக்களும் நாடும் புனிதமடைகிறது. எண்ணங்கள் தூய்மையடைகின்றன. செயல்கள் சித்தியைத் தருகின்றன. இன்று எமது சைவமக்கள் மத்தியில் என்றுமில்லாத ஒரு எழுச்சி ஏற்பட்டுள்ளது. திருக்கோயில்களைப் பேணுவதில் அனைவருக்கும் சிறந்த ஈடுபாடு இன்று ஏற்பட்டுள்ளது மிக மகிழ்ச்சியான சம்பவமே.

இந்த அடிப்படையில் திக்கரை முருகப் பெருமான் திருப்பணிகளும் செம்மையுற நிறைவேறியதும் குடமுழுக்குக் கண்டதும் மிகவும் பாராட்டத்தக்க புண்ணியச செயலாகும். மேலும் இவ்வாலய வளர்ச்சி ஓங்கி அமைவதற்கு அந்தப் பெருமான் திருவருள் துணைபுரியட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S. K. Ponnampalam

Attorney - at - Law & Notary Public


## ஆசிச் செய்தி

அந்தமில் லொளியின் சீரால் அறுமுகம் படைத்த பிண்பால்
எந்தை கண் ணின்றும் வந்த இயற்கையால் சக்தியாம்பேர்
தந்திடும் பனுவல் சொன்ன தன்மையாற் தனிவேற் பெம்மான்
கந்தனே யென்ன நின்னைக் கண்டுளக் கவலை தீர்ந்தோம்.

ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஓதமில் குழவிபோல் வான் யாவற்றையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருளவல்லான்.

நமது சக்தியே முருகன். அவன் வேறு நாம் வேறு அன்று. நம்மைப் போலவே பிரிவின்றி யாண்டும் நீக்கமற நிறைந் ,வன் முருகன். பார்வைக்குக் குழந்தைபோல் தோன்றுகின்றான். ஆனால் முற்றும் உணர்ந்தவன் . தன்னைப் போற்றினவர்க்குச் செல்வமும், ஞானமும், முத்திப் பேறும் வழங்குகின்றான் என்பது பாடலின் பொருளாகும். பிரணவப் பொருளைத் தந்தைக்கு உபதேசித்த தனயனாகிய முருகப் பெருமான் அகத்திய முனிவர் முதலியோர்க்கும் உபதேசித்தருளினார், என்பது கந்தபுராணம். அவனை வழிபட்டு அடியவர்களனைவருக்கும் குருவாய் எழுந்தருளி இப்பொருளை உணர்த்துவான் திக்கரை முருகப் பெருமான் என்பது வெளிப்படை.

இத்திருமுருகன் ஆலயம் பல இலட்ச ரூபா செலவில் புனருத்தாரணஞ் செய்யப்பட்டிருப்பது மிகவும் சிறப்பானது. காரைநகர் திக்கரை முருகனின் குடமுழுக்கு விழா சிறப்பாக நடந்தும், அத்தினமே குடமுழுக்கு விழா மலரும் சிறப்பாக அமைந்து காரைநகர் மக்களுக்கு சைவ சமயத்தை வளர்க்கும் ஒரு நூலாக அமைய வேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக.

மக்களால் பெருந்தொகை செலவில் புணருத்தாரணஞ் செய்யப்பட்டிருக்கும் இவ்வாலயத்தில் சைவாகம விதிகளின்படி கிரியை முறைகள் நாள்தோறும் தவறாது ஒழுங்காக நடைபெற வேண்டியது அத்தியாவசியமென பொருட்படுத்தியும் இதனைப் பொருட்படுத்தாமல் மக்கள் வேடிக்கைத் திருவிழாக்களில் பெருந்தொகையான பணத்தை நாள்தோறும் விரயம் செய்வதையிட்டுக் கவலைப்பட வேண்டியிருக்கின்றது. திருப்பணிச்சபை இவ்விடயத்தில் கவனம் செலுத்தி சைவாகம விதிகளின்படி நாளாந்த பூசைகள் சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடைபெற கடமைப்பட்டிருக்கின்றோம்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்''


CHATHAM STREET,
COLOMBO-1.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கரை முருகமூர்த்தி கோவில் முகாமையாளர்

# திரு. க. நடராசா

அவர்களின்

# ஆசிச் செய்தி

தர்மகாரியங்களில் மிக உயர்ந்ததாகப் போற்றப்படுவது ஆலயத்திருப்பணியாகும் 1974ம் ஆண்டு நடந்த மகாகும்பாபிஷேகத்தின் பின் 1990-01-31இல் மகாகும்பாபிஷேகம் முருகப்பெருமானின் திருவருளால் இனிதே நிறைவேறியுள்ளது.

இக்காலப் பகுதியில் மகாமண்டபம், வசந்த மண்டபம், உள்வீதி கொட்டகை, மணிக்கூட்டுக் கோபுரம், வைரவர், கொடித்தம்பம், ஆறுமுகசுவாமி கோயில், முகப்புக் கொட்டகை, முதலிய திருப்பணி வேலைகள் நடந்து முடிந்துள்ளன. நெருக்கடியான இக்காலக்கட்டத்திலும் இத்திருப்பணிகளுக்கும் மகாகும்பாபிஷேகத்திற்கும் உதவிய சகலருக்கும் முருகப் பெருமானின் திருவருள் கிடைப்பதாக.

இன்னமும் நிறைவுபெறவேண்டிய திருப்பணி வேலைகள் பலஉள. திருக்கோபுரம் அமைப்பதற்கான ஆயத்தங்கள் ஏற்கனவே தொடங்கியுள்ளன. ஆலயத் திருப்பணி வேலைகளில் ஈடுபட்ட சகல ஸ்தபதிகளுக்கும் எமது நன்றிகள். இத்திருக்கோபுர நிதிக்கும் மற்றும் திருப்பணிகளுக்கும் முருகப்பெருமானுடைய அடியார்கள் தொடர்ந்தும் தம் ஆதரவை வழங்குவார்கள் என்பது எமது அசையாத நம்பிக்கை.

இம்மகா கும்பாபிஷேகத்தையொட்டி வெளிவரவிருக்கும் மலர், எங்கள் குல தெய்வம் முருகப்பெருமானின் பெருமையையும் அற்புதங்களையும் எடுத்துக்கூறி, அப்பெருமானை மனமுக வழிபடச் செய்யும் ஒரு வழிகாட்டியாக அமையவிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இம்மலர்க் குழுவினர்க்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

திக்கரை
களபூமி
காரைநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் கிழக்கு

இந்து வாலிபர் சங்க பொதுச் செயலாளர்

## ஐ. தி. சம்பந்தன்

அவர்களின்

# ஆசிச்செய்தி

சைவமும் தமிழும் தழைந்தோங்கிய காரைநகரில் பிரசித்தி பெற்று விளங்கும் திக்கரை முருகன் திருத்தலம் இன்று புதுப் பொலிவுடன் திகழ்கிறது. பல திருப்பணி வேலைகள் சிறப்புடன் நடைபெற்றிருக்கின்றன. திக்கரை சூழலில் தெய்வீக மணம் பரப் பும் இவ்வாலயத்தின் திருப்பணிகளில் பல இளைஞர்கள் ஈடுபட் டனர். இளைஞர்களால் நடத்தப்படும் பூங்காவனத் திருவிழா மிகச் சிறப்பு வாய்ந்தது என்றும் பாலனாக விளங்கும் முருகப் பெருமான் எமது இளைஞர்களின் உள்ளங்களில் உறவு கொண் டுள்ளார்.

இப்பகுதி இளைஞர்களின் பெருமுயற்சியில் இராஜகோபுரம் அமைய இருப்பது முருகன் திருவருளே! பிரார்த்தனை மண்டபத் துடனான கந்தபுராண மடம் ஒன்று கிழக்குப் பக்கமாக அமைப் பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதும் அவன் செயலே.

ஆண்டுதோறும் திருமுறை விழாவினை நடத்தி சமய உணர் வையும் விழிப்புணர்ச்சியையும் மக்களிடையே ஏற்படுத்த இந்து வாலிபர் சங்கம் முன்வந்துள்ளதை மகிழ்வுடன் அறியத் தருகின் றோம்.

இந்து வாலிபர் சங்கத்தின் முயற்சியால் கைத்தொழில் பேட்டை ஒன்றினை ஆலய சூழலில் உருவாக்கி சமூகப் பணியில் ஈடுபடுவதற்கு ஆவன செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

தெல்லிப்பழை துர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானம் மேற்கொண்டுவரும் சமய சமூகப் பணிகளை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய ஆலயங்களும் மேற்கொள்வதற்கு முன்வர வேண் டும் என்பது எமது வேணவா.

திக்கரை முருகன் மண்டலாபிஷேகத்தையொட்டி வெளி வரும் குடமுழுக்கு விழாமலர் மூலம் இந்து வாலிபர் சங்கத்தின் நற்செய்திகளை அறிவிப்பதற்கு வாய்ப்பினை அளித்த மலர்க்குழு வினருக்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவிக்கின்றோம்.

சைவமும் தமிழும் பரப்பும் சிறப்பு மலராக மலர முரு கன் திருவருளை வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் - திக்கரை

முருகமூர்த்தி கோவில் மகா கும்பாபிஷேகம்

சிறப்புற வாழ்த்துகிறோம்

# பாலாஜி றேட் சென்ரர்

மணிக்கூட்டு வீதி

யாழ்ப்பாணம்

எங்களிடம் சில்லறைப் பொருட்களும் சாய்ப்பு சாமான்களும் மற்றும் மாளிகைப் பொருட்களும் மலிவாகவும் சில்லறையாகவும் பெறுவதற்கு இன்றே நாடுங்கள்.

மொத்த விற்பனை நிலையம்

## பாலாஜி றேட் சென்ரர்

பலாலி றோட்

திருநெல்வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகிறோம்

# மணியம் ஸ்ரோர்ஸ்

பலசரக்கு வியாபாரம்

2 சென்மேரிஸ் வீதி,
நாவாந்துறை யாழ்ப்பாணம்

அன்பளிப்பு:



த. தியாகலிங்கம்
பிறவுண் றேட்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## காரைநகர் களபூமி சமூக சேவையாளர்

# திரு. மு. நடராசா

அவர்களின்

# ஆசிச்செய்தி

குழந்தைகளுக்குப் பாலனாகவும், இளைஞர்களுக்கு குமாரனாவும், கலைஞர்களுக்கு ஆறுமுக அண்ணலாகவும், வீரர்களுக்கு சேனாதிபதியாகவும், மந்திரோபதேசம் பெற்று வழிபட விரும்பும் பக்தர்களுக்கு ஞான பண்டிதனாகவும், இல்லற நிலையினருக்கு வள்ளி தேவயானை மணாளனாகவும், பதற்ற ஞானிகளுக்கு ஆண்டியாகவும் அவரவருக்கு ஏற்ற நிலையில் முருகன் அருள் புரிகிறான். இப்படி எண்ணி தமிழன் வழிபட்ட கடவுளே முருகன்.

முருகனின் பெருமையை குறிப்பாக கிருபானந்தவாரியார், புலவர் கீரன் போன்ற உபன்னியாசகர்கள் நாவினிக்கும் தமிழால், செவிசுவைக்கும் செந்தமிழால் முருகப்பெருமானின் சிறப்புகளை பக்தர்கள் பரவசப்படும் நிலையில் சொல்லி வருகிறார்கள். கர்நாடக சங்கீதம், தமிழ் இசை ஆகியவற்றில் புலமை பெற்றவர்களும் முருகப்பெருமான் மீது நிறைய கீர்த்தனங்கள் பாடி இருக்கிறார்கள்.

எனவே இம்மலர் சிறப்பு மலராக மலர எல்லாம் வல்ல காரை திக்கரை முருகனின் அருளாசியை வேண்டுகிறேன்.

122, டாம் வீதி,
கொழும்பு - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

யாழ்ப்பாணம் அரியாலை
ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான பிரதமகுருவும்
சாரைநகர் தீக்கரை முருகமூர்த்தி கோவில்
கும்பாபிஷேகப் பிரதம குருவுமாகிய
பிரதிஷ்டாவித்வஜோதி - கிரியாசாகரம்

## சிவஸ்ரீ இ. சுப்பிரமணியக்குருக்கள்

அவர்களின்

# ஆசியுரை

நாம் எல்லோரும் சுவாமியைத்தான் வணங்க வேண்டும் என்று சொல்லுகிறோம். எல்லாத் தெய்வங்களையும் சுவாமி என்று சொன்னாலும், சுவாமி என்ற பெயர் முருகனுக்கே உரித்தானது.

வேதஸேநாபதி சூர - சுவாமி - கஜமுகாநுஜ என்று அமரகோசம் விதந்து கூறுகின்றது.

அப்படிப்பட்ட முருகனை நாம் வணங்க வேண்டும், சிந்தித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

வேடுவசேரியில் இருந்த வள்ளி இடைவிடாது சிந்தித்தார். எனவே அவரிடத்தில் வயோதிபராய்ப் போய் எத்தனையோ திருவிளையாடல் செய்து தன்னிடத்தே சேர்த்துக் கொண்டார்.

தன்னைப் பணிந்த அகத்தியமாமுனிவருக்கு தமிழையே அள்ளிக் கொடுத்தார்.

ஆலயம் என்பது உடம்பு அதனுள் இருக்கின்ற ஜீவன் இறைவன். வஞ்சகம், பொய், காமம் முதலிய ஆலயத்தில் அழகு பொலியும்படியாக எத்தனையோ திருப்பணிகளை செய்கிறீர்கள். தெய்வீகம் நிலைபெறுவதற்காக மந்திரங்களையும் கிரியைகளையும் நாத இசை இசையும் பக்தியையும் மேன்மேலும் செய்விக்கிறீர்கள் அர்ப்பணிக்கிறீர்கள்.

இப்படியான சிறந்த (ஆலய) கைங்கரியங்களைச் செய்யும் உங்கள் அனைவருக்கும் கலியுக வரதனாகிய முருகப் பெருமானின் அருள்பெற்று பல்லாண்டு வாழ்வார்களாக.

ARCHIVES

01-03-90

249716

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் திருப்பணிச் செயலாளர்

# திரு. வே.நடராசா

அவர்களின்

# அறிக்கை

காரைநகர் களபூமி திக்கரை என்னும் புண்ணிய பதியில் எழுந்தருளி அருள் பாவித்துக் கொண்டு வீற்றிருக்கும் முருக மூர்த்தி ஆலயத்தின் திருப்பணி வேலைகளை மேற்கொண்டு கும்பாபிஷேகம் நிகழ்த்த வேண்டி, எம்பெருமான் திருவருளை முன்வைத்து 29 05–1986 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

பாலஸ்தாபனம் செய்து ஓரிரு வருடங்களில் கும்பாபிஷேகம் செய்ய வேண்டியது தான் ஆகமவிதி எனினும் ஆரம்பிக்கப்பட்ட திருப்பணி வேலைகள் நடைபெறுமல் இருப்பதற்கு பல சாரணங்கள் இருந்த போதும் 25-12-88 ம் ஆண்டில் திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கும் பல வழிகளில் கோவிலை முன்னேற்றுவதற்கும், கும்பாபிஷேகத்தை செய்வதற்கும் என திருப்பணி சபை ஒன்று உருவாகியது. அன்று தொடக்கம் திருப்பணி வேலைகள் சபையாரின் உதவிகளோடும், தனிப்பட்ட முறையிலும், சபையின் மூலமும் திறம்பட நடை பெற்று முருகன் ஆலயம் புதுப் பொலிவுடன் விளங்குகின்றது. அவற்றின் முக்கியமான திருப்பணிகள் பின்வருவனவாகும்.

1. வசந்த மண்டபம் அமைத்தமை
2. மணிக் கூட்டுக் கோபுர நிர்மாணம்
3. வயிரவர் சுவாமி புதுப்பித்துக் கட்டியது.
4. யாகசாலை பண்டாரி அறை கட்டியது.
5. வடக்கு பக்கமாக மதில் கட்டியது.
6. வடக்கு பக்கக் கொட்டகை போட்டது,
7. வடக்கு பக்க, மேற்கு பக்கமாக நிலத்திற்கு தளம் அமைத்தது.
8. தூபிகளுக்கு பல வண்ணம் பூசியது.
9. கொடி மரம் போட்டது.
10. பாத்திரம், திருவாசி பழுதுபார்த்துத் திருத்தியது.
11. கொடிமரத்தின் பிளேட் போட்டது அஸ்திர தேவர் செய்தல்.
12. நந்தி, பலிபீடம் அமைத்தமை.
13. சுவாமியின் ஆசனக்கல் அமைத்தது நிலத்தின் அமைப்பை மாற்றி செப்பனிட்டது.
14. சுவர்கள் எல்லாவற்றையும் பழுது பார்த்து வெள்ளை யடித்தல்
15. கோவில் அறைகள் பழுது பார்த்து, கதவு போட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. தெற்கு பக்க பீலி போட்டது, ஓடு போட்டது
17. வீதிகள் திருத்தியது
18. கோயில் மின்சார லையிட் வேலைகள் செய்தது
19. ஆறுமுக சுவாமி தளம் போட்டது
20. முன்முகப்புக்கு பாவைகள் அமைத்தது
21. இந்திரத்தகடு போன்றவை குறிப்பிடத்தக்கன இன்னும் பல வேலைகள் நடைபெற்றுள்ளன. இத்திருப்பணிகளைச் செய்த பெரியார்கள் அடியார்கள் எல்லோருக்கும் திருப்பணி சபையார் தமது நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

மஹா கும்பாபிஷேகத்தைத் திறம்பட நடாத்திவைத்த பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள் அவர்களுக்கும் ஏனைய குருமார்களுக்கும், கோயில் அர்ச்சகர் குடும்பத்தினர்க்கும், பொது மக்களுக்கும், உதவி வழங்கிய நண்பர்களுக்கும், அடியார்களுக்கும் தொண்டு புரிந்த ஊழியர்களுக்கும், திருப்பணி வேலைகளை செவ்வனே நிறைவேற்றிய சிற்பக் கலைஞர்களுக்கும், தொண்டு புரிந்தவர்களுக்கும், கும்பாபிஷேகம் செய்தவர்களுக்கும், உபயம் செய்தவர்களுக்கும், கோயில் முகாமையாளருக்கும், திருப்பணிச்சபையாருக்கும் மற்றைய எல்லாத் தொண்டுகளைப் புரிந்த நண்பர்கள் அனைவருக்கும், வாத்தியங்கள் வாசித்த கலைஞர்களுக்கும் எங்கள் திருப்பணிச் சபையாரின் நன்றியைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் இந்த கோவிலின் கும்பாபிஷேக மலருக்கு ஆக்கமும் பேராதரவும் கொடுத்த பெரியார் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயா அவர்களுக்கும் மற்றைய மலரை அச்சிடுவதற்கு உதவிய ஐ. தி. சம்பந்தன் (சுடரொளி அச்சகம்) அவர்களுக்கும் குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவ முன்வந்த திருமதி சம்பந்தனுக்கும், விளம்பரம் தந்துதவிய வியாபார ஸ்தாபனங்களுக்கும், நிதி சேகரித்த அன்பர்களுக்கும் மற்றும் கும்பாபிஷேகத்தில் பங்கு கொண்ட யாபேருக்கும், மலர் வெளியீட்டில் உரையாற்றிய பெரியார்களுக்கும், கட்டுரைகள், பாக்கள் தந்து உதவிய பெரியார்கள் எல்லோருக்கும் முருகன் அருள் கிடைக்க வேண்டுமென வேண்டி எமது நன்றியறிதலை கூறிக்கொள்கின்றோம்.

மேலும் திருப்பணி சபையார் கோயிலுக்கு செய்ய உள்ள திருப்பணி வேலைகள்:

1. திருக்கோபுரம்
2. திருக்குளம்
3. மணிமண்டபம்
4. பூந்தோட்டம்
5. மடலாயம் (கச்சியப்பர்)
6. கோவிலின் நித்திய பூசைக்குரிய ஒழுங்குமுறை ஆகியனவையாகும்.

இவை யாவும் இனிதே நிறைவேற முருகப்பெருமானின் திருவருள் துணை நிற்பதாகுக. அனைவருக்கும் எம்பெருமானின் திருவருட் கடாக்ஷம் கிட்டி நல்வாழ்வு வாழ நாம் பெருமானின் திருவடிகளைப் போற்றி வழிபடுவோமாக.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Seemati

**122, Power House Road,**
**Jaffna.**

**T. PHONE 24413**

திக்கரை முருகனின் மண்டலாபிஷேகம் சிறப்புற
வாழ்த்துபவர்கள்



★ நாளுக்கோர் புதுமை
நாடுவது உண்மை
இவற்றை
அளிபபதுதான்

# சீமாட்டி

**122, மின்சார நிலைய வீதி**
**யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் - திக்கரை
முருகமூர்த்தி கோவில் மகா கும்பாபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

# திருப்பதி ஸ்ரோர்ஸ்

51 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி 23119



# THIRUPPATHY STORES

51, Manipay Road,
Jaffna.
T.P No. 23119

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு படை வீடுடையாய் ஆண்டவா சண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா சண்முகா
தேறுதலைத் தருபவனே தேவா சண்முகா
சிங்கார ஓங்கார சீலனே சண்முகா.

தங்களின் மண்டலாபிஷேகத்தை வாழ்த்துகிறோம்





# செல்வம்ஸ்

## (பிடவை மாளிகை)

மெயின் வீதி,
நெடுங்கேணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு:

திக்கரை முருகா, எங்கள் குமரக்கடவுளே

பிணிதீர்க்கும் வேலவனே எங்கள் பிணிதீர்க்கவேண்டுகிறோம்
திக்கரை முருகா திக்கெட்டும் உமது புகழ்பரவ வாழ்த்துகிறோம்
கும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம் இனிது நிறைவேற
வாழ்த்துபவர்கள்

## ஆ. தங்கரத்தினம்

எரிபொருள் விற்பனையாளர்
களபூமி
காரைநகர்

---

திக்கரை முருகனின் மண்டலாபிஷேகம் சிறப்புற
**வாழ்த்துபவர்கள்**



# லிங்கம் கவுஸ்

கஸ்தூரியார் றோட்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் களபூமி திக்கரை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி கோயில்
குடமுழுக்கு கும்பாபிஷேகம் சிறப்புடன் நடக்க
அன்புடன் வேண்டுகிறோம்.

## நியூ ஆனந்தா ஸ்ரோர்ஸ்

**60, ஆஸ்பத்திரி வீதி,**

**யாழ்ப்பாணம்**

---

கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகிறோம்

## விஜயசுந்தரம் அன் கோ

பழைய சோனகதெரு

கொழும்பு 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best Compliments from :

# Weligama Stores,

General Merchants & Commission Agents for Local Produce.

139, Forth Cross Street,
COLOMBO - 11.
☎ 23271, 549319

*With best Compliments*
*from :*

# V. Manickam & Brother,

General RICE Merchants & Commission Agents
for LOCAL PRODUCE.
34, Forth Cross Street,
COLOMBO - 11.

T'grams ; "THAVAYOGA"

T'phones : 23986 - 23408

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு :

நிமலன்ஸ் ருன்ஸ்போட் சேர்விஸ்
ஆவரங்கால் புத்தூர்.

அன்பளிப்பு

விஜிதா ருன்ஸ்போட் சேர்விஸ்
நீர்வேலி, புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments*
*from :*



# Gnanamalar Stores,

**102/2, Wolfendhal Street,**
**COLOMBO - 13.**
**No. 436929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு :

காரைநகர்
அன்பர்

# க. சிவபாதம்,

பரந்தன்.

*With best Wishes*

*from :*


# Woodlands Hotel,

192, Forth Cross Street,

COLOMBO - 11.

☎ 27451

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூல மூர்த்தியின் எழில்மிகு விமானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காரைநகர்

# திக்கரை முருகன் திருத்தல வரலாறு

யாழ்ப்பாண நாட்டின் மேற்பால் அமைந்து கவினுடன் விளங்குவது காரைநகரென்னும் அருட்பெரும் பதியாம். உபய சிதம்பரமாகிய ஈழத்துச் சிதம்பரத்தை தன்னகத்தே கொண்டு ஐந்தொழில் புரியும் அம்பலவாணனின் அருட்கடாட்சம் பெற்றதும் இத்திருவூரே. மருதம், நெய்தல் நிலங்களைக் கொண்டு மான்புடன் திகழ்வதும் இவ்வூரே. இப் பெருவூரில் முருகன் அருட்பதிகள் பலவாகும். அவற்றுள் திக்கரை முருகமூர்த்தி ஆலயமும் ஒன்றாகும். வரலாற்றுப் பெருமை மிக்கது இத்திருத்தலம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் வயல் மேட்டில் வேலாயுதம் தோன்றியதாகவும் அந்த இடத்தில் சிறிய கொட்டில் போட்டு வெற்றிவேல் வழிபாடு ஆரம்பமாயிற்று. அதன் பின்னர் சிறு ஆலயம் ஒன்று இப்போதைய இடத்தில் நிறுவி அடியார்கள் அக்கால வழக்கப்படி பூசை செய்து போற்றி வந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் (1760 வரையில் இவ்வாலயம் தோன்றியதாக ஊகிக்க இடமுண்டு.

ஏனெனில் கார்த்திகேயப் புலவர் சிறுவனாக இருக்கும்போது அவரை அவரது பாட்டியாராகிய லட்சுமியம்மாள் தங்கள் பூசைக்குரிய சொந்தமாகிய திக்கத்தலத்து முருகப் பெருமானை பூசிக்கும் வண்ணம் புத்திபுகட்டி தானும் பேரனுமாக முருகப் பெருமானை வழிபாடு செய்து உபாசித்து வந்தனர். இதனால் கார்த்திகேயப் புலவர் முருகன் அருட்பார்வை செறிந்து அவர் ஒரு பெரும் புலவராக திகழ்ந்தார்கள். அவர் திக்கரையந்தாதி என்ற வெண்பாக்களை முருகன்மீது பாடியும் உள்ளார்கள். அவருடைய காலம் (1819) ஆகும்.

அவ்வூரில் உள்ள கனகசபை காசிநாதர் என்ற அன்பருக்கு திடீரென அவரது கண்பார்வை மறைந்துவிட்டது. அதனால் அவர் துன்பம் அடைந்தார். அவர் முருகப் பெருமானில் நேர்த்தி செய்து தினமும் கோவிலை வழிபாடு செய்து விரதங்கள் இருந்தார்கள். அதன் பயனாக முருகன் பார்வை வந்தது. இதை நினைத்து கனகசபை காசிநாதர் மிகவும் மனம் மகிழ்ச்சியடைந்தார்கள்.

இதன் பயனாக முருகனுக்கு ஒரு கோவிலை கட்டுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். அவரும் ஊரில் உள்ளவர்களும் சேர்ந்து 1880ல் கோவிலை கட்டி நிர்வாக பொறுப்பை ஏற்றார்கள். அக்கோயிலை மேலும் கற்கால் புதிப்பித்து 1902ம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்தார்கள். பூசைகளும் நித்திய நெய்வேத்தியமும் ஆகம விதிப்படி தினமும் நடைபெற்று வந்தது.

மேலும் கோயிலின் நன்மையை கருத்திற் கொண்டு தன்னுடைய பொருள் உதவியுடன் திருவாளர் சண்முகம் கோவிந்தி, சுந்தரி பேரம்பலம், கணபதி கதிர்காமு, வேலாயுதர் கார்த்திகேசு ஆகியோரின் நிதி உதவியும் சேர்த்துக் கணிச்சாக்கை 15 பரப்பும், மானக்கை 10 பரப்பும் நெற்காணியை வாங்கி 1904ல் கோவில் பேரில் தருமசாதசாதனம் செய்தார்கள். அக்காணியில் விளையும் நெல்லை நித்திய பூசைக்கு எடுத்து வந்தார்கள்.

கனகசபை காசிநாதர் 1925ம் ஆண்டு சிவபதம் அடைந்தார். அதன் பின்பு திரு. சிதம்பரப்பிள்ளை கனகசபை கோவிலின் நிர்வாக பொறுப்பை ஏற்று சிறப்பாக நிர்வாகத்தை நடத்தி வந்தார்கன். அவர் கோயிலை செப்பனிட்டு 1928ல் கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள். அத்துடன் திருவிழாவும் 10 தினங்கள் தொடங்கப்பட்டது. அதன் பின்னர் 1948ம் ஆண்டிலும் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். இவருடைய காலத்தில் இவரே கந்தபுராணம், திருச்செந்தூர் புரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணங்களுக்கும் பயன் சொல்லி விரதங்கள் இருந்து வந்த அறிவு ஆற்றல் உள்ள பெரியாராகும்.

இவர் 1960ல் சிவபதமடைந்தார். அதன் பின்னர் இவருடைய மகன் வைத்திய கலாநிதி கனகர் திருநாவுக்கரசு நிர்வாகத்தை ஏற்றுர்கள். இவருடைய காலத்தில் பல திருப்பணி வேலைகள் நடைபெற்று 1974ம் ஆண்டு யூலை மாதம் 11ந் திகதி வியாழக்கிழமை கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மேலும் இந்தியாவில் இருந்து திருச்செந்தூரில் இருக்கும் அமைப்பைப் போல் ஆறுமுகசாமியை வார்த்து திக்கரை முருகமூர்த்தி கோவிலில் 1975ம் ஆண்டு தை மாதம் 26ம் நாள் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. (அன்பளிப்பு செய்தவர் S. K. பொன்னம்பலம்) இதுவும் திருநாவுக்கரசு காலத்திலே. அவர் 1979ம் ஆண்டு மாசி மாதம் 13ம் திகதி சிவபதம் அடைந்தார்.

இதன் பின்னர் சிதம்பரப்பிள்ளை கந்தையா நிர்வாகப் பொறுப்பை ஏற்றுர்கள். இவரும் பல திருப்பணி வேலைகளைச் செய்தார்கள். மேலும் பல திருப்பணி வேலைகளை செய்வதற்கு திட்டமிட்டு பல அடியார்களை ஒன்று சேர்த்து 1988ம் ஆண்டு மார்கழி மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி கோவில் மண்டபத்தில் சபை ஸ்தாபித்தார்கள். திருப்பணிச்சபையினரால் பல திருப்பணிவேலைகள் நடைபெற்று முருகன்ஆலயம் புதுப்பொலிவு பெற்றுள்ளது. இதன் பயனாக, 1990ம் ஆண்டு தை மாதம் 31ந் திகதி புதன்கிழமை மகா கும்பாபிஷேகம் முருகப் பெருமானுக்கும் மற்றைய பரிவார மூர்த்திகளுக்கும் விமரிசையாக நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை தொடக்கி வைத்த சிதம்பரப்பிள்ளை கந்தையா கும்பாபிஷேகம் முடிந்த அடுத்த நாள் (01-02-1990) வியாழக்கிழமை 10 மணியளவில் அவருடைய உயிர் முருகன் பாதாரவிந்தங்களை சென்றடைந்தது. இதன் பின்னர் கந்தையா மகன் நடராசா நிர்வாக பொறுப்பை ஏற்றுர்கள்.

1980ம் ஆண்டு கோவிலின் நன்மையைக் கருத்திற் கொண்டு வீதிகளைப் பெருப்பிக்க வேண்டும் என்ற நோக்குடன் தெற்குப் பக்கமாக மு. பாலசிங்கம் மூன்றரை பரப்பும் பூந்தோட்டத்திற்கும் வீதிக்கும் மேற்குப் பக்கமாக S. S. ஆறுமுகம் (மூதூர்) 7 பரப்பும் கோவிலின் பேரில் தர்ம சாதனம் செய்தார்கள்.

வே. நடராசா
செயலாளர் திருப்பணிச்சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## காரைநகர் கார்த்திகேயப் புலவர் (1819 - 1898)

இயற்றிய

# திக்கைத் திரிபந்தாதி


சிவஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள்

செயலாளர், தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்.


காரைநகரிலுள்ள களபூமி என்னும் சிறுபிரிவில் அமைந்துள்ளது திக்கரை, இது மருவித் திக்கை எனவும் வழங்கப்படுகிறது. இங்கு கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானுக்கு, கார்த்திகேயப்புலவர் 1864ல் இயற்றியதே திக்கரை திரிபந்தாதி ஆகும். புலவர் அவர்கள் காரைநகரிலே சைவத்திற்கும் தமிழுக்கும் தம் வாழ் நாள் முழுவதும் நற்பணியாற்றியவர். திக்கை முருகனை பாட்டுடைத் தலைவனைக் கொண்டு எழுந்த இவ்வந்தாதியின் ஏட்டுப் பிரதியைப் பதிப்பித்து வெளியிடும் நோக்கத்தோடு யாம் தேடித்திரிந்த வேளை, வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா அவர்கள் தம்மிடமிருந்த ஏட்டைத் தந்துதவினார்கள். இதனை 1985ம் ஆண்டு தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் திக்கையந்தாதி என்ற பெயரில் பதிப்பித்து வெளியிட்டோம், இச்சந்தர்ப்பத்தில் இச்சிறந்த பிரபந்தத்தின் ஆக்கியோனாகிய புலவர் அவர்களைப் பற்றிச் சிந்திப்பதும் பொருத்தமாகும்.

கார்த்திகேய ஐயர் அவர்கள் 1819ம் ஆண்டு முருகேசையர் தம்பதிகளுக்குப் பிறந்தவர். கற்கவேண்டிய நூல்கலையும் புராணேதிகாசங்களையும் கற்றுத்தேறியவர். சில காலம் திக்கை முருகப் பெருமானுக்கு உபாசனை செய்து வந்தவர். இவரது தந்தையாரைப் போன்று இவரும் சிறந்த புலவர். கவிதைத்திறன் மிக்கவர் என்ற காரணத்தால் வரகவி எனச் சிறறபடைந்தவர். இவருடைய கவித்துவ ஆற்றலை மெச்சி கங்காதர சாஸ்திரி என்பவர் இவரது பதினெட்டாம் வயதில் 'புலவர்' என்ற பட்டத்தினைச் சூட்டிக் கௌரவித்தார்.

திக்கரையில் எழுந்தருளி அருள் பாலிக்கும் முருகப்பெருமான் மீது புலவரால்
பாடப்பெற்ற மற்றுமொரு நூல் திக்கை நாயகர் மும்மணிமாலை ஆகும். இது ஏறக்
குறைய 1887க்கு முன் பாடப்பெற்றதாக இருக்கலாம். புலவர் அவர்கள் மேலும் பல
பிரப்ந்தங்களையும் சில நர்டகங்களையும் ஆக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது ஆக்கங்களில் குறிப்பிடத்தக்க மற்றுமொரு நூல் 'திண்ணபுரவந்தாதி,
ஆகும். இதன் மூலம் மட்டும் 1925ல் பதிப்பிக்கப்பட்டது. தற்பொழுது இதன் மூல
மும் உரையும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர் வித்துவான்
ஸ்ரீலஸ்ரீ. காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளின் திருவுளப்பாங்கின்
வண்ணம் தமிழ்ப்பேராசிரியரும் தருமையாதீனப் புலவருமாகிய செஞ்சொற் கொண்
டல் டாக்டர் சொ. சிங்காரவேலன் அவர்களது 'செஞ்சொல் விளக்கம்' என்ற உரை
யுடன் வெளிவருவது காரைநகர் வாழ் சைவ மக்கள் பேணிப் பாதுகாத்துவரும் சைவ
மக்கள் பேணிப்பாதுகாத்து வரும் சைவ மரபிற்குப் பெருமை தரும் விடயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் இடையேயுள்ள சமய இலக்கிய பாரம்பரிய இணைப்புக்கு இவ்வரிய பணி சிறந்ததொன்றாகவுள்ளது.

முருகேச ஐயாது ஆக்கங்களின் ஏட்டுச்சுவடிகளையும் தேடி எடுத்து அவற்றை உரியவாறு அச்சிட்டு வெளியிடுவதற்குரிய ஆக்கபூர்வமான முயற்சிகளில் காரைநகர் தமிழ் வளர்ச்சிக்கழகம் ஈடுபட்டு வருகின்றது. அத்தகைய முயற்சிகளுக்கு காரைநகரின் கண் வாழும் சைவப் பெருமக்கள் உரிய ஒத்தாசையும் ஊக்கமும் வழங்குவதன் மூலம் காலங்காலமாக இங்கு வளர்ந்து வரும் சைவ மரபை பேணிப் பாதுகாக்கும் நற்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது பயனுடையதாகும்,

கார்த்திகேயப் புலவரின் பக்தித் திறனுக்கும் கவிதையாற்றலுக்கும் எடுத்துக்காட்டாக அவர் இயற்றிய திக்கைத் திரிபந்தாதியிலிருந்து சில பாடல்கள் தரப்படுகின்றன.

அடையா தவர்க்கு மருள்வா னசுரரி ருட்கயில் வேற்
படையா தவனென்னை யாண்டருள் செய்திடும் பண்ணவன்கற்
குடையா தவனும் புகழ்திக்கை யானைக் குறித்தவர்க்குக்
கிடையா தவணபொரு ளுண்டோ விங்காய்ந்து கிளத்திடியே 4

ஆண்டலைக் கேதனை வள்ளி மணாள னறுமுகனை
நீண்டலைக் கேதகை வாறெடும் திக்கை யனைநினைப்போர்
மாண்டலைக் கேதமு றுதருள் வானை வணங்கியென்றும்
காண்டலைக் கேதமு ளத் துன்னு வார் வினைக் கட்டறுமே. 13

திருமந் திரமின்றிச் செய்யாதான் முன்னித் தாரணியிற்
றெருமந் திரந்திடு கின்றீரித் துன்பத்தைத் தீரிலரற்
கொருமந் திரத்துட் பொருள்கூறி னோனை யுயர்திக்கையாம்
பெருமந் திரத்தினைப் போற்றியன் போடினிப் போற்றுமினே 17

மலமாய மூன்றையும் மாற்றித் தன் னன்பரை வாழ்விப்ப
னிலமா யறனல் வாயுவா னாகி நிறைந்து நின்றோன்
பலமாய மும்வல்ல சூரன் முதலிய பாதகர் தங்
குலமாய வட்டவன் றிக்கையின் மேவிடங் கொற்றவனே 34

தகையா ரலருண் முலைப்பாலை யுண்டவன் றுவில்கரு
முகையா ரலருந் தடஞ்சூழுந் திக்கையில் வாழ்முருகன்
பகையா ரலருக் கனைப் போற்றி நாளும் பணிபவர்க்கு
நகையா ரலருறை வோனும் புகழநல் குந்திருவே 100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக மகத்துவம்

த. அம்பிகைபாகன்
*ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி*

பிறவிப் பெருங்கடலிலே அழுந்தும் எம்முடைய வினைகளை அறுத்துப் பேரின்பப் பெருவாழ்விற்கு இழுத்துச் செல்ல நிலைக் களனுக விளங்குபவை ஆலயங்கள். ஆலயம் எனக் குறிப்பிடும்போது கோபுரம், திருமதில், திருச்சுற்று முதலான வரையறைகளையுடையதாய் இட வறம்புக்குட்பட்டதென்பதை நாம் உணரலாம். இவ்வாலயத்திற்கு திருமதில், திருச்சுற்று என்பன காணப்பட்ட போதும் கோபுரம் இல்லாதது பெருங்குறையாகும். இக்குறையினைப் போக்க இப்பகுதி மக்கள் முன்வர வேண்டும். இறை வழிபாட்டிற்கென புதிதாக ஆலயங்களை உருவாக்குவதும் உருவாக்கிய ஆலயங்கள் பழுதடையும்போது அவற்றைத் திருப்பணி செய்து மீளப் புதுப்பித்தலும் எமது பண்பாட்டிலே காலம் காலமாக நிகழ்ந்து வரும் பணிகளாகும். இத்தகைய திருப்பணிகளைத் தொடர்ந்து உருப்பெறும் ஆலயத்தில் ஸ்தாபிக்கப்படும் பிம்பத்தில் தெய்வீக சாந்தித்தியம் கொண்டருள வேண்டும் வண்ணம் இறைவனை அவாவி நிகழ்த்தப்படுவதே கும்பாபிஷேகம் எனப்படுகின்ற பெருஞ் சாந்தியாகும். கும்பாபிஷேகத்திற்கான முன்னேடிக் கைங்கரியங்களில் ஈடுபடுவதும், உதவுவதும் பங்கு கொள்வதும் மற்றும் கும்பாபிஷேகம் நிகழ்வதைத் தரிசிப்பதும் சிறந்த பேற்றினை நல்கும் சிவ புண்ணியச் செயல்களாகும்.

திருக்கோயில்களில் நிகழும் கிரியைகள் நித்திய கிரியைகள், நைமித்திய கிரியைகள், காமியக் கிரியைகள் என மூவகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. நித்திய கிரியைகளில் நடைபெறும் குறையினைப் போக்க நைமித்திய கிரியைகள் செய்யப்படுகின்றன. நைமித்திய கிரியைகளில் ஏற்படும் குறைகளைப் போக்கிக் கொள்ளச் செய்யப் பெறுவன பெரும் சாந்தியாகிய கும்பாபிஷேகம். எனவே திருக்கோயில் வழிபாட்டு முறையில் கும்பாபிஷேகம் மிகவும் முக்கியத்துவம் பெற்ற கிரியையாக விளங்குகிறது. கும்பாபிஷேகம் நிகழவிருக்கும் ஓர் ஆ[illegible] நிலைகளிலும் புதுப்பொலிவு பெற்று விளங்குவதோடு ஆலயச் சூழலும் தூய்மை அடைகின்றது. எனவே கும்பாபிஷேகத்தினை தரிசிக்கும் அடியவர்களின் உள்ளமும் புனிதமடைவது குறிப்பிடத்தக்கதாகும். அகப் புறத் தூய்மையை ஏற்படுத்த இந்நைமித்தியக் கிரியைகள் உதவுகின்றன.

கும்பாபிஷேகத்திற்குரிய சாதனங்களுள் மண்டபம், கலசங்கள், குண்டங்கள், நெய், சமித்து, தானியம், அன்னம், நைவேத்தியம் போன்றவை மிகவும் இன்றியமையாதவை. கும்பாபிஷேகத்தின்போது இறைவன் சோதிப் பிழம்பாகக் குண்டத்தில் எழுந்தருளுவான். ஒளியாய் கட்புலனுக விளங்கும் கடவுளை நீராகக் கண்ணுக்கும் புலன்களுக்கும் உருக்கொள்ளச் செய்து அந்நீரில் பிறவி வினைகளின் வெப்பத்தைப் போக்கும் இயல்பினதாய மந்திர ஒலிகளால் கலந்து நிற்கச் செய்வதே கடஸ்தாபன வழிபாடு. இங்ஙனம் கடத்தில் விளங்கும் இறைவனை திருவுருவத்தில் விளங்கச் செய்வதே கும்பாபிஷேகம். ஆலயத்தில் கும்பாபிஷேகத்தின்போது தெய்வ மூர்த்திகள் எழுந்தருளும் கர்ப்பக்கிருகம், மற்றும் ஏனைய இடங்களின் மேல் விளங்கும் விமானம், கோபுரம் ஆகியவற்றுக்கும் அபிஷேகம் நிகழ்த்தப்படுகின்றன. விமானம் கோபுரங்களுக்குச் செய்யும் கும்பாபிஷேகம் மக்கள் ஆலயங்களையும் அரனெனத் தொ வதற்காகச் செய்யப்படுவதாகும்.

கும்பாபிஷேக கிரியை பிறிதோர் வகையில் இயற்கை வழிபாட்டின் சிறப்பினையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறைவனை வழிபட நிறுவப்படும் மண் அம்சம் வாய்ந்த விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்காக விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்தும் கிரியைகளே கும்பாபிஷேகக் கிரியையின் உயர்நிலையைக் குறிக்கின்றன

கும்பாபிஷேகக் கிரியை நிகழ்வதற்கு அமைக்கப்படும் யாகசாலை ஆகாயவெளியில் அமைவது குறிப்பிடத்தக்கது இங்கு அமைக்கப்படும் குண்டங்களில் அக்கினியும் வாயுவும் ஒன்றிணைந்து விளங்குகின்றன. யாகசாலையின் மையத்தில் விளங்கும் வேதியில் அமைவது கும்பமாகும். அதில் நீர் நிறைந்து விளங்கும். இவ்வாறு பஞ்ச பூதங்களின் ஒடுக்கம் இறுதியில் பூமி அம்சம் வாய்ந்த திருவுருவத்தில் நிறைவுறுகின்றது. திருவுருவத்தை கும்ப நீரால் அபிஷேகம் செய்த மாத்திரத்தே அது இறை அம்சத்துடன் தெய்வீகப் பொலிவு பெற்று வழிபாட்டிற்கும் உபசாரத்திற்கும் உரியதாக விளங்குகின்றது.

கும்பாபிஷேக கிரியையின் பின்னர் இறைவன் ஆலயத்தில் சாந்தித்தியம் பெற்று அடியவர்களின் பக்திக்கு உரியவனுகின்ருன். இறைவனுக்குப் பல்வகை உபசாரங்களும் அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், அர்ச்சனை, தோத்திரம் போன்றவையும் முறையாக இடம் பெறுவன. இறைவனுக்கு நிகழும் உபசாரத்திலும் பஞ்சபூத அம்சங்களே விரவியுள்ளன. சந்தனம், பழம், புஷ்பம் போன்றவை கொண்டு நிகழ்வது பார்த்திப உபசாரமாகும். இவை மண்ணோடு தொடர்புடையன. பால், தயிர், தீர்த்தம் போன்றவை நீரின் உபசாரமாக அமைவன. தீபம், நவரத்தினம் போன்றவை ஆக்னேய உபசாரம். அக்கினியின் தொடர்பைச் சுட்டுவன. தூபம், சாமரை போன்றவை வாயு உபசாரங்களாவன. மணி, கானம், வாத்தியம் முதலியன ஆகாய சம்பந்தமான உபசாரகளாகும் எனவே இறைவனுக்கென வழங்கப்படும் அனைத்து உபசாரங்களும் ஐம்பூத ஆக்கமான விளங்குகின்றன.

இயற்கை வழிபாட்டோடு தொடர்புறும் இத்தகைய கும்பாபிஷேகத்தின் மந்திரம், கிரியை, பாவனை ஆசாரியனது கிரியை வழியால் சிறப்படைகின்றன. மூர்த்தி விசேடத்தை உண்டாக்க இவை பெரிதும் உதவுவன. கும்பாபிஷேக ஒழுங்குகளுக்கு சிவாசாரியரே பெரிதும் பொறுப்பானவர். கும்பாபிஷேக வேளையில் அமைதி, ஒழுங்கு, தூய்மை ஆகியவற்றை நிலைபெறச் செய்வதில் சிவாச்சாரியாருக்குப் பெரும் பங்கு உண்டு. ஆலயத்தின் பரிபாலகரும் இதற்குத் துணையாக விளங்குதல் வேண்டும்.

மந்திரம், கிரியை, ஜபம், தியானம், ஹோமம், பாராயணம் முதலியவைகளால் பொலிவு பெற்று நிகழும் கும்பாபிஷேகக் கிரியைகளினுல் ஆலயத்தில் தெய்வீக சாந்நித்தியம் ஏற்படும். இதனுல் மக்கள் ஞானம் கைவரப் பெற்று நலமுடனும் செல்வச் சிறப்புடனும் வாழ்வர். கிராமத்திலும் உலகத்திலும் அமைதியும் சீரும் சிறப்பும் மேலோங்கும். நித்திய நைமித்தியங்கள் நடைபெற்றுவரும் ஆலயத்தில் விமானம், கோபுரம், மண்டபம், பிரகாரம், ஆலய விக்கிரகங்கள் ஆகியவற்றில் எவையேனும் பழுதடைந்தால் பாலஸ்தானம் செய்து முன்போல அழகாகவும் உறுதியாகவும் அமைத்து பிரதிஷ்டை என வழங்கப்படுகின்றது. இவ்வாருன புனராவர்த்தன ஜிர்ணேத்தாரண அஷ்ட பந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் காரைநகர் திக்கரை முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் சுக்கில வருஷம் தை மாதம் 18ஆம் நாள் (31-91-1990) புதன் கிழமை உத்தரட்டாதி நட்சத்திரமும், பஞ்சமித் திதியும், சித்த யோகமும் கூடிய சுப தினத்தில் காலை 9.16 மணி முதல் 10 46 வரையுள்ள மீன இலக்கின சுபமுகூர்த்தத்தில் வள்ளி தேவசேஞ சமேத ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுக்கும், ஸ்ரீ சண்முகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் இனிது நிறைவேறியது இக்கும்பாபிஷேகத்தைக் காண்பதற்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்து பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் வந்திருந்தனர். பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ. இ. சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் ஏனைய கும்பாபிஷேக சிவாச்சாரியார்கள் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தி முடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேக வைபவத்தைத்தொடர்ந்து நல்லை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞான சம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் கும்பாபிஷேகத்தின் மகிமை பற்றி அருளுரையும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களின் ஆசியுரையும் இடம்பெற்றன. கும்பாபிஷேகத்திற்கு வந்த அடியார்கள் கும்பாபிஷேகத்தைக் கண்டுகளித்த மனநிறைவோடு அருளுரையையும் ஆசியுரையையும் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்த மனநிறைவோடு வீடு திரும்பினர்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து நிகழ்வது மண்டலாபிஷேகம். கும்பாபிஷேகம் செய்த பலனை அடையும் பொருட்டு இன்றியமையாது செய்யப்படுவது மண்டலாபிஷேகமாகும். ஒரு மண்டலம் 45 நாட்களைக் கொண்டது கும்பாபிஷேகம், மகாபிஷேகம் ஆகியவற்றால் தெய்வீகப் பொலிவு பெற்ற கோயில்களில் நித்திய பூசைகள் எத்தகைய தடங்கலுமின்றி ஒழுங்காக நிகழ்த்தப்பட்டால்தான் கும்பாபிஷேகத்தினால் எமக்குப் பூரணமான பயன் [illegible]தாகும் எமது ஆலயத்தைப் பொறுத்த வரை சகல சிறப்புக்களும் அமைந்த போதிலும் கோபுரம் இல்லாதது ஒரு குறையாகவே உள்ளது. அக்குறையை உணர்ந்த மக்கள் அதனை அமைப்பதற்கு உணர்ந்து ஒரு சபையை உருவாக்கியுள்ளனர். அச்சபை கோயிற் கோபுரத்தை மிக விரைவில் அமைக்க சகல வழியிலும் ஒத்துழைப்பு நல்குவது அத்தியாவசியமானது

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"


தேவர் குறளுந் திருநாள் மறைமுடியும்
மூவர் தமிழும் முனிமொழியுங் – கோவை
திருவாசகமுந் திருமூலர் சொல்லும்
ஒரு வா சகமென் றுணர்.

முதல் தரமான யானைமார்க் குளிர்பானங்களுக்கு

ஆ.ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ்

(உரிமையாளர்: ச. க. பாலசுப்பிரமணியம்)

162, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

ஸ்தாபன விநியோகத்தர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

உ

# BHAVITHIRA

48 KASTURIYAR ROAD,
JAFFNA.

ஒன்றாய் ஆனாய் ஒளியாய் வெளியாய்
குன்றாய் குருவாய் குகனாய் குமரராய்
அகன்றாய் இன்றாய் அன்பாய் இளையாய்
மன்னாய் மணியாய் மலிந்தாய் (திக்) கரையே

★

துன்பம் துடைக்க வருவார்க்கு உந்தன்
அன்பைக் காட்டா மறையா அருளை
என்றும் தருவாய் குன்றுக் குமரா
தோன்றித் தொடட்ட திக்கரை தூதா

நாராஜண சுவாமிஜி


"வேலுண்டு வினையில்லை"

கும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம் இனிது நிறைவேற
வாழ்த்துபவர்கள்

# பவித்திரா

48 கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்பாபிஷேகக் கும்பங்கள் உலாவரும் காட்சி

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
*தலைவர் இந்து நாகரிகத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

திருக்கோயில்களின் தலைவாயிலில் வானளாவ உயர்ந்து விளங்கும் கோபுரங்கள் தூலலிங்கம் என்ற சிறப்புப் பெறுவன. கோயிலின் கம்பீரத் தோற்றத்திற்கும் வனப்பிற்கும் கோபுரங்களே காரணமாகின்றன. 'கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களாற் பயனென்' என்ற நாவுக்கரசரின் வாக்கு கோபுரத்தின் மகிமையைக் கூறுகின்றது. கோபுரத்துடன் கூடி விளங்கும் கோயில்தான் எல்லா நிலைகளிலும் நிறைவு பெற்றதொன்றாக அமையும். எனவே கோபுரம் கோயில்களுக்குரிய இன்றியமையாத அங்கமாக விளங்குகின்றது. கலைச்சிறப்பும் தத்துவ மகிமையும் கொண்டு மிளிர்வன கோபுரங்கள்.

திருக்கோயிலில், கர்ப்பகிருகம் விமானம், மண்டபங்கள், பிராகாரம் போன்ற பல்வகை அம்சங்களும் சிறப்படைவதற்குத் தலைவாயிலில் சிறந்து விளங்கும் கோபுரமே துணைசெய்கின்றது. எனவே இக்காரணம் பற்றியே பண்டைய நாட்களில் மன்னர்கள் தாம் எழுப்பிய கோயில்களிற் கோபுரங்களையும் சிறப்பாக அமைத்தனர். கோபுரத்தின் அமைப்பிலே சிறந்ததொரு தத்துவம் உள்ளது. பூமியிலே ஆழ்ந்தும் அகன்றும் ஆகாய வெளியிலே உயர்ந்தும் விளங்குவது கோபுரமாகும். மூலத்தானத்துள் அமைந்து விளங்கும் சூக்குமலிங்கம் நித்திய நைமித்தியக் கிரியைகள் நிகழும்போது அடியார்கள் உள்ளே நின்று வழிபடுவதற்குரியது. சூக்குமலிங்கம் ஒரு கோயிலில் எழுந்தருளி அருள்பாலிக்கும் மூர்த்தியை அறிந்து கொள்ள ஏதுவாகின்றது. கொடிமரத்தடியில் அமைந்து விளங்குவது பத்திரலிங்கம் ஆனால் தூலலிங்கமெனச் சிறப்புப் பெறும் கோபுரமோ துலாம்பாரமாகத் தூரத்தே நின்று கைதொழுது வழிபடுவதற்கும் வசதிக் குறைவான காலங்களில் கோயில் தரிசனம் செய்ய முடியாத வேளைகளில் வழிபடுவதற்கும் பெருந்துணை புரிவது இவ்வாறு சகல நிலைகளிலும் சிறப்புப் பெறும் கோபுரத்தை ராஜகோபுரம் என்றழைப்பர். இறைவனது சாந்நித்தியம் கோபுரத்திலும் நிறைந்து விளங்கும்.

தென்னாட்டிலும் ஈழத்திலும் காலங்காலமாக எழுச்சி பெற்றுவரும் திருக்கோயில்களில் கோபுரங்கள் எமது பண்பாட்டுச் சின்னமாக விளங்கி உலகளாவிய நிலையில் எமது பண்பாட்டுப் பெருமையை பறைசாற்றி நிற்கின்றன.

தமிழ் நாட்டிலே உள்ள கோயில்களில் கோபுரங்கள்தான் அடியார்களை வரவேற்று நிற்கின்றன. கோபுரத்தை தரிசித்த மாத்திரத்தில் பரம்பொருளின் தெய்வீகப் பெருமை எமது உள்ளங்களில் குடிகொண்டு விடுகின்றது. கோயில் என்றால் கோபுரமே எனக் கூறக்கூடிய அளவுக்குத் தமிழகத்தில் உள்ள கோயில்கள் தோறும் வானளாவ ஓங்கி நிற்கும் வகையில் கோபுரங்கள் எடுக்கப்பட்டுள்ளன எனவே கோயில் எழுந்த சூழலில் தெய்வீக மணங் கமழச் செய்வனவாக இவை விளங்குகின்றன

கோயிலின் வாயிலை அலங்கரித்து நிற்கும் கட்டட அமைப்பாகிய கோபுரத்தின் வரலாறு சுவையானதொன்று தமிழகத்திலே கோயிற் கட்டடக்கலை சிறப்பாக பல்லவர் காலத்திலிருந்துதான் மேன்மையடைகின்றது. மிகவும் தொன்மையான கோபுரம் எனக் குறிப்பிடத்தக்கவை பல்லவ மன்னன் இராஜசிம்மன் எடுத்த கோயில்களில் தான் காணப்படுவதாக அறிஞர் கருதுவர் காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் மாமல்லபுரத்தில் எழுந்த கடற்கரைக் கோயிலிலும் மிகச் சிறிய கோபுரங்கள் உள்ளன. இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலக் கோயிற் கட்டிட அமைப்பில் நாம் காணும் சிறப்பம்சம் யாதெனில், கருவறையை அலங்கரிக்கும் விமானம் உயரமாகவும், கோபுரம் மிகச் சிறியதாகவும் அமைந்து விளங்குவன, வாயிலில் மேற்பகுதியில் ஒரு சிறிய துவாரசாலை மட்டும் காணப்படக்கூடியது.

பல்லவ மன்னர்களையடுத்து கோயிற் திருப்பணிகளில் தம்மைச் சிறப்பாக ஈடுபடுத்திய பேரரசர்கள் நிர்மாணித்த கோயில்களில் கோபுரங்கள் விமானங்களைவிடச் சிறியவையாகக் கட்டப்பட்டன. சில கோபுரங்களின் கீழ்ப்பகுதி கருங்கல்லாலும் மேற்பகுதி செங்கல்லாலும் கட்டப்பட்டு விளங்குகின்றன. சோழர் காலத்தில் இராஜராஜ சோழனின் காலம் சிறப்பு வாய்ந்தது இவன் எடுப்பித்த தஞ்சைப் பெருங்கோயில் ஒரு புதிய மரபைக் கொண்டு விளங்கியது. இவனுடைய காலத்திலும் கருவறையின் மேல் உள்ள விமானம் உயர்த்தியே கட்டப்பட்டதாயினும் அதன் முன்னர் இரண்டு கோபுரங்கள் உள்ளன. வெளியில் உள்ளது உயரமாகவும் உள்ளே உள்ளது உயரக்குறைவாகவும் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது இக்கோயில் கோபுரங்கள் திருவாயில் என்ற பெயர் பெற்றன. விமானத்தின் முன்னர் இரு கோபுரங்களை அமைப்பது சோழர் காலத்தில் முக்கிய மரபாக இருந்தது. இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து கோயிலின் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப்பெறும் மரபும் தொடங்கியது. எடுத்துக் காட்டாக தில்லையில் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் 12ம் 13ம் நூற்றாண்டில் கட்டப்பட்டன. இவை ஏழு நிலைக் கோபுரங்களாகக் கட்டப்பட்டன. எனவே எழுநிலைக் கோபுரம் என்ற சிறப்புப் பெயர் ஏற்படலாயிற்று. அடிப்பகுதி அகன்று பரந்து விளங்கிய நிலையில் இக்கோபுரங்கள் சுமார் 100 அடி உயரம் எழுந்தன.

இத்தகைய கோபுரங்களில் கீழ்ப்பகுதியில் பல பரிவார தெய்வங்களின் உருவங்களும் மேற்பகுதியில் முக்கிய தெய்வத்தின் பல தோற்றங்களும் சிற்பங்களாக இடம் பெற்றுள்ளன. கோபுரத்தின் நுழைவாயிலின் இருமருங்கும் உள்ள நிலைக்கால்களில் பரத நாட்டியக் கரணங்கள் சிற்பங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

சோழர் காலத்தையடுத்து தமிழகத்தை யாண்ட விஜயநகரப் பேரரசு மன்னர்கள் கோபுரங்களையமைக்கும் பணியில் பல சிறப்பம்சங்களைப் புகுத்தினர். இவர்கள் புகழ் வாய்ந்த கோயில்கள் அனைத்திலும் மிக வுயர்ந்த கோபுரங்களை எழுப்பினர். கோயிலின் வாயிலை இத்தகைய வானளாவ எழுந்த கோபுரங்கள் பெரும் வனப்பையும் கம்பீரத்தையும் எடுத்துக் காட்டின காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை, திருவரங்கம், மதுரை ஆகிய இடங்களில் இவைபோன்ற கோபுரங்கள் எழுந்தன. விஜய நகர மன்னர் வரிசையில் கோபுரப் பணியில் சிறந்து விளங்கியவர் கிருஷ்ண தேவராயர் ஆவார். இவர் 180 அடி உயரத்திற்கு மேல் கோபுரங்களை எழுப்பியவர். இவரது கோபுரங்கள் ராயர் கோபுரம் என்று அழைக்கப்படலாயிற்று. எனவே இக்காலப் பகுதியைக் கோயிற் கட்டிடக்கலை வரலாற்றில் கோபுர காலம் எனக் குறிப்பிடலாம். இம் மன்னர்களது பிரதிநிதிகளாகிய நாயக்க மன்னர்களும் உயர்ந்த கோபுரங்களை எழுப்பியுள்ளனர். திவமலை மன்னர் மதுரையில் எழுப்பிய கோபுரத்தில் எண்ணற்ற அழகிய சுதை உருவங்களை வைத்து தனது தெய்வீக பக்தியை வெளிப்படுத்தியுள்ளான். இன்றும் இத்தகையகோபுரங்கள் காண்போரின் உள்ளங்களில் தெய்வீகப் பெருமையையும் வரலாற்றுப் புகழையும் உணர்த்தி நிற்கின்றன.

கோபுரங்கள் புராண இதிகாசகதைகளைக் கட்புலனுக்கும் வெற்றி வாய்ந்தன. அவற்றில் இடம்பெறும் சிற்பங்கள் தெய்விக வரலாறு, கலை, தத்துவப் பொருள் ஆகியவற்றை விளக்கி நிற்கின்றன. கோபுரங்கள் மூன்று, ஐந்து, எழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று ஆகிய நிலைகளைக் கொண்டு விளங்குவன. கோபுரத்தின் முடியில் இத்தகைய எண்ணிக்கையைக் கொண்ட கலசங்கள் அமைத்து கும்பாபிஷேகங்கள் நிகழ்த்தப்படுகின்றன. கோபுரங்களில் பெரும்பாலானவை ஐந்து மாடங்களாகிய நிலைகளைக் கொண்டது. தலைவாசலும் ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடங்களுமாய ஆறு அமைப்புக்களும் உடம்பின் ஆறு ஆதாரங்களாகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகியவற்றைக் குறிப்பனவாகும். இந்துக் கோயில்களை அலங்கரிக்கும் கோபுரங்கள் ஆகமங்கள் விதித்துக் கூறும் திருக்கோயில் அமைப்பின் பூரணத்துவத்தையும் பெருமையையும் எடுத்து இயம்புகின்றன.

மதுரை ஸ்ரீ மீனுக்ஷியம்மன் ஆலயத்தின் கோபுரங்கள் வரலாற்றுப் புகழோடு கலைச் சிறப்புப் பெற்று விளங்குகின்றன. அம்பிகையின் ஆலயத்திற்கு முன் அமைந்து விளங்கும் கோபுரம் எழுநிலைக் கோபுரமாகும் 740 சுதை விக்கிரகங்களைக் கொண்டது. ஏறக்குறைய 117 அடி உயரமுள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதி 78 அடி நீளமும் 38 அடி அகலமும் கொண்டது. எண்ணற்ற கலையெழில் கொண்ட சிற்பங்களினுல் இது 'சித்திரக் கோபுரம்' என அழைக்கப்படுகின்றது. இக்கோயிலின் நாற்புறமும் நான்கு கோபுரங்கள் அலங்காரத்துடன் காட்சி தருகின்றன. ஒவ்வொன்றும் ஒன்பது நிலைகளைக் கொண்டது. இப்பிரதான கோபுரங்களுள் தென்புறத்தில் உள்ள கோபுரமே உயரத்தில் கூடியது. நிலமட்டத்திலிருந்து 160 அடி உயரமுள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதி 108 அடி நீளமும் 67 அடி அகலமுமுடையது. ஏறக்குறைய 1511 சுதைச் சிற்பங்கள் தெய்விகப் பெருமைகளை விளக்கி நிற்கின்றன. மேற்குக் கோபுரம் 154 அடி உயரமானது. இதன் அடித்தளம் 101 அடி நீளமும் 63 அடி அகலமுமாகும். ஏறக்குறைய 1124 சுதைச் சிற்பங்கள் உள்ளன. வடக்குக் கோபுரம் மொட்டைக் கோபுரம் என அழைக்கப்படுகின்றது. கிழக்குக் கோபுரம் மாறவர்மன் சுந்தர பாண்டியனுல் நிர்மாணிக்கப்பட்டதாகும் (1216 — 38). எனவே இதனை சுந்தர பாண்டியன் கோபுரம் என அழைப்பர். இக் கோபுரம் 153 அடி உயரமும், அடித்தளம் 111 அடி நீளமும் 65 அடி அகலமும் கொண்டு விளங்குகின்றது. ஏறக்குறைய 1101 சுதைச் சிற்பங்கள் இக்கோபுரத்தை அலங்கரிக்கின்றன. இவ்வாறு கோபுரத்தின் சிறப்புக்களை அறிய மதுரை ஸ்ரீ மீனுக்ஷி அம்மையின் ஆலயம் சிறந்ததொன்ருக விளங்குகின்றது.

அண்மைக் காலத்தில் கோபுர வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. ஸ்ரீரங்கம் இராஜ கோபுரமாகும். ஆசியாவிலேயே உயரமான கோபுரமென புகழத்தக்க பெருமை கொண்டது. அடியார்களைக் கருவியாக்கி அரங்கன் நிகழ்த்திய சாதனை என்று அனைவரும் பெருமைப்படத்தக்க கோபுரமிதுவாகும். ஸ்ரீ ரங்கம் தெற்கு வாசலில் உள்ள இக்கோபுரம் பதின்மூன்று நிலைகளைக் கொண்டது. கோபுரம் 236 அடி உயரம் கொண்டது. கிழக்கு மேற்கில் $165\frac{3}{4}$ அடி அகலமும் தெற்கு வடக்கில் 97 அடி அகலமும் கொண்டது. பதின்மூன்று செம்புக் கலசங்களில் ஒவ்வொன்றும் $10\frac{1}{2}$ அடி உயரமும் $5\frac{1}{2}$ அடி பருமனும் 135 கிலோ கிராம் எடையும் கொண்டது. 1979 மே மாதம் முதல் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக ஒவ்வொரு நாளும் சுமார் இருநூறு கலைஞர்களும் தொழிலாளர்களும் இணைந்து உழைத்து இவ்வரும் பெரும் திருப்பணியை நிறைவேற்றியுள்ளனர். இத்தகைய விபரங்கள் திருக்கோயிற் கோபுரத்தின் பெருமையினை எமக்கு அறிவுறுத்துகின்றன.

கோபுர அமைப்பில், கர்ப்பக்கிருக அளவுக்கும் திருக்கோயிலின் நீள அகல உயரங்களுக்கும் பொருத்தமாகவே திருக்கோபுரம் அமைய வேண்டுமென்பது சிவாகம விதி. கோபுர நிலையில் இரு அமைப்புக்கள் உள்ளன. கோபுரத்தின் நான்கு மூலைக் கோணங்களும் நேர்கோடாக அமைவது ஒருவகை. அம்மூலைக் கோணங்கள் நேர் கோட்டிலமையாது உள்ளே சற்று வளைந்து அமைவது இன்னொரு வகை. திருக்கோயிலின் தன்மைக்கும் வளத்திற்கும் ஏற்ப கோபுரங்களின் உயர அளவுகள் அமைவதும் குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திலே ஊரின்கண் வாழும் மக்களுக்கு சமயஉணர்வைத் தூண்டவல்ல கோபுரங்கள் ஆலயங்கள் தோறும் எழுந்ததைப் போன்று ஈழநாட்டின் கண்ணும் ஆலயங்கள் தோறும் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. திருக்கேதீச்சுவரம், கொழும்பு பொன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னம்பலவாணேசுவரர், மாவிட்டபுரம் கந்த சுவாமிகோவில், நல்லூர்க்கந்தன் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில், நயினை நாகபூசணி, காரைநகர் கருங்காலி முருக மூர்த்தி, வண்ணை வெங்கடவனின் ஆலயம், நாச்சிமார் கோயில் போன்ற ஆலயங்களின் கோபுரங்கள் எழில்மிகு தோற்றத்துடன் காட்சி தருகின்றன. ஈழத்துச் சிதம்பரம் போன்ற பல ஆலயங்களில் கோபுரத் திருப்பணி நடந்தேறி வருகின்றன.

ஆலயத்தில் இறைவனுக்கென கோபுரம் அமைத்தல் எமது பொருளை அருளாக்கும் புண்ணியத் திருப்பணி எனில் மிகையில்லை. கலையைப் பேணும் ஒருவனைக் கலைப் பணியாகவும் அமைகின்றது. அருள் நெறிக்கும் ஆன்ம நெறிக்கும் மக்களை ஆற்றுப்படுத்தவல்ல தெய்வத் திருப்பணி. இத்தகு திருப்பணியில் எமது வாழ்வில் ஒருமுறை யாவது எம்மை ஈடுபடுத்திக் கொள்வதே எமக்குக் கிடைத்த அருட்பேறாகும். காரை நகர் திக்கரை முருகமூர்த்திக்கு மகாகும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்து அருள் வெள்ளம் எங்கணும் பரவிக்கொண்டிருக்கும் இக்வேளையில் எம் பெருமானுக்குத் திருக்கோபுரம் அமைக்கும் திருப்பணியில் நாம் அனைவரும் ஈடுபடத்தக்க நல்லதோரு வாய்ப்புக் கிட்டியுள்ளது. அதனைப் பயன்படுத்தி அத்திருப்பணியில் பங்கு கொள்ளுதல் நம் அனைவரதும் கடமையாகும். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் நல்கும். அத்துடன் எமது வாழ்க்கைக்கு நல்வழி காட்டும் கலங்கரை விளக்கமாகும். இத்தகைய பெருமை பெற்ற கோபுரத் திருப்பணியில் நாம் பங்கு கொண்டு எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரராவோமாக.



## வெற்றிவேல்

வேந்தே நான் அடைந்த வெற்றிக்கெல்லாம் வித்து எது என்பது
எனக்கு விளங்குகிறது. உனது உணர்ச்சியில் ஒருமுகப்பட்ட உள்ளத்தைக்
கொண்டு நான் எதைச் செய்தாலும் அது வெற்றியே. உன்னிடத்து ஒப்ப
டைத்த உள்ளமே வெற்றிவேல்.

கடவுளிடத்து இருப்பதெல்லாம் நம்மிடத்தும் உண்டு. கந்தன் உயிர்
களுக்குச் சேனைத் தலைவன். வேலாயுதத்தைக் கொண்டு அவன் எக்காரியத்
திலும் வெற்றி பெறுகிறான். மனது நம்மிடத்து உள்ள வேல். குவிந்து ஒரு
முகப்பட்டு இது கடவுளைச் சார்ந்திருக்குமானால் இது வெற்றிவேலாய் விடு
கிறது.

வெற்றிவேல் உற்ற துணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகாற்றுப் படையும், ஆறுபடை வீடுகளும்

''அருள்மொழிச் செல்வர்'' கனகசபாபதி நாகேஸ்வரன் B. A. (Hons) M. A.
உதவி விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆற்றுப்படையென்னும் இலக்கிய வடிவம் தமிழுக்குரிய தனிச் சிறப்பான தொன்றாகும் பாணர், பொருநர் விறலியர் கூத்தர் வைரியர் ஆகியோரை ஆற்றுப் படுத்தும் நெறியினின்றும் வித்தியாசமாக அமைவது திருமுருகாற்றுப்படை. ஏனைய ஆற்றுப்படைகள் பொருள் வேண்டி மன்னர்களிடத்தே ஆற்றுப்படுத்தும் மரபிலமைந்து காணப்பட திருமுருகாற்றுப்படை மட்டும்முருகக்கடவுள் வீற்றிருக்கும் இடங்களிற் சென்று அவனருளைப் பெற்று மீள்கின்ற முருகனடியான் ஒருவன் முருகன் அருளைப் பெறுதற்குப் பக்குவம் வாய்ந்த ஒருவனை வழியிலெதிர்ப்பட்டுத்தான் சென்று அருள்பெற்ற வரலாற்றை அவனுக்கு எடுத்துக்கூறி அவனையும் முருகன் பாற் சென்று அவனருளைப் பெறுமாறு செலுத்துவதாக வழிகாட்டுவதாக அமைந்துள்ளது திருமுருகாற்றுப்படை.

'அகவற் பாவால் விறலி பாணர்
கூத்தர் பொருநர் நால்வருளொருவர்
பரிசிற்குப் போவாரைப் பரிசு
பெற்று வருவாராற்றிடைக் கண்டு
தலைவன் கீர்த்தியுங் கொடையுங் கொற்றமும்
அறைவ தாற்றுப் படையாகும்மே''

என்னும் இலக்கணம் நோக்கற்பாலது.

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்) திருவாவினன்குடி, திருவேரகம் (சுவாமிமலை) குன்றுதோறாடல் பழமுதிர்சோலை (பழநி) என்பன ஆறுபடை வீடுகளாகும்.

திருமுருகாற்றுப்படையினை இயற்றியவர் நக்கீரதேவநாயனாராவார். முருகக்கடவுள் குற்றமில்லாத கற்பினையுடைய தெய்வானையாரின் கணவர் முருகக்கடவுள் இடைவிடாது ஒளி செய்கின்ற திருமேனியை யுடையவர், தம்மை அடைந்தாரது தீவினையைப் போக்கும் வலியதாள்களுடையவர், இடியை ஒத்த வலியும் பகைவரை அழித்த ஆற்றலுமுடைய கைகளையுடையவர்.

பெருமைபெற்ற முருகக்கடவுளின் திருவருளைப்பெற விரும்புகின்றவர்களாயின் அவன் எங்கு உறைவான் என நீ கேட்பாயாயின் அதனை யான் கூறுவேன் கேள் மதுரை மாநகரின் கோபுர வாயிலில் வெற்றிக்கொடி அசையும். வரிந்து கட்டப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்றித் தொங்கும். இவ்வகை அழகுவாய்ந்த மதுரைக்குத் தென்மேற்கில் திருப்பரங்குன்றம் என்னும் கோயிலில் முருகக்கடவுள் எழுந்தருளியிருப்பார். முருகப்பெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் ஆறுபடைவீடுகளில் முதற்கண் நக்கீரரால் சிறப்பித்துக் கூறப்பெற்றது திருப்பரங்குன்றம். சங்ககாலத்திலே சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய இத்தலம் பாண்டி நாட்டுப் பாடல் பெற்ற பதினுன்கு தலங்களில் முதன்மைபெற்று விளங்குகிறது திருப்பரங்குன்றம் என்ற சொல் அழகிய பரம் பொருளை இறைவனைக் கொண்ட மலை என்று பொருள்படும். முருகவேளுக்கே சிறப்பாகவுள்ள மற்றத் தலங்களிலும் திருப்பரங்குன்றம் முருகனுக்கும் சிவனுக்கும் பொதுவாக உள்ளமை கருதியும் தம் நகருக்கு அருகில் உள்ளமை கருதியும் நக்கீரரால் முதற்கண் வைத்துப் பாடப்பட்டது. அத்துடன் நக்கீரர் பூதத்தால் பரங்குன்றம் உள்ள குகையின் கண் சிறைவைக்கப்பட்டு அக் குகையிலிருந்து முருகக்கடவுளைப் பாடத் தொடங்கினராதலின் முதலாவதாக அக் குகை பொருந்திய குன்றின் கண் எழுந்தருளியுள்ள கடவுளைப் பாடினுரென்றுங் கொள்ளலாம்.

குன்றின் அடிவாரத்தில் முருகனது கோயில் உள்ளது. தெய்வானையைத் திருமணம் செய்து கொண்டதும் இத் திருப்பரங் குன்றத்தில் தான். எனவே முருகன் இங்கு மணவாளக் கோலத்துடன் காட்சி தருகிறுர் பங்குனி உத்தர நன்னுளிலே தெய்வானை திருமணம் நிகழ்ந்ததாகக் கருதி இவ் விழாவைத் திருப்பரங் குன்றத்திலே மிகவும் சிறப்பாகக் கொண்டாடி வருகிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீர்கொண்ட நக்கீரனைச் சிறை விருத்தவோ
செங்கீரை ஆடி அருளே
திரையெறியும் காலவாய் உகந்தவடி
வேலனே
செங்கீரை ஆடி அருளே"

என்று பகழிக்கூத்தர் 'திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழில்' பாடியருளுகின்றார்.

திருப்பரங்குன்றம் சங்க இலக்கியமான பரிபாடலிலும், மதுரைக் காஞ்சி கலித்தொகை முதலிய நூல்களிலும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

திருப்பரங்குன்றத்தின் சிறப்பைக் கூற வந்த நக்கீரர் முதலில் மதுரையைப் பற்றி பெருமைபடக் கூறுகின்றார். பேரூரைக் குறிப்பிட்டுப் பின் சிற்றூரைக் குறிப்பிடும் மரபினை நக்கீரர் பின்பற்றித் திருப்பரங்குன்றத்தினைப் பாடுகின்றார்.

முருகப்பெருமான் ஆறுபடை வீடுகளில் எழுந்தருளியிருக்கிறான் என்ற வழக்குக்கு அடிப்படையே திருமுருகாற்றுப் படைதான். அருணகிரிநாதருடைய திருப்பாடல்களிலும் முருகனைப் பற்றிய துதி நூல்களிலும் ஆறுபடை வீடுகளைப் பற்றிய செய்திகள் நிரம்ப வருகின்றன நக்கீரர் ஆறுபடை வீடுகள் என்று குறிப்பிட்டுச் சொல்லா விட்டாலும் ஆறு இடங்களைத் தனியே வைத்துச் சுட்டிக் காட்டுவதால் ஆறுபடை வீடுகள் என்ற அமைப்பு உண்டாயிற்று. வேறுபல இடங்களிலும் முருகன் இருந்தாலும் ஆறு என்ற எண்ணிக்கைக்கும் அவனுக்கும் தொடர்பு மிகுதி ஆகையால் ஆறுபடை வீடு என்ற வழக்கு நிலையாக நின்றுவிட்டது.

திருப்பரங்குன்றத்துக்குத் தேவாரம் உண்டு சிவனும், முருகனும் வேறல்லர் என்று பேசுகிறது கந்தபுராணம். எனவே ஐந்து முகக் கடவுளாலேயே ஆறுமுகக் கடவுள் தோற்றுவிக்கப்பட்ட தத்துவத்தையும் திருப்பரங்குன்றத்துடன் பொருத்திப் பார்த்தல் மிகுந்த சுவையும் நயமும் பயப்பதாகும். ஐந்து முகமுடைய இறைவன் தன்னிலும் சிறந்த மூர்த்தத்தினைப் படைத்தளித்தலே ஆறுமுகவனை அவதாரஞ் செய்யத் திருவுளங் கொண்டார் என்ற கச்சியப்பரது நோக்குக்கு இடந்தந்து நிற்கிறது. திருப்பரங்குன்றம் மேலும் ஒரு சிவத்தலம் என்பதை அதன் பெயரே நன்கு காட்டுகிறது எனக் குறிப்பிடுகின்றார். வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதையர்

"மாடம்மலி மறுகிற் கூடல்" என்று திருமுருகாற்றுப்படை மதுரையைக் குறித்து வருணிக்கிறது. "மாடக்கூடல்" என்று சொல்லுவதுண்டு "நான்மாடக் கூடல்" என்பது மதுரைக்குரிய ஒருபெயர் ஒரு காலத்தில் இறைவன் தன்னுடைய தலையில் இருந்த நான்கு மேகங்களையே மாடமாக நிறுத்தி வருணன் இடையறாது பெய்த மழையிலிருந்து அவ்வூரைக் காப்பாற்றினன் என்று புராணவரலாறு

வீரமும் செல்வமும் சமாதானமும் ஒருங்கேயுடைய மதுரை மாநகருக்கு அருகில் இயற்கையான எழில் நலங்கள் நிறைந்த திருப்பரங்குன்றத்தில் முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கிறான். அடியார்களுக்கு அருள் செய்வதற்காக வந்து அமர்ந்த இடம் ஆகையால் மிக்க விருப்போடு அங்கே தங்கியிருக்கிறான் 'குன்று அமர்ந்து உறைதலும் உரியன்', 'அங்கே உறைதலும் உரியன்' என்று நக்கீரர் சொன்னார். அந்த ஓர் இடம் மாத்திரம் ஆண்டவனுக்கு உரியது அன்று. இன்னும் பல இடங்கள் உண்டு என்பதை அந்தக் குறிப்புக் காட்டுகிறது. திருப்பரங்குன்றத்து முருகனைப் பற்றிச் சொன்ன பிறகு "அதோடு மட்டுமன்று இன்னும் செய்கிறேன்" என்ற குறிப்பை வைத்துப் பேசினார் நக்கீரர்.

திருப்பரங்குன்றுக்கு அடுத்த படியாகத் திருவீரலைவாயின் பெருமையைச் சொல்ல வருகிறார். முருகப்பெருமான் ஆறுமுகங்களோடும் பன்னிரண்டு திருக்கரங்களோடும் எழுந்தருளும் கோலத்தை விரிவாக எடுத்துக் காட்டுகிறார்.

இலக்கியவகையில் நோக்கினாலும், வரலாற்று முறைப்படி பார்த்தாலும் முருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்குரிய ஆறுபடை வீடுகளும் தமிழகத்திலேயே அமைந்திருக்கின்றன முருகன் வள்ளியை மணந்த இடம் திருத்தணிகை தேவயானையை மணந்த இடம் திருப்பரங்குன்றம் சூரனை வென்ற இடம் திருச்செந்தூர் அன்பர்கள் விரும்பும் பழமாய்க் கனிந்து மலைமீது நின்ற இடம் பழநி. அதன் அடிவாரத்தில் அமைந்திருப்பது ஆவிநன்குடி. அப்பனுக்கு அருள்செய்த சுப்பிரமணியன் அமர்ந்துறைவது சுவாமிமலை.

முருகு என்பது தூய தமிழ்ச்சொல் இது மணம், அழகு தெய்வத்தன்மை, முதலிய பல பொருளை உணர்த்தும் 'முருகன்' என்ற சொல் தமிழைத் தவிர வேறு மொழிகட்குரிய சொல்லாக வழங்கப்படவில்லை. எனவே பண்டைத் தமிழர் தம் கடவுளுக்கு இட்டபெயர் 'முருகு' என்பது அது தொல்காப்பியர் காலத்தில் அன் விகுதி பெற்று முருகன் என வழங்கியது

வடமொழி வேதநூல்களிலும், பிராமணங்களிலும் முருகனைப்பற்றிய குறிப்பு இல்லை. வேதகாலத்து ரிஷிகள் முருகனை அறியார் வேதம் தோன்றிய அதே காலத்தில் தென்னகத்தில் முருகவழிபாடு சிறப்புப் பெற்றிருந்தது. பிற்காலத்தில் எழுந்த வடமொழி ஆகமங்களிலும், புராணங்களிலும் மட்டுமே தொழிற்பாட்டைக் காண்கிறோம்.

திருமுருகாற்றுப்படையில் வரும் இரண்டாவது படைவீடு திருச்சீரலைவாய் எனப்படும் திருச் செந்தூர்ஆகும். இது மிகப் பழைய தலம் அலைவாய், செந்தில் என்ற இரண்டு நாமங்களும் சங்ககாலத்து நூல்களில் வருகின்றன. எப்போதும் அலைமோதும் இடம் அலைவாய் முருகப்பெருமான் சூரபன்மனோடு போராடி வெற்றி பெற்ற இடம் திருச் செந்தூர். வென்றிமலைக் கவிராயர் என்ற புலவர் பெருமான் அதற்கு ஒரு புராணம் பாடியிருக்கிறார். பகழிக் கூத்தர் என்ற வைணவர் தம் வயிற்றுவலி தீரப் பெற்று ஒரு பிள்ளைத்தமிழ் பாடினார் குமரகுருபரர் ஐந்து வயதுவரை ஊமையாக இருந்தார். அவரது தாய் தந்தையர் அவரைத் திருச்செந்தூர் ஆண்டவனுடைய சந்நிதானத்தில் கொண்டு போய்விட்டு விரதம் இருந்தனர். அப்பெருமான் திருவருளால் ஊமைத்தன்மை நீங்கினார். நீங்கியவுடன் கந்தர் கலிவெண்பாவைப் பாடும் அருளாற்றல் கிடைத்தது ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் வயிற்றுவலியால் துன்புற்று இந்தத் தலத்திற்கு வந்து புஜங்க தோத்திரம் பாடி அந்த நோயினின்றும் நீங்கினார்.

திருமுருகாற்றுப்படையின்படி, முருகக் கடவுளின் வலிய தோள்கள் பகைவர் மேல் படைக்கலங்களை எறிந்து மார்பைப்பிளந்துவாங்கும்பெருமையுடையவை அவர் திருக்கரங்களிலொன்று ஆகாயத்தே இயங்குகின்ற ரிஷிகளுக்கு அபயங் கொடுக்கும் உயர்த்திய அக் கையின் இணைக்கை பக்கத்தே கிடக்கும் ஒரு கை தொடை மீது ஆடைமேற் கிடக்கும். ஒரு கை யானையை அங்குசத்தால் செலுத்தும் இருகைகள் கரிய கேடத்தையும் வேலையும் வலியாகச் சுழற்றும் ஒருகைமுனிவர்களுக்குத் தத்துவங்களைக் கூறி உரைபிளந்த பொருளை உணர்த்தும் காலத்து மார்பிடத்து விளங்கும் ஒரு கை திருமாலையைத் திருத்தும். ஒருகை பாரவளையொடு சுழலும் ஒருகை இனிய ஓசையுடன் ஆடுகின்ற மணியை ஒலிக்கும் ஒருகை நீல ஆகாயத்தில் மிக்க மழையைப் பொழியும். ஒரு கை இந்திரன் மகளாகிய தெய்வயானைக்கு மணமாலை சூட்டும் இவ்வகை பன்னிருகைகளும் ஆறுமுகங்களுக்குப் பொருந்தும் வகை தொழில்புரிந்தமையும் துந்துபி கொம்பு வாத்தியவெண்சங்கு முழக்கத்துடன் முரசு அதிர ஆர்ப்பரிப்புடன் மிக்க அழகுடைய சீரலைவாய் என்னும் திருப்பதியில் முருகன் எழுந்தருளியிருப்பதே அவரது நிலைபெற்ற குணமாகும்.

திருச்சீரலைவாய் பற்றிய குறிப்பு அகநானூற்றில்

"திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேஎய்" என்றும்

புறநானூற்றில்,

"வெண்டலை புணரி தலைக்கும் செந்தில்
நெடுவேல் நிலைகிய காமர் வியன்துறை"
என்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரத்தில்,

"சீர்கெழு செந்திலும் செங்கோடும்
வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்"

எனவும்,

அப்பர் சுவாமிகள்,

"நன்செந்தில் மேயவள்ளி மணாளற்குத்
தாதை கண்டாய்"

என்று வருமிடங்கள் நோக்கற்பாலன.

திருச்செந்தூரில் மூலமூர்த்தி ஒரு முக முடைய திருக்கோலத்துடன் எழுந்தருளி யிருக்கின்றான் உற்சவ மூர்த்திதான் ஆறு திருமுகமுடையவன் அச்சந்நிதியை ஷண் முக விலாசம் என்று வழங்குவர். வெளியில் திருவிழாவில் எழுந்தாளும் மூர்த்தியாகிய பெருமானை எண்ணியே நக்கீரர் பாடினார் என்று தோன்றுகிறது

நீலத் திரைகடல் அதன் கரையில் அழகுடன் கம்பீரமாகக் காட்சியளிக்கும் கலியுகவரதனின் கோயில் இடையிடையே சோலைகள் நிறைந்த மணல்மேடு. இவை யெல்லாம் ஒருங்கே அமைந்த காட்சி இன்பம் தரவல்ல இயற்கைவனப்பு மிகுந்ததாகும். கச்சியப்ப சிவாச்சாரியார்

"சுரமது கடந்து நீங்கிச் சோதிவே
லுடைய வள்ளல்
விரிபுனல் சடிலத் தண்ணல் மேவு
செங்குன்றூர் நோக்கிப்
பருமணி வயிரம் முத்தம் பலவளம்
பிறவும் ஆழித்
திரையெறி அபிலவாயாகும் செந்திமா
நகரம் புக்கான்"

என்று திருச்செந்தூரின் சிறப்பையும் அங்கு முருகப்பெருமான் வந்து தங்கியதை யும் கந்தபுராணத்தில் அழகாக எடுத் துரைக்கின்றார் ஆதிசங்கரரும், இத் தலச் சிறப்பை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பாடியுள்ளார். திருச்செந்தூர் என்ற சொல் புனிதமும், வளமும் பொருந் திய வெற்றிநகர் எனவும், செல்வமும், வெற் றியும் அருளவல்ல ஸ்தலம் என்றும் பொருள் கூறுவர். திருச்சீரலை வாய்க்கு நாமனூரலைவாய் என மற்றொரு திருநாம முண்டு வியாழபகவானால் பூசிக்கப்பட்ட காரணத்தால் திருச்செந்தூர் பிரசித்தி பெற்ற வியாழக்ஷேத்திரமாகவும் போற்றப் படுகின்றது. முருகப்பெருமனும், தேவர்க ளும் தங்கி ஜெபம் பெற்றதினால் ஜெயந்தி மாநகரம் என்று அழைப்பர். என்பர் வேறு சிலர் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட் டத்தில் நெல்லை நகருக்கு 36 மைல் தென் கிழக்கே திருச்செந்தூர் உள்ளது. கந்தமா தன பர்வதத்தைக் குடைந்து இங்குள்ள ஆலயம் முன்பு அமைக்கப்பட்டது. இதற் குச் சான்றாகப் பிரகாரத்தில் பற்றிக் கொண்ட பெருமாளும், கஜலட்சுமியும் காட்சி தருகின்றனர்.

17ஆம் நூற்றாண்டிலே மதுரையிலிருந்து நாயக்க மன்னர்கள் ஆட்சிபுரிந்த காலம். டச்சு நாட்டுக் கடற்கொள்ளைக்காரர் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் திருச் செந்தூர் கோயிலில் புகுந்து கற்சிலைகளை எல்லாம் உடைத்தனர். தெற்குமுகம் நோக்கி வீற்றிருந்த பஞ்சலோகங்களால் உருவாக்கப்பட்ட ஆறுமுகப் பெருமானின் விக்கிரகத்தைப் தங்கமென நினைத்து அத னைத் தூக்கித் தங்களின் கப்பலுக்குக் கொண்டு சென்றனர். நாயக்க மன்னர்களி டத்திலே வலிமை மிகுந்த கடற்படை இல்லை கப்பல் புறப்பட்டுச் சிறிது நேரத்தில் திடீ ரென பெரும்புயல் அடித்தது. இடியும் மழையும் சேர்ந்துகொண்டன கடல் கொந் தளிக்கவே கப்பலும் தத்தளித்தது. இயற் கையின் இந்தச் சீற்றத்தைக் கண்ணுற்ற கடற்கொள்ளைக்காரர் பயந்து திருவுருவத் தைக் கயிற்றில் கட்டிக் கடலில் இறக்கி விட்டுச் சென்றனர். இயற்கையின் சினம் தணிந்தது ஆலயத்தில் ஆறுமுகப்பெருமா னின் திருவுருவத்தைக் காணாது பக்தர்கள் ஆற்றொணாத் துயர் அடைந்தனர்.

வடமலையப்பிள்ளை என்னும் முருக பக் தருக்குக் கடலிலே தாம் இருக்கும் இடத்தை திருச்செந்தூர் முருகன் கனவிலே தோன்றி அருள்செய்து மறையச் சமுத்திரத்திலிருந்து நடராஜசிலை பின்னர் ஆறுமுகப்பெருமானின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவச் சிலைகளைக் கண்டெடுத்தார் இன்றும் செந்திலாண்டவன் சந்நிதியில் இத்திருவுருவங்களையே நாம் காணக்கூடியதாக இருக்கிறது' இவைகள் கி. பி 1653 ஆம் ஆண்டு தைமாதம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை யன்று தான் கடலிலிருந்து எடுக்கப்பட்டதாகக் கல்வெட்டுக்களிலிருந்து அறியக் கூடியதாக இருக்கிறது.

1803ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் ஆங்கிலேயக் கலெக்டராக இருந்த லூஷிங்டன் துரை திருச்செந்தூரில் முகாமிட்டிருந்தார் இவர் சாமரை வீசிக்கொண்டிருப்பதை ஏளனமாக எண்ணி 'உங்கள் தெய்வத்திற்கு வியர்வை அரும்புகிறதா எனக் கேலியாகக் கேட்டதாகவும் அதனை நிரூபித்துக் காண்பிப்பதாக அர்ச்சகர்கள் ஆறுமுகப் பெருமானின் திருவுருவத்தில் உள்ள மாலைகளையெல்லாம் களைந்துவிட்டுக் கோழத் துணியை விக்கிரகத்தின்மேல் போர்த்திய போது வியர்வை நீர் தரையிலும் ஓட ஆரம்பித்தது. இவ்வாச்சரியத்தைக் கண்ணுற்ற லூஷிங்டன் துரை எம்பெருமானைப் பணிந்து பல வெள்ளிப் பாத்திரங்களைக் காணிக்கையாகச் செலுத்தி வழிபட்டாரெனக் கூறுவர்

திருச்செந்தூரில் நடைபெறும் விழாக்களில் முருகப்பெருமானின் திருவவதாரத்தைக் குறிக்கும் வைகாசி விசாகமும் சூரபத்மனை அழித்து ஆட்கொண்ட கந்தசஷ்டி விழாவும் மிகவும் முக்கியமானவை முருகப் பெருமானது பன்னீர் இலை. வீபூதிப் பிரசாதம் மகிமை வாய்ந்தது

ஒருகாலத்துச் செருக்குற்றிருந்த பிரமனை முருகக்கடவுள் சிறையிலிட்டார் இக்கதையினை எடுத்துக்கூறிப் படை வீடுகளில் மூன்றுவதாகத் திகழும் திருவாவினன் குடியைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகிறது. திருமுருகாற்றுப்படை பிரமன் சிறைப்பட்ட காலத்திலே படைப்புத் தொழில் இல்லையாயிற்று. அதனால் திருமால் உருத்திரன் முதலானோர்க்குரிய காத்தல் அழித்தற்றொழில்களும் இல்லையாயின தத்தம் தொழில்களைப் பெறவிரும்பிய திருமாலும், உருத்திரனும் முருகக் கடவுளின் கோபத்தைத் தணித்து பிரமாவைச் சிறையினின்றும் மீட்க எண்ணி

னோர்கள் எண்ணி இந்திரன் பதினெண் கணங்கள் முப்பத்துமூவர் முதலிய தேவர்களுடன் விண்மீன்கள் போன்ற தோற்றமும் காற்றில் நெருப்புத் தோன்றினாலொத்த வலியும் இடி ஒத்த குரலும் உடையவராய் அந்தரத்தே சுழன்று திரிந்தனர், காந்தருவர் தமது மகளிரோடு யாழ் வாசித்துப் பின்னே செல்ல முனிவர்கள் முன்னே சென்றனர் இவ்வகைத் தோற்றத்துடன் திருவாவினன் குடியில் முருகன் எழுந்தருளியுள்ளான்

''ஆவியர் குடி'' என்பது குறுநில மன்னர்களின் குடிகளில் ஒன்று அவர்கள் அரசாண்டு வந்த இடம் இது இத்தலத்திற்குப் பல திருப்புகழ்ப் பாக்கள் உண்டு. தலபுராணத்தையன்றி இரண்டு பிள்ளைத்தமிழ்களும் ஒரு பள்ளும் இருக்கின்றன தண்டபாணி சுவாமிகள் பழனித் திருவாயிரம் என்ற நூலைப் பாடியிருக்கிறார். பழனி இரட்டை மணிமாலை ஒன்றுண்டு கும்மி, கீர்த்தனங்களாகிய இசைப்பாடல்களுமுண்டு

பழநிமலை அடிவாரத்தில் திருவாவினன் குடி ஆலயம் அமைந்துள்ளது. இந்தத் திருத்தலத்தில் வடகிழக்குப் பகுதியில் சரவணப் பொய்கை இருக்கிறது. இது ஒரு புண்ணிய தீர்த்தமாகும். திருவாவினன் குடியில் முருகன் மயில்மீது அமர்ந்த வண்ணம் குழந்தை வேலாயுதசுவாமி என்னும் நாமத்துடன் அடியார்களுக்குக் காட்சி தருகின்றார் பழநிப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருமலை 450 அடி உயரமுடையது. மலையுச்சியில் ஞானதண்டாயுதபாணி ஆலயம் அழகாக அமைந்துள்ளது. மலையில் உள்ள ஆலயத்திற்கு ஏறிச் செல்வதற்கு 697 படிகள் உள்ளன. கடம்பு முதலிய பலவகை மரங்கள் செழித்து ஓங்கி வளர்ந்துள்ளன.

நான்காவது படை வீடு திருவேரகம் எனப்படும். சுவாமிமலை இதிலே அந்தணர் இயல்பு சிறப்பித்துக் கூறப்படுகிறது. ஓதல், ஓதுவித்தல், வேட்டல் வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு தொழில்களும் உடையர். தருமத்தையே எந்நாளும் கூறும் கொள்கையர், நாற்சதுரம் முச்சதுரம், வில் வடிவமாகிய ஆகவனீயம், தட்ஷிணாக்கினி, காருகபத்தியம் என்னும் முத்தீ ஓம்பும் செல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுடையவர். நூலணிதற்கு முன் ஒன்றும் அணிந்தபின் ஒன்றுமாகிய இருபிறப்புடைய வர். பூவைக் கையிலேந்தி 'நமோகுமாராய' என்னும் மந்திரத்தை நாப்புடைபெயர உச்சரித்து முருகக்கடவுளை வழிபடுவர். அதற்கு மகிழ்ந்து திருவேரகத்தில் முருகன் எழுந்தருளுகின்றனென்று பாடுகிறது திருமுருகாற்றுப் படை.

முருகப்பெருமான் குருநாதராக இருந்து சிவபெருமானுக்கு உபதேசித்த இடம் தான் சுவாமிமலையென அழைக்கப்படுகிறது இத் தலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து மேற்குப் பக்கமாக ஐந்து மைல் தூரத்திலுள்ளது அருணகிரிநாதர்.

'திருவேரகத்தி லுறைவா யுமைக்கோர்
சிறுவா கரிக்கு - மிளையோனே'
என்று அழகாகப் பாடியுள்ளார்.

சோழநாட்டுத் தலங்களுட் சிறப்புடன் விளங்குவது திருவேரகம் காவிரிக் கரையிலமைந்துள்ளது குருமலை யென வும் அழைக்கப்படும். தந்தைக்கு உபதேசஞ் செய்த காரணத்தால் தனயனும் தகப்பன் சாமி எனப் பெயர்பெற்று விளங்குகிறார்

திருமுருகாற்றுப் படைக்கு உரைவகுத்த நச்சினார்க்கினியத் திருவேரகத்தை மலைநாட்டகத்து ஒரு திருப்பதி' என்று குறிப்பிடுகின்றார். 'தனிஏரகத்தில்' முருகோனே தருகாவிரிக்கு வடபாரிசத்தில் சமர்வேல் எடுத்த பெருமாளே 'என்றும் 'காவிரியாற்றுக் குளே வரு வளமைச் சோழ நன்நாட்டுக்குள் ஏரக நகரின் சீர்பெறு மோட்சத்தையே தரு பெருமாளே' என்றும் அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார்.

சுவாமிமலைக் கோவில் இயற்கை அழகு கொஞ்சும் சூழலில் மூன்று கோபுரங்களுடனும் மூன்று பிரகாரங்களுடனும் அமைந்துள்ளது மலை உச்சியை அடைவதற்கு அறுபது படிகளைத் தாண்டிச் செல்ல வேண்டும் இந்த அறுபது படிகளும் பிரபவ முதல் அக்ஷய வருடம் ஈருகவுள்ள தமிழ் வருடங்களின் அதி தேவதைகளைக் குறிப்பதாகவும் இந்தப் படிகளின் மீது ஏறிச் செல்வது இறைவன் கருணையினால் ஆண்டுகள் அனைத்தையும் ஆனந்தமாக கழித்துவிடலாம் என்னும் ஒரு ஐதிகம் உண்டு.

சிவன் ஞானோதயம் பெற்ற தலமாகத் திருவேரகம் மிளிருவதால் இங்கு பூனூல் அணியும் சடங்கு செய்தல் மிகவும் விஷேடமாகக் கருதப்படுகிறது திருவேரகத்துக்குச் செல்லும் வழியில் பாடல்பெற்ற தலமான திருவலஞ்சுழி உண்டு. வெள்ளை விநாயகரை இங்கு வழிபட்ட பின்னர் சுவாமிநாதனை வழிபடச் செல்வர்

முருகனருளால் அந்தணர்கள் தமக்கு வேண்டியனவெல்லாம் குறைவின்றிக் கிடைக்கப் பெறுவதால் திருவேரகத்தை விட்டு நீங்காமல் பண்டைக்காலந் தொட்டே வாழ்ந்து வருகிறார்கள். இ வர்க ளை த் 'தொல்குடி' என்று நக்கீரர் குறிப்பிடுகிறார்

பதின்மூன்று அடிகளில் திருவேரகம் என்னும் படைவீட்டைப் பாடுகிறார் நக்கீரர் அவற்றில் 12 அடிகள் முருகனை வழிபடும் அந்தணர்களைப் பற்றிச் சொல்கின்றன.

இப்போது பேச்சுவழக்கில் ஏராரம் ஏராவரம் என்று வழங்குவர். இரண்டு சிவாலயங்களுமிங்குண்டு ஒன்று சிதைந்திருக்கிறது அதிலுள்ள கல்வெட்டிலிருந்து அந்த ஊர் 'இன்னம்பர் நாட்டு ஏராகி" மும்முடிச் சோழ மங்கலம்' என்று வழங்கியதாக தெரிய வருகிறது. ஆகவே அந்த ஊரே ஏர் என்ற வைப்புத்தலம் என்று உறுதியாகக் கொள்ளலாமென்கின்றார் வாகீச கலாநிதி கி. வா ஜகந்நாதன் தஞ்சைக் கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றிலும் இவ்வூர்ப் பெயர் வருகிறது. (தென்இந்தியக் கல்வெட்டுக்கள், தொகுதி 2, கல்வெட்டு 70)

திருமுருகாற்றுப் படையில் ஐந்தாவதாக பாடப்படும் திருத்தலம் குன்றுதோறாடல் குன்றக்குரவை இங்கு சிறப்பிடம் பெறுகிறது. முருகக்கடவுள் குறமாதரோடு ஆடும் காட்சியை இதில் கூறுகின்றார் வேலனால் வெறியாடல் என்பனவும் கூறப்படும் மார்பிலே சந்தனம் பூசிய வேலன் என்னும் வெறியாட்டாளன் பச்சிலைக் கொடியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிக்காயையும் இடையிட்டுத் தக்கோலக் காய், காட்டுமல்லிகை வெண்டாளி முதலி யவற்றைக் கலந்து கட்டிய மாலையை அணி வர். சிவந்த ஆடையை உடுத்து அசோகந் தளிரைக் காதிற் செருகி யாழோசை போலுங் குரலுடைய பாடுமகளிரோடு குன்றுகள் தோறும் சென்று குரவை ஆடும் குறத்தியர் கைகளைத் தழுவி ஏந்தி முன்கை கொடுத்து விளையாடுவர் இது முருகக்கட வுளுக்கு நிலைபெற்ற குணமாகும்.

குன்றுதோருடல் என்பது தொகைத் தலமாகும். இப்படைவீடு இறைவனுடைய சர்வவியாபகத் தன்மையை மக்களுக்கு எடுத்து நன்கு உணர்த்துகிறது. அருணகிரி நாதர் குன்றுதோறும் குடியிருக்கும் குமரனை அழகாகப் பாடியிருக்கிருர். திருத்தணிகை திருச்செங்கோடு, கதிர்காமம், குற்ருலம், மயிலமலை' விராலிமலை, குன்றக்குடி முதலி யன அவை.

ஆருவது படைவீடெனக் கருதப்படுவது பழமுதிர்சோலை. இதனை அழகர் கோயி லென்று சிலரும், பழநி என்று இன்னுஞ் சில ரும் கூறுவர். பழமுதிர் சோலையின் இயற்கை வளம் திருமுருகாற்றுப்படையிலே பேசப்படு கிறது.

பழமுதிர்சோலை என்னும் தலம் மது ரைக்கு அருகில் உள்ளது. பழமுதிர் சோலை என்பதற்கு பழம் முற்றின சோலை என்று நச்சினர்க்கினியர் விளக்கம் கூறுகின்ருர். முதிர்ந்த பழங்களையுடைய சோலைகள் சூழ்ந்தமலை என்னும் பொருள்பட பரிதியார் கருத்துத் தெரிவிக்கின்ருர். பழம் + உதிர் + சோலை எனப் பிரித்து பழம் உதிரப்பட்ட சோலைகளையுடைய மலை என வேறு உரையா சிரியரும் பொருள் கூறியுள்ளனர். அழகர்மலை எனவும் இத்தலம் வழங்கப்பட்டு வருகிறது. திருமாலிருங்குன்றம், சோலைமலை என்றும் சிலர் வழங்கி வருகின்றனர். ஒரு காலத்தில் திருமாலிருஞ்சோலை மலையாகிய அழகர் கோயிலை பழமுதிர் சோலையாகவும் சிறந்து விளங்கியிருக்க வேண்டும் பண்டைக் காலத் தில் இங்கே முருகன் கோயிலும் திருமால் கோயிலும் ஒருங்கே இருந்து சைவ வைஷ்ணவ ஒற்றுமையைப் புலப்படுத்தியிருக்கலா மென்று கருதுவோருமுளர். ஒளவைக்குப் பழம்கொடுத்த - உதிர்த்த தலம் பழம் உதிர் சோலையென அன்றுதொட்டு வழங்கப்பட்டு வருகிறது.

சிலப்பதிகாரத்திலே 'புண்ணிய சரவ ணம்' என்ற தீர்த்தம் இங்கே இருந்ததாக ஒருசெய்தி வருகிறது. சரவணம் என்று முரு கனேடு தொடர்புடையது. பழனியில் அந்தப் பெயரோடு ஒரு தீர்த்தம் இருக்கிறது

அழகர்மலை பற்றிய மான்மியத்தில் முரு கன் திருமாலைப் பூசித்ததாக ஒரு வரலாறு வருகிறது அதனுலும் முருகன் இத்தலத் துக்கு எழுதருளியதாக வழங்கும் கருத்துக்கு வலிமையுண்டாகிறது.

எனவே திருமுருகாற்றுப்படையில் கூறப் பட்டுள்ள திருத்தலங்களைப் பராயணத்தால் நினைந்து முருகன் திருவருளைப் பெற்றுய்வோ மாக

## இக்கட்டுரை எழுதப் பயன்பட்ட நூல்கள்:


1) பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள்
2) பத்துப்பாட்டு உரைநடை — ந சி. கந்தையாபிள்ளை (1953)
3) திருமுருகாற்றுப்படை விளக்கவுரை — நீர்வேலிக் கந்தசுவாமி தேவஸ்தான வெளியீடு (1988)
4) நக்கீரர் நன்முருகாற்றுப்படை — வை. அருவரதவிநாயகமூர்த்தி (1978)
5) திருமுருகாற்றுப்படை விளக்கம் — சி. வா. ஜகந்நாதன் (1970)
6) திருமுருகாற்றுப்படை (மூலம்) — ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பதிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்கடேஸ்வரா

## ஸ்டோர்ஸ்

இல 97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



அழகிற்கு அழகுசெய்யும்
அழகிய
★ தங்கப்பவுண் ★
நகைகளுக்கு



# அலங்கார் நகை மாளிகை

## 'தேவி பிளாஸா பில்டிங்'

169, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதரும் திருப்புகழும்

ப. கணேசலிங்கம்
துணை விரிவுரையாளர், இந்துநாகரீகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

முருகப் பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற சமயம் கௌமாரமாகும். இத் தெய்வத்தினை தங்களது வாழ்க்கையிலே உபாசனை செய்து முக்தியடைந்தவர்கள் பலர் இவர்களுள் கச்சியப்ப சிவாச்சாரியார், அருணகிரிநாத சுவாமிகள், குமரகுருபர சுவாமிகள், சிதம்பர சுவாமிகள், வண்ணச் சரபம் ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், தேவராச சுவாமிகள், நக்கீரர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். முருகனை வழிபட்ட அடியவர்கள் அப்பெருமான் மீது தங்களுக்குள்ள தெய்வீக அனுபவத் தொடர்புகளை எல்லாம் பக்தி ரசம் ததும்பும் தோத்திரப் பாக்களாய் எமக்கு அருளிச் செய்துள்ளார்கள். இந்து சமயத்தினை வளர்ப்பதற்கு அவ்வப்பொழுது தோன்றிய ஞானிகள், அனுபூதிமான்கள், அறிஞர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சந்தான குரவர்கள், புலவர்கள் தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட தெய்வீக அனுபவங்களை எல்லாம் தோத்திர சாத்திர நூல்களாக எமக்கு ஆக்கித் தந்துள்ளார்கள்.

முருகப் பெருமானை உபாசனா மூர்த்தியாகக் கொண்டு வழிபட்டு முக்தி அடைந்தவர்களுள் அருணகிரிநாதரும் ஒருவர். அருணகிரிநாதர் திருத்தலங்கள் தோறும் சென்று அருளிச் செய்த சந்தம் குதித்தோடும் பக்திரசம் ததும்பும் பாடல்களாகிய திருப்புகழோடு, கந்தர் அலங்காரம், திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அனுபூதி, வேல் விருத்தம், திருஎழு கூற்றிருக்கை, ஆகியவற்றை அருளிச் செய்துள்ளார். முருகப் பெருமானது பெருமைகளைப் போற்றிப் புகழ்ந்து பாடிய நூல் திருப்புகழ். தேவாரப் பாக்கள் போலவே இத்திருப்புகழ்ப் பாடல்களும் பல்வேறு தலங்கள் மீது பாடப்பட்டவை. திருப்புகழ்ப் பாடல்கள் வேறெங்கணும் காண முடியாத சந்தச் சிறப்புத் தாளச் சிறப்பும் நிறைந்தவை.

அருணகிரிநாதர் என்னும் சிவபக்த சிகாமணியின் சரித்திரம் பல வகையான பழி, பாவம், பொய் முதலிய நிரம்பிய வரலாறுகளோடு பிணைக்கப்பட்டு உண்மைச் சரிதமென நடிப்புற்று இந்நாட்டில் உலவி வருகின்றது அருணகிரிநாதருடைய முற்பிறவியைப் பற்றிச் சில விபரீதமான செய்திகள் கூறப்படுகின்றன. அவருடைய பிறப்பு, குலம், தாய், தந்தையர் பற்றிய செய்திகளும் விபரீதமாகவே கூறப்படுகின்றன. அகுணகிரிநாதரின் காலத்தை நிச்சயிப்பதற்குச் சிறந்த சான்று, இவர் பிரபுட தேவராயனது ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தமையாகும். 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இரண்டாம் பிரபுட தேவராயன் என்னும் அரசன் அரசோச்சினான். இவர் சிறந்த முருக பக்தன். இவரது முன்னிலையிலேயே வில்லிபுத்தூராருடன் அருணகிரிநாதர் வாதிட்டார். அதுவுமன்றித் தாம் பாடிய திருப்புகழில் பல இடங்களில் பிரபுடராயரைப் பாராட்டியுள்ளார். 'அதல சேடனாராட'' என்ற தலைப்புடைய திருப்புகழில்,

'உதய தாம மார்பாபி ரபுட தேவ மாராஜன்
உளமு மாட வாழ்தேவர் பெருமாளே''

என்ற தொடரால் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அருணகிரிநாதர் அவதரித்த திருநாள் புரட்டாசி மாதம் உத்திர நக்ஷத்திரமும் செவ்வாய்க்கிழமையும் தனுர் லக்கினமும் கூடிய நன்னாள் என்றும், அவர் கிளியுருவம் பெற்று முருகவேள் தோள்மீது அமர்ந்து சாமீப பத முத்தி பெற்ற நாளும் அஃதேயென்றும் அருணகிரிநாதர் புராணம் கூறுகின்றது. வேறு சிலர் ஆனி மாதம் பௌர்ணமியே அவர் திருநாளென்று கொண்டாடி வருகின்றனர். உண்மை காண்பதற்குப் போதிய ஆதாரங்களில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிநாதர் மனைவி மக்களோடு தாய் தந்தையரோடு இல்லறம் நடத்தியவ ராயினும், கன்ம வசத்தால் விலைமாதர் உறவுகொண்டு சிற்றின்பத் துறையில் எளிய ராகிக் கைப்பொருளையிழந்து வறுமையுற்றுப் பிணி வாய்ப்பட்டனர். மனைவி மக்களாலும் சுற்றத்தவராலும் ஊரவர்களாலும் எள்ளி இகழப்பட்டு ஒதுக்கப்பட்ட நிலையில் உய்யும் வழி வேறு காணுது உயிர்த் தியாகம் செய்ய முற்பட்ட பொழுது அருள் வள்ளலாகிய ஆறுமுகப் பெருமான் தடுத் தாட் கொண்டமை பற்றித் தமது திருப் புகழில் பல இடங்களில் என்பு நெக்குருக எடுத்தியம்பியுள்ளார். கருணைமூர்த்தியாகிய முருகப்பெருமான் தமது அடியானை மரணத் தின் வாயினின்றும் காப்பாற்றித் தரிசனம் கொடுத்ததோடமையாது, அருணகிரி யென்று பெயரும் கொடுத்து, வீபூதிசாத்தி, திருவடித் தீட்சையும் நல்கி, ஆறெழுத்து மந் திரத்தை அயில் வேலால் அவர் நாவிற்பொறித்து, முத்தமிழும் போதித்தார் அத்துடன் ஜெபமாலையும் வழங்கி இறைபுகழ்பாடும்படி பணித்தருளினுர். அப்பொழுது அருணகிரி நாதர் தமது ஆற்றலின்மையைக் கூறவும் முருகனே, ''முத்தைத்தரு பத்தித் திரு ..... எனவோது'' என்று அடியெடுத்துக் கொடுத் தருளினுர். இங்ஙனம் அருணசலேஸ்வரரினல் ஆட்கொள்ளப்பெற்று, பின்னர் அருண கிரிநாதர் திருத்தல யாத்திரை மேற் கொண்டு முருகப் பெருமான் எழுந்தருளி யிருக்கும் ஸ்தலங்கள் தோறும் சென்று தெய்வத் தீந்தமிழ்த் திருப்புகழ் பாடியருளினுர். இவர் பாடிய திருப்புகழ்ப் பாடல்கள் 16,000 என்பர். அவற்றுள் இக்காலத்துக் கிடைக்கக்கூடியனவாக இருப்பவை 1361 ஆகும். கிடைக்கும் திருப்புகழ்ப் பாடல்களி லிருந்து இவர் கிட்டத்தட்ட -00 தலங்களைத் தரிசித்தாரென்று அறியக்கூடியதாயிருக்கின்றது.

அருணகிரிநாதர் பல திவ்ய ஸ்தலங் களுக்குஞ் சென்று திருப்புகழ் பாடத் தொடங்கினுர். இங்ஙனம் திருப்பரங் குன் றம், மதுரை, திருச்செந்தூர், திருவாவினன் குடி, திருவேரகம், திருப்பேரூர், திருத் தணிகை, சீர்காளத்தி முதலிய பல க்ஷேத் திரங்களுக்குஞ் சென்று, பாடிக் கொண்டு வருவாராயினர். அங்ஙனம் வருவார்க்கு வயலூரில் முருகவேள் தரிசனந் தந்தருளி னுர். அதனாலவர் அப்பதியைக் குறித்துப் பல விடங்களிலும் மிகுதியாகப் பாடுவா ராயினர். அப்பகுதியில் தங்கியிருந்தபோது, அவரைச் செவ்வேள் விராலிமலைக்கு வாவென ப் பணித்தனர். அவ்வாறே அருணகிரி நாதர் விராலி மலைக்குச் சென்று முருக னைத் தொழு னர். இவர் ஈழநாட்டிலுள்ள திருத்தலங்களான கதிர்காமம், திருகோண மலை, யாழ்ப்பாணத்து நல்லூர், கந்தவனம் ஆகியனவற்றின் மீதும் திருப்புகழ் பாடல் களைப் பாடியருளினுர். திருப்புகழ் பெற்ற தலங்களுள் பழனியே அதிக பாடல்களைக் (9 ) கொண்டிருப்பதால், சுவாமிகள் பல காலம் இத்தலத்தில் வாசஞ் செய்திருத்தல் வேண்டும்.

திருப்புகழ் என்பது திரு + புகழ் என் னும் இரண்டு சொற்களாகிய ஒரு தொடர். திரு என்பது கண்டாரால் விரும் பப்படும் தன்மை நோக்கம் எனவே அழகு என்பது பெறப்படும். புகழ் என்றது முருகப் பெருமானுடைய புகழைக் குறித்தது திருப் புகழ் இவர் செய்த நூல்களின் முதன்மை யானது. முருகன் திருப்புகழைப் பற்றிச் சொல்லுவதால், இப்பெயர் பெற்றது என லாம். பெரியோர்கள் 'திருவாசகம் என் னும் தேன்'', ''திருமுருகாறெனுந் தேறல்'' என்றுர்கள். திருப்புகழைத் ''திருப்புகழ் அமுது'' என்றுர்கள். அமிர்தம் எங்ஙனம மிருத்துவை (இறப்பை) விலக்குமோ அங் ஙனம் திருப்புகழ் இறவாத இன்ப நிலையைத் தந்து உதவுமாதலின் அதை ''அமுது'' என்றே ஆன்ருேர் பலரும் பாராட்டியுள் ளார்.

அருணகிரிநாதர் பெருஞ் சிறப்பிற்கு முக்கிய காரணமாயுள்ளது. அவர் தமிழிலே புதியதாக ஏற்படுத்திய சந்தமேயாம் இவ ருக்கு முன் தொல்காப்பியத்தின் கண்ணே கூறப்பட்ட நூறு வண்ணங்கள் பொருந்திய தமிழ்ப் பாடல்கள் இருந்தனவேயன்றி இவர் உண்டாக்கிய தத்த, தந்தன, தய்ய முத லிய வண்ணங்கள் இருக்கவில்லை. அருண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிநாதரைப் போலப் பல சந்தங்களை அமைத்துப் பாடிய புலவர் ஒருவருமில்லை எனக் கூறலாம். இதுவே இவருக்குரிய தனிச் சிறப்பாகும்.

"வாக்கிற் கருணகிரி வாதவூ ரர்கனிவில்
தாக்கிற் றிருஞான சம்பந்தர் – நோக்கிறகு
நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனர்
சொற்குறுதிக் கப்பரெனச் சொல"

என்ற பாடலில் அருணகிரிநாதரின் வாக்கின் பெருமை புகழப்படுவது நோக்கத்தக்கது. அருணகிரிநாதர் கல்வி கற்ற வரலாற்றைப் பற்றியும், இளம்பருவச் செயல்களைப் பற்றியும் நமக்கு யாதும் தெரியவில்லை. ஆனல் அவர் அருளிச் செய்த நூல்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து, அவர் செந்தமிழ்ப் புலமையோடு வடமொழிப் புலமையும் வாய்ந்தனரென்பது தெளிவாகப் புலப்படும்.

அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ் பாடல்களில் இன்று எமக்குக் கிடைப்பவை 1361 பாடல்களாகும். இப்பாடல்களை நாம் ஆராய்ந்து வகைப்படுத்தினல் அவை கீழ்வரும் ஐந்து தலைப்புக்களுள்ளடங்கும். அவையாவன:-

1. சிற்றின்பக் குறிப்பு ஒரு சிறிதுமில்லாத பாடல்கள்.
2. சிற்றின்பத்தில் ஆழ்ந்திருக்கும் நமக்கு அருள்புரிய வேண்டுமென்று விண்ணப்பிக்கும் பாடல்கள்.
3 சிற்றின்பத்தில் ஆழ்ந்திருப்பினும் முருகவேளை மறக்கவில்லையெனக் கூறும் பாடல்கள்.
4. தமக்குபதேசம் செய்தருள வேண்டுமென்று விண்ணப்பிக்கும் பாடல்கள்.
5. தமக்குபதேசம் செய்த வகையையும் பொருளையும் மகிழும் பாடல்கள்.

இப்பாகுபாட்டை கூர்ந்து நோக்குங்கால் அருணகிரிநாதர் விலைமாதர் உறவைப் பற்றியிருந்த காலத்திலேயே பல தலங்கள் சென்று, பல பாடல்களைப் பாடியிருத்தல் வேண்டுமென்பதும், தாம் உபதேசம் பெருது உபதேசத்தை நாடி விண்ணப்பித்தற்கு முன்னரே பல பாடல்களைப் பாடினரென்பதும், தமக்கு உபதேசம் கிடைத்த பிறகும் பல பாடல்களைப் பாடினரென்பதும் புலனகும். அருணகிரிநாதருடைய பாடல்களை பிரதானமாக ஐந்து தலைப்புகளுள் அடக்கி நோக்கினேம். இவ் ஒவ்வொரு தலைப்புகளுக்கும் தனித்தனியாக சில உதாரணங்களை எடுத்து நோக்குவது சாலவும் பொருத்தமான ஒன்றகும். சிற்றின்பக் குறிப்பேனும் சரித்திரச் சான்றேனும் அமையாத பாடல்களைத் தமது வாழ்க்கையில் எப்போது பாடினரென்று துணிந்து கூறவியலாது அருணகிரிநாதர் சிற்றின்பக் குறிப்பு ஒரு சிறிதுமில்லாத பாடல்களுக்கு உதாரணங்களாக திருப்புகழில் இடம்பெறும் 3வது பாடலான,

"அகரமு மாகி அதிபனு மாகி
அதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி அவர் மேலாய்"
... ..... .. ......... .. ........... ..... ...... . ... ..

4 – வது பாடலான
"அகல நீளம் யாதாலும் ஒருவ ராலு மாராய
அரிய மோன மேகோயில் என மேவி
அசைய வேகிரி யாபீட மிசைபு காம காஞான
அறிவி ஞத ராமோத மலர்தூவிச்"
..... ......... ... ... ....... ... .

ஆகிய பாடல்களைக் கூறலாம்.

உபதேசத்தையவாவி விண்ணப்பிக்கும் பாடல்களையும் உபதேசம் பெற்றதைக் கூறும் பாடல்களையும் உற்று நோக்குவோம். இவை பலவாக இருத்தலின் உதாரணங்கள் சிலவற்றையே ஆராய்வோம்.

56 வது பாடலில்
"அறியா வேழை நானுன் பதிபசு பாசோப
தேசம் பெறவேணும்"

322 – வது பாடலில்
"மோன உரையி லுபதேசவாளை எனது பகை
– தீர நீயும் அருள்வாயே"

342 – வது பாடலில்
"ஓம்பெரும் பிரணவாதி புரைத்தென்றனை
– யாள்வாய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

385 – வது பாடலில்
''மவுனபஞ்சா மனோலயசுகந் தருவாயே''
745 - வது பாடலில்
''இருமை ஒருமையில் பெருமையை வெளி
– பட மொழிவாயே''
812 - வது பாடலில்
''ஊராட்சியதான ஓர்வாக் கருள்வாயே''
989 – வது பாடலில்
''சுகோதய ஞான வார்த்தை யருள்வாயே''
1083 – வது பாடலில்
''ஒரு போதகத்தை யருள்வாயே''

என்று பல்வேறு இடங்களிலே அருண கிரிநாதர் விண்ணப்பிக்கின்றார். இவர் பெற்ற உபதேசத்தைக் கூறும் பாடல்களுட் சிலவற்றை நோக்குவோம்.

11 - வது பாடலில்
''எட்டாம் எழுத்து ஏழையேற்குப் பகர்ந்த
- முத்தா''
27 – வது பாடலில்
''உணர்வில் உணரும் அநுபவம் மனம் பெற்
றிடும் படியை வந்து நீமுன் உதவ''
361 - வது பாடலில்
''எட்டிரண்டு மறியாத என் செவியில்
- எட்டிரண்டு
மிதுவாமிலிங்கமென எட்டிரண்டும் வெளியா
மொழிந்த குரு முருகோனே''
536 - வது பாடலில்
''தழைந்த சிறுசுடர்தனையென மனதினில்
அழுந்த வுரைசெய வருமுக''
1070 - வது பாடலில்
'அருணைநகர் மிசை கருணையொ டருளிய பரம
ஒருவசனமு மிருசரணமு மறவேனே'
1194 - வது பாடலில்
''அருணை நகர் மிசை கருணையொ டருளிய
- மவுன வசனமும்
இருபெரு சரணமு மறவேனே''

என்று பல்வேறு இடங்களிலே அருண கிரிநாதர் கூறுகின்றார். அருணகிரிநாதர் இறைவனிடம் வாழ்நாள் பயன்படவும், ஆறெழுத்தின் தியானம் பெறவும், அன்பொடு நினைக்கவும், அடியார் இணக்கம் பெறவும், அடியார்க்குத் தொண்டு செய்யவும், நோய் நலியாதிருக்கவும், அவர் அடங்கவும், வேண்டத்தக்க தறியவும், யம பயம் நீங்கவும், இறுதிக் காலத்தில் இறைவனது நினைவைப் பெறவும், மோகன் அறவும், யான் எனது அறவும், பிறவி அறவும் என்ற பல்வேறு வேண்டுகோள்களை இறைவனிடம் விடுக்கின்றார்.

அருணகிரிநாதருடைய சமயக் கொள்கைகளை அவருடைய திருவாக்குகளிற் காணப்படும் சில குறிப்புகளைக் கொண்டு நாம் அறியலாம். 6 - வது திருப்புகழ் பாடலில் ''ஏழை நானுன் பதிபசு பாசோப தேச பெற வேணும்'' என்றும், 19? வது பாடலில் ''தமியேனும் கதிபெற ஈடேறுதன பதி பசுபாச மானவை கசடற வேறு வேறு செய்தருள்வாயே'' என்றும் இவர் கூறுவதால், முப்பொருள் உண்மையையும், அவற்றின் சேர்க்கை வகையையும் இவர் ஒப்புக் கொள்வது நன்கு புலப்படும். இவரது பாடல்களில் சைவசித்தாந்தத் தத்துவக் கருத்துக்கள் பற்பல உள்ளடங்கி இருப்பது கண்கூடு.

திருப்புகழ் பல வகையிலும் மிக அருமையான ஒரு நூல். சொற்சுவை, பொருட் சுவை, பக்திச் சுவை இவை மூன்றும் இந் நூலில் தலை சிறந்து நிற்கும் இந்நூலின் அருமைக்குக் காரணம் அதன் பெருமை; பெருமைக்குக் காரணம் அதன் நடுநிலைப் போக்கு (சமரச பாவம்) தம்மை யாண்டருளிய முருகவேளை நடுநாயகமான குறிக் கோள் தெய்வமாகக் கொண்டு, கணபதி, சிவபிரான், பார்வதி, திருமால் ஆகிய பெருங் கடவுளரையும் ஒப்பில்லா வகையில் உயர்த்திப்பாடி, இத்தகைய கடவுளுக்கு இளையோனே, குருநாதனே, குமரனே, மருகோனே எனப் பாடித் துதித்துச் செல்கின்றார் அருணகிரிநாதர் இந்த சமரச நிலையே திருப்புகழ் யாவராலும் கொண்டாடப்படுவதற்கு ஒரு முக்கிய காரணமாயிருக்கின்றது.

அருணகிரிநாதருடைய பாடல்கள் அனைத்தும் தெய்வீகத் தன்மை வாய்ந்ததொடு மட்டுமல்லாது அவை கவித்திறம் மிக்கனவாகவும் விளங்குகின்றன அருண கிரிநாத சுவாமிகள் வரகவியாதலின் நால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைக் கவியிலும் குருத்துவம் பெற்ற கவியாவர். ஆதலின், இவரை நாற்கவிராஜர் எனலாம். இவர் முத்தமிழ் அரசும் ஆவர். செந்தமிழ் மணம் கமழும் அலங்காரம், அநுபூதி, அந்தாதி என்னும் இயற்றமிழ்ப் பாக்களைப் பாடித் தமது இயற்றமிழ்ப் புலமையையும், கணக்கில்லாத நுண்ணியதான அமைப்புக்களையும், இசை நுணுக்கங்களையும் கொண்டுள்ளனவாய், இசைத் தமிழுக்கே இலக்கியமாய் நன்கு அமைந்த "திருப்புகழ், திருவகுப்பு" என்னும் வண்ணப் பாக்களைப் பாடித் தமது இசைத்தமிழ்ப் புலமையையும், திருப்புகழ்ப் பாக்களுக்குள்ளும் பிற நூல்களிலும், நாடக இயலின் இனிமை பெரிதும் விளங்கப் பாடித் தமது நாடகத் தமிழ்ப் புலமையையும் சுவாமிகள் விளங்கக் காட்டியுள்ளார். ஆதலின் சுவாமிகளை முத்தமிழ்ப் புலவர், "முத்தமிழரசு" எனக் கூறலாம்.

அருணகிரிநாதருடைய திருப்புகழ் பாடல்களிலே நவரசங்களைக் காணலாம். இவர் சிறந்த சந்தக் கவித் தலைவராவும், இசைஞானியாவும், தாளச் செல்வராகவும், பாவகைக்கு ஆதிகர்த்தாவாகவும், கலைத்திறம்மிக்கவராகவும் காணப்படுகின்றார். அருணகிரிநாதரின் செய்யுள் நடை அவருக்கென்றே அமைந்தது. அந்நடைக்கு இணை அவருக்கு முன்னும் இல்லை பின்னும் இல்லை. இவரது கவியமைப்பனது பெரிதும் வியக்கத்தக்கதாயுள்ளது. சுவாமிகளின் திருப்புகழ்ப் பாடல்களுள் மிகச் சிறிய பாடல்களும் உள; மிகப் பெரிய பாடல்களும் உள. ஒரு திருப்புகழ்ப் பாடலில் சில பாகங்களை நீக்க எஞ்சிய பாகம் சிறிதொரு பாடலாகும்படி பாடியிருக்கின்றார். தலத்தின் பெயருக்கேற்பச் சந்தம் எடுப்பார். இவர் கையாண்டுள்ள சொற்பிரயோகங்கள் சில சில இடத்து வேடிக்கையாக அமைந்துள்ளது. இவரது பாடலின் பொருளமைப்பானது மிகச் சிறந்ததாகவே பொலிகின்றது. இவருடைய உபமானங்கள் வேடிக்கையாக அமைந்துள்ளது. இவரது பாடலின் பொருளமைப்பானது மிகச் சிறந்ததாகவே பொலிகின்றது. இவருடைய உபமானங்கள் கம்பருடைய உபமானங்கள் போல ஏனைய புலவர்களுக்கு எட்டாத உயரிய நிலையனவாய் விளங்கும். இவர் தனது பாடல்களில் மிக நன்றாக அமைத்துப் பாடியுள்ளார்.

அருணகிரிநாதருடைய திருப்புகழ் பாடல்களில் இவரது தத்துவோபதேசங்களும், குணாதிசயங்களும் நன்கு விளங்குகின்றன. இவர் தனது தத்துவோபதேசத்திலே அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளை நன்கு விளக்குகின்றார். இவரது குணாதிசயங்களாக நன்றியறிதல், ஆணவமின்மை, கருணை விகடம், விலைமாதையே வைதல், தொண்டில் முதன்மை, பக்தி, பக்திப் பேற்றினால் வந்த தீரம் என்பன நன்கு விளங்குகின்றன.

அருணகிரிநாதருடைய திருப்புகழ் பாடல்களை இவரது காலத்திலே வாழ்ந்தவர்களும், இவருக்குப் பிற்பட்ட காலத்திலே வாழ்ந்தவர்களும் பலவாறு போற்றியிருக்கின்றார்கள். அவர்களுள் மதுரைச் சிவப்பிரகாசர், அந்தகக் கவிவீரராகவ முதலியார், மார்க்கண்டேய தேவர், சிதம்பர சுவாமிகள், தாயுமானவரும் அவர் மாணவர் அருளிய குரு, சோமலசரம் பண்டாரக் கவிராயர், கவிராஜ பண்டாரத்தையர், தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர், சிதம்பர முனிவர், கந்தப்ப தேசிகர் ஆகிய பெரியார்களும், சமீப காலத்திலிருந்த ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள், திருப்புகழ் முருகதாச சுவாமிகள், மாம்பழக் கவிச்சிங்க, பாம்பன் சுவாமிகள் முதலியோரும் திருப்புகழின் பெருமையையும் அருணகிரிநாதரின் பெருமையையும் தமது பாக்களில் மிகச் சிறப்பித்து உரைத்துள்ளார்கள்.

சுருங்கக் கூறின் தமிழ் நாட்டிலே தோன்றிய அருளாளருள் முக்கியமானவராக அருணகிரிநாத சுவாமிகள் விளங்குகின்றார். இவர் முருகப் பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபட்டு முருகப் பெருமானுக்கும் தனக்குமுள்ள தெய்வீகத் தொடர்பினை பக்தி ரசம் கனிந்த திருப்புகழ் பாடல்களாக ஆக்கித் தந்துள்ளார். இவர் முருகன்மீது பாடிய பாடல்களுள் திருப்புகழ் மிகவும் முக்கியமானதாகவும் அத்துடன் சிறப்பு வாய்ந்ததாகவும் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகன் துணை

சகல விதமான சாய்ப்புச் சாமான்களும்
சில்லறைச்சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்வதற்கு இன்றே நாடுங்கள்.



# ஸ்ரீ விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்

148 கண்டி வீதி
சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

From



# Sangar Sons Printers

**98, Vivekananda Hill**

**Colombo 13**

**T. P. 457335**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

235.3
KAR
AR

# ஈழத்தில் கிறிஸ்தாப்தத்திற்கு முன்னர் நிலவிய முருக வழிபாடு பற்றிய தொல்லியற் சான்றுகள்

சி. க. சிற்றம்பலம்.
தலைவர் / வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

ஈழத்தின் தொல்லியல் வரலாற்றைத் தற்போது கிடைக்கும் சான்றுகள் அடிப்படையில் மூன்று காலப் பிரிவுகளாகப் பிரித்தாராய லாம். இவை முறையே வரலாற்றுக்கு முற்பட்ட காலம், வரலாற்றுதய காலம் வரலாற்றுக் காலம் ஆகும்.. ஈழத்து வரலாற்றுக்கு முற்பட்ட காலக் கலாசாரத்தை உருவாக்கிய கற்கால மக்கள் கி. மு. 30,000 ஆண்டளவில் தென்னிந்தியாவிலிருந்து ஈழத்திற் குடியேறிய ஈழப் பழங் குடியளாகும். தற்கால வேடர் இவர்களின் சந்ததியினரே. எனினும் இவர்களின் சமய வாழ்க்கை பற்றிய விரிவான தகவல்கள் நமக்குக் கிட்டவில்லை. வரலாற்றுதய காலத்தின் ஆரம்பம் கி. மு. 1000 ஆண்டாகக் கொள்ளப்படுகின்றது. இக் காலத்திற்றுன் தற்கால ஈழத்தின் நாகரிகத்திற்கு வித்திட்ட பல குடியேற்றங்களும் ஏற்பட்டன. இத்தகைய குடியேற்றத்தின் காரணகர்த்தாக்களாக விஜயனையும் அவனது கூட்டத்தினரையும் தீபவம்சம், மகாவம்சம் போன்ற பாளிநூல்கள் எடுத்துக் காட்டினாலும் கூட இத்தகைய நிகழ்ச்சியை உறுதிப் படுத்துவதற்கான தொல்லியற் சான்றுகள் இற்றைவரை கிடைக்கவில்லை என்பதும் குறிப் பிடத்தக்கது. கிடைக்கும் தொல்லியற் சான்றுகள் தென்னிந்தியர் களே இக் காலகுடியேற்றத்தினை மூலகர்த்தாக்கள் என்பதனை எடுத் துக் காட்டியுள்ளன. (Sitrampalam, S. K. 1980)

இவ்வரலாற்றுதய கால மக்கள் தென்னிந்தியாவைப் போல் ஈழத் திலும் நீர்ப்பாசன விவசாயம், நெல் உற்பத்தி, இரும்பின் உபயோகம் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியதன் விளைவாகவே இந் நாட்டிலும் நாகரிக வளர்ச்சி துரித வேகமடைந்தது. இவர்கள் இறந்தோரைத் தாழிகளிலும், பெருங்கற்களிலுமான குழிகளிலும் அடக்கம் செய்ததால் இக்கால மக்களைப் பெருங்கற்கால மக்கள் எனவும் அழைத்தல் வழக் காகும். இறந்தோரை அடக்கஞ் செய்யும் போது அவர்கள் வாழும் போது பயன்படுத்திய பொருட்கள் யாவற்றையும் சேர்த்து அடக்கஞ் செய்வதும் பொது நியதியாகவே இருந்தது. இத்தகைய சவ அடக்கங் களில் அவர்களின் சமய உணர்வுகளைப் பிரதிபலிக்கும் சின்னங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் கி. மு. 1000 ஆண்டுகட்குப் பிந்தாத தாழிகள் அடக்கஞ் செய்யப்பட்டுள்ள தாழிக் காடாகிய ஆதிச்ச நல்லூரில் இதற்குரிய சான்றுகள் உள. ஆதிச்ச நல்லூர் பண்டைய பாண்டி நாட்டில் உள்ளது. இதிற் கிடைத்துள்ள சின்னங்களில் முருகனது வேல், சேவல், சாவடிக்குப் பயன்படுத்தும் பொருட்கள் ஆகியன குறிப்பிடத் தக்கவை. இவை யாவும் வெண்கலத்தில் அமைந்த பொருட்களே. ஆதிச்ச நல்லூர் கலாசாரத்தை ஒத்துக் காணப்படுகின்ற கலாசாரத்தின் எச்சங்களே, ஈழத்தின் புத்தள மாவட்டத்திலுள்ள கலாஓயா நதிக்கரையில் அமைந்துள்ள பொம்பரிப்பு என்றஇடத்தில்கிடைத்துள்ளன. இதில்குறிப்பிடத்தக்கசான்றாக அமைவது வெண்கலத்தினாலான வேலாகும். இதனை அகழ்ந்தெடுத்த ஆராய்ச்சியாளர் இதனை வேல் என்று குறிப்பிடாவிட்டாலுங் கூட இதன் படத்தினைப் பிரசுரித்திருப்பதை நோக்கும் போது (Begley, V. 1981:77) இது நிச்சயமாக வேலே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இதனை ஒத்த தோற்றமுடைய கருவி வடமேல் மாகாணத்திலுள்ள பின்வேவ என்ற இடத்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (Codakumbura, C. E. 1968:104) இதுவும் வேலே எனலாம். வேல் போன்ற உருவமுடைய இரும்புக் கருவிகளும் அநுராதபுர அகழ்வின் போது கிடைத்துள்ளன. (Deraniyagala, S. 1972 : 151) இவற்றை இவ்விடத்தில் அகழ்வை நிகழ்த்தியோர் கூர்க்கருவிகள் எனக் கூறினாலும் இவற்றின் மாதிரி அமைப்பு வேலையே ஒத்துக் காணப்படுவது ஈண்டு நினைவு கூரற்பாலது.

யாழ் மாவட்டத்திலுள்ள கந்தரோடையில் 1970 இல் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போதும், வெண்கலத்தினாலான வேல் ஒன்று கிடைத்தமை குறிப்பிடத்தக்கது இதே காலத்தைச் சேர்ந்த அநுராதபுர மாவட்டத்தில் பண்டைய சிங்கள தலைநகரான அநுராதபுர நகர அகழ்வுகளின் போது கிடைத்த பானை ஓடுகளில் பொறிக்கப்பட்ட சின்னங்களில் 'வேலும்' காணப்படுவது ஈண்டு குறிப்பிடத் தக்கது. வேல் உண்மையில் ஒருதலைச் சூலமே. தமிழகத்தைப் போன்று ஈழத்திலும் ஒருதலை, இருதலை, முத்தலைச் சூல வழிபாட்டிற்குரிய தடங்கள் உள எனலாம். பொம்பரிப்பிலுள்ள பானை ஓட்டில் இருதலைச் சூலம் சின்னமாகப் பொறித்துக் காணப்படுகின்றது. (Sitrampalam, S. K. 1980) இவ்வாறே முத்தலைச் சூலச் சின்னமும் 1935 இல் அநுராதபுரத்தில் பரணவித்தான மேற்கொண்ட அகழ்வின் போது பானை ஓட்டில் பொறித்துக் காணப்பட்டதை அவர் குறிப்பிட்டுள்ளார். யாழ் மாவட்டத்தில் கந்தரோடையில் கிடைத்த வெண்கலச் சின்னங்களில் முத்தலைச் சூலமும் குறிப்பிடத்தக்கது. இது மட்டுமன்றி ஆனைக்கோட்டை அகழ்வின் போது கிடைத்த வெண்கல முத்திரையில் முத்தலைச் சின்னம் பொறித்துக் காணப்படுகின்றது. இச் சின்னத்திற்குக் கீழுள்ள பிராமி வரிவடிவத்திலமைந்த வரியை வாசித்தோர் இதனைக் 'கோ' என வாசிக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளனர். (Ragupathy, P. 1987) 'கோ'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது கடவுளையும் பின்னர் அரசனையும் குறிக்கப் பயன்பட்ட சொல்லாகும். இதனால் ஆதியில் இச் சூலங்கள் அருவுருவமற்ற இக் கோவிலை (கடவுளின்) சின்னமாக விளங்கிக் காலகதியில் தனித் தனிக் கடவுளரைக் குறிக்கும் சின்னங்களாகவும் வளர்ச்சி பெற்றதால் ஒரு தலைச் சூலம், முத்தலைச்சூலம் ஆகியவை முறையே முருக, சிவ வணக்கங்கள் சின்னமாகவும் எழுச்சி பெற்றன எனலாம்.

கி. மு. 3 ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதியோடுதான் பௌத்த மதம் ஈழத்தில் புகுத்தப் படுகிறது. இக்காலத்திலே வரலாற்றுக் காலமும் ஆரம்பமாகின்றது. அப்போது ஈழத்திலுள்ள மக்கள் யாவரும் இந்துக்களாகவே விளங்கினர். அப்போதைய மன்னன் தேவநம்பிய தீஸன் இம்மத வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளை அளித்ததைப் பாளி நூல்கள்விரிவாக எடுத்தியம்புகின்றன. இப்புதிய மதத்தினை ஈழத்திலுள்ள இந்துக்களும் தழுவினர். இதற்குச் சான்றுக அவர்கள் இம் மதத்திற்கு அளித்த குகைத் தானங்களை அளித்தோரது பெயர்கள் இக் குகைகளிற் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் காணலாம். இக் குகைகள் வசதியான கற்பாறைகள் கிடைக்கும் இடங்களிலே அமைக்கப்பட்டதால் இக் கற்பாறைகள் அருகிக் காணப்படும் இன்றைய வட - கிழக்கு மாகாணங்களில் இத்தகைய கல்வெட்டுக்கள் பெருமளவுக்குக் காணப்படவில்லை எனலாம். இதனால் இப்பகுதி மக்கள் இந்துக்களாக இருக்கவில்லை என்பதும் பொருளல்ல. இக் கல்வெட்டுக்கள் பிராமி வரி வடிவத்தில் அமைந்தால் பிராமிச் கல்வெட்டுக்கள் என அழைக்கப்படுகின்றன. இவை காலத்தால் பெருமளவுக்குக் கிறிஸ்தாப்தத்திற்கு முந்தியவையாகும். இவற்றை ஒரு தொகுதியாகப் பரணவித் தானு பதிப்பித்துள்ளார். (Paranavitana, S. 1970) இக் கட்டுரையில் குறிக்கப்படும் கல்வெட்டுக்களின் இலக்கங்கள் இத் தொகுதியில் காணப் படும் கல்வெட்டுக்களின் இலக்கங்களையே குறித்து நிற்கும் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இவற்றிற் காணப்படும் பெயர்கள் பௌத்த மதத்தினைத் தழுவ முன்னர் இந்நாட்டு மக்கள் இந்துக்களாக விளங்கியதை எடுத்துக் காட்டுவதோடு, தொடர்ந்தும் அவ்விந்துப் பெயர்களைக் குடியிருந்ததையும் எடுத்துக் காட்டுகின்றன. வேறு மதத்தினைத் தழுவிய இந்துக்கள் தற்காலத்திலும் தமது இந்து மதப் பெயர்களால் தொடர்ந்து அழைக்கப்படுவதும் இதற்கான சிறந்த உதாரணமாகும். அக் காலத்தில் ஒருவர் குடி இருந்த பெயர் அவரது சமய நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாக அமைந்திருந்ததால், இப் பெயரட்டவணையைக் கொண்டு இக் கால மக்களின் இந்து மத நம்பிக்கைகளை அறிய முடிகின்றது. (சிற்றம்பலம், சி. க. 1976) இத்தகைய பெயரட்ட வணையில் முருக வணக்கத்தோடு சம்பந்தமுடைய பெயர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராயற்பாலன. தமிழகத்திற்சங்க இலக்கியங்கள் இத்தகைய வழிபாட்டை எடுத்துக் காட்டினுலும் ஈழத்தில் பௌத்தத்தோடு புகுந்த பாளி மொழி வளமுள்ள தமிழ் இலக்கிய மரபு ஒன்று வளர்ச்சி பெறவோ அன்றி அதற்குரிய போஷிப்பைப் பெறவோ வாய்ப்பளிக்கவில்லை. ஈழத்தில் உள்ள பூதந்தேவனுர் போன்ற சங்கப் புலவர்கள் கூடத் தமது திற மையை வெளிக்காட்டத் தமிழகம் செல்ல வேண்டியிருந்தது. ஈழத்தில் தமிழ் மொழி வழக்கிலிருந்ததைப் பூதந்தேவனுர் பாடல்கள் மட்டு மன்றிப் பிற சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. கிறிஸ்தாப்தத் திற்கு முற்பட்ட தேவநம்பியதீஸன் காலத்தின் தொடக்க காலம் வரை யில் உள்ள 250 வருடகாலத்தில் உள்ள மூன்றிலொரு காலப் பகுதி யைத் தமிழ் அரசர்கள் ஆண்டதாக இயற்கையாகவே தமிழர் மீது வெறுப்பு உணர்வு கொண்டுள்ள மகாவம்சம் போன்ற நூல்கள் எடுத் துக் காட்டுவது இதற்குரிய அசையாத சான்ருகும். (சிற்றம்பலம், சி. க. 1988/89.)

சங்க இலக்கியங்கள் தமிழகத்தின் பழைய திராவிட நம்பிக்கை களைப் பிரதிபலிக்கின்றன எனலாம். இவ் இலக்கிய காலத்தில் முதன்மை பெற்ற கடவுளாக முருகன் விளங்குகின்ருன். சிவனின் மேன்மை நாயன் மாரின் காலத்திற்ருன் காண முடிகிறது. தமிழ் நாட்டு முருகன் காலகதியில் வட இந்திய கலாசார செல்வாக்குக்கு உட்பட்டு குமார, விசாக, மகாசேன, சுப்பிரமணிய, கார்த்திகேய போன்ற கடவுட் தன்மைகளோடு இயைந்து, ஒன்ருகச் சங்கமித்ததும் வரலாறு. இத்தகைய வட இந்திய இந்து கலாச்சார தாக்கம் தமிழகத்தில் மட்டு மன்றி ஈழத்திலும் காணப்பட்டதை இப் பிராமிக் கல்வெட்டுக்களிற் காணப்படும் முருகனது பெயர்கள் எடுத்துக் காட்டுகின்றன எனலாம். ஈழத்தின் முருக வழிபாட்டின் தொல்லியற் சின்னமாக வேல் விளங்கு கின்றது என ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இவ் வேலைத் தரிப்ப தால் முருகன் 'வேலன்' எனவும் அழைக்கப்பட்டான். அத்துடன் முருக வணக்கத்தில் ஈடுபட்ட பூசாரிமார் வேல் கொண்டு வெறியாட் டில் ஈடுபட்டதால் 'வேலன்' எனவும் அழைக்கப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எவ்வாருயினும் ஈழக்துப் பிராமிக் கல்வெட்டுக்களிற் காணப்படும் வேலனைக் குறிக்கும் 'வேல' என்ற பதம் முக்கிய சான்ருக அமைகின்றது. இக்கல் வெட்டுக்களில் இவை எல்லாமாக மூன்று மாவட்டங்களிற் காணப்படுகின்றன. அவையாவன அம்பாறை (403, 477) மாத்தளை (880), அநுராதபுரம் (1125) ஆகியனவாகும்.

முருகன் என்ருல் இளவல், அழகன் என்பது பொருளாகும். மதுரைக் காஞ்சியில் (611), அருங்கடி வேலன் முருகொடு வளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலை. என வரும் குறிப்பும் இதனையே உணர்த்துகின்றது. இதன்
பொருளையே வட மொழி 'குமார' என்ற பதமும் தருகின்றது. இதில்
எது முந்தியது என்பது ஆராயப் பாலது. எல்லாமாக ஆறு மாவட்
டங்களிலுள்ள கல்வெட்டுக்களில் இப்பதம் காணப்படுகின்றது. அவை
யாவன அநுராதபுரம் (91, , 190) பொலநறுவை (321), அம்பாந்
தோட்டை (575, 582, 688), மொனராகலை (710), கண்டி (807),
புத்தளம் (1062) ஆகியனவாகும். இதிலே உள்ள சிறப்பு யாதெனில்
அம்பாந்தோட்டை மாவட்டத்திற்றான் கதிர்காமம் உண்டு. கதிர்காமத்
திற்குக் கிட்ட உள்ள இடங்களின் 'குமர' என்ற பதம் காணப்படுவது
தான். கதிர்காம வழிபாடு பண்டைய முருகனது வெறியாட்டு வழி
பாட்டு மரபு வந்த வேலன் பூசாரிகள் வழிவந்த மரபாகும். இதோடு
வட இந்திய வேதநெறிக் குமார வழிபாட்டை இக் காலத்தில் இங்கே
பிராமண குலத்தவர் புகுத்தியிருந்தனர் போல் தெரிகின்றது. காரணம்
பிராமணர் பற்றிக்கூறும் கல்வெட்டுக்களும் இங்கே கிடைக்கின்றன.
(சிற்றம்பலம், சி. க. 1989) இத்தகைய சங்கமிப்பு திருமுருகாற்றுப்
படை தமிழகத்தில் நிலவிய திராவிட / வேத நெறி வழிபாட்டம்சங்கள்
முருகனது தலத்தில் அருகருகே நடைபெற்றதை எடுத்துக் காட்டும்
வர்ணனைகளை ஒத்துக் காணப்படுவதை நினைவூட்டுகின்றது எனலாம்
.

முருகனது இன்னொரு நாமம் ஸ்கந்த ஆகும். இதுவும் வட
மொழித்/திராவிட கலாசாரப் பரிவர்த்தனையை எடுத்துக் காட்டுகின்
றதா என்று கூடச் சிந்திக்க வைக்கின்றது. வடமொழி ஸ்கந்த தமிழ்
கந்தனாக மாறியதா அன்றித் தமிழ்க் கந்தன் வட மொழி ஸ்கந்தனாக
மாறியதா என்பதும் ஆராயப் பாலது. எவ்வாறாயினும் இச் சொல்
திராவிட மொழியாகிய சிங்கள மொழியின் மூதாதை மொழியாகிய
எலுவில் 'கந்த' என நின்று பின்னர் கத என மருவிப் பின்னர் 'லி'
என்ற விகுதி பெற்றுக் கதலி என இக் கல்வெட்டுக்களில் ஸ்கந்தவின்
நாமத்தைக் குறித்து நிற்கின்றது எனப் பரணவித்தானா அபிப்பிராயப்
படுவது ஏற்புடையதாய் அமைகின்றது. அநுராதபுர மாவட்டத்தில்
(264, 266) இரு கல்வெட்டுக்களில் இப்பதம் காணப்படுவது குறிப்
பிடத் தக்கது. முருகனது மற்றொரு பெயர் 'விசாக' ஆகும். இப்
பெயர் எல்லாமாக ஐந்து மாவட்டங்களிற் காணப்படுகின்றது. இவை
முறையே அநுராதபுரம் (5), வவுனியா (356, 357), அம்பாறை (413),
கேகாலை (787), குருநாகல் (889) ஆகியனவாகும். இங்கே குறிப்பிடத்
தக்க அம்சம் யாதெனில் வவுனியா மாவட்டத்தில் விசாகன் என்ற
பெயர் சூடிய இருவரும் தமிழ/தமேழ (தமிழர்) என்ற அடைமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் காணப்படுவதோடு வணிகராகவும் விளிக்கப்படுவதே. தமிழ் வணிகர் தமிழ் நாட்டவரே. இவர்கள்பற்றிய இருவேறு குறிப் க்கள் உள்ள கல்வெட்டுக்கள் அம்பாறை மாவட்டத்திலுள்ள குடிவிலிலும் அநுரதபுரத் தலைநகரிலும் உள்ளது. இவற்றின் காலத்தை கி. மு. 3 / 2 ம் நூற்றுண்டுகளாகக் கொள்ளலாம். பௌத்தத்திற்குத் தானத்தை வழங்கிய இவ்வணிகர் பௌத்தர்களாக நிச்சயமாக இருக்கவேண்டுமென்பது நியதியல்ல. இக்காலத்தில் இந்துக்களும் தானங்களை வழங்கியிருக்கலாம்.

மிகுதிக்கட்டுரை மறுபக்கத்தில் தொடரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. மு. 2ஆம் நூற்றாண்டில் 22 வருடம் அநுராதபுரத்தை மையமாக வைத்து ஈழம் முழுவதையும் ஆட்சி செய்த சேனன், குட்டிகன் ஆகிய இரு தமிழ் வியாபாரிகளும் தமது (இந்து) சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மல்வத்து ஓயாவை அநுராதபுர நகரருகில் ஓடும்படி திசை திருப்பினார்கள் எனப் பாளி நூல்களில் வரும் குறிப்பும், பின்னர் இதே நூற்றாண்டில் அநுராதபுரத்தில் 44 வருடம் ஆட்சி செய்த எல்லாளன் பற்றி பொய்யான சமய நம்பிக்கைகளை உடையவன்; (இந்து சமயம்) பௌத்த நெறி சாராதவன் எனப் பாளி நூல்களில் வரும் குறிப்பும் இக் காலத்தில் இந்துக்களாகவே இவர்கள் விளங்கியதை எடுத்துக் காட்டுகின்றன. இதனால் பௌத்தம் அரச மதமானாலும் கூட இம் மன்னர்களின் ஆதரவு இந்துக்களுக்குக் கிடைத்திருக்கலாம் என்று கூறலாம். முருகனின் இன்னொரு நாமமாகிய மகாசேனன் பற்றிய குறிப்பும் புத்தள மாவட்டத்தில் (1064) காணப்படுகின்றது. இச் சந்தர்ப்பத்தில் வட இந்தியாவில் கிறீஸ்தாப்தத்தை அண்டிய காலப்பகுதி குசானிய மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் முருகனது நாமங்களாகிய ஸ்கந்த, விசாக, குமார, மகாசேன போன்ற பெயர்கள் ஒரு பக்கத்திலும் மறு பக்கத்தில் இத் தெய்வத்தின் உருவங்களும் சித்தரிக்கப்பட்டுக் காணப்படுவதும் ஈண்டு நினைவு கூரற்பாலது. ஈழத்தில் நாணயங்களிலோ அன்றிச் சிற்பங்களிலோ இத்தகைய சான்றுகள் காணப்படாவிட்டாலும் சமகாலத்தில் இந்தியாவில் வழக்கிலிருந்த முருக வழிபாட்டு நாமங்கள் ஈழத்திலும் இருந்தன என்பதை மேற்கூறிய சான்றுகள் உறுதி செய்கின்றன எனலாம்.

முருகனது பிற நாமங்களாகிய குகன், கார்த்திகேயன், சுவாமி போன்றனவும் இப் பிராமிக் கல்வெட்டுகளிற் காணப்படுகின்றன. வடமொழிச் சொல்லாகிய 'குக' உன்பது இக் கல்வெட்டுகளில் 'குட' என மருவி வந்துள்ளது. அநுராதபுர மாவட்டத்திலுள்ள இரு கல்வெட்டுகளில் (1138, 1140) இது காணப்படுகின்றது இவ்வாறே கார்த்திகேயன் பற்றிய குறிப்பும் அநுராதபுர மாவட்டத்தில் உள்ள இரு கல்வெட்டுக் (4, 195) காணப்படுகின்றது. 'கிறுதிகா' என்ற வடமொழி வழி வந்து 'கடி' 'கித' என மருவியே இப் பெயர் இக் கல்வெட்டுக்களில் வழங்கப் பட்டிருக்கின்றது. பாளி நூல்கள் கூட ஆதி ஈழத்தில் பிரபல்யம் பெற்ற விழாக்களின் 'கார்த்திகை விழா' பிரதானமானது என்று கூறுவதை நோக்கும் போது முருக வணக்கத்தின் பெருவிழாவாக ஆதி ஈழத்தில் இது அனுஷ்டிக்கப்பட்டது எனலாம். வடமொழியில் 'சுவாமி' என்ற பதம் முருகனையே குறித்தது என்றும் இதே இக் கல்வெட்டுக்களில் 'சாமி' என மருவியதென்பதும் பரணவித்தானு தரும் விளக்கமாகும். இதற்கான சான்று அம்பாறை மாவட்டத்தில் (417) காணப்படுகின்றது.

மேற்கூறிய தொல்லியற் சான்றுகள் தமிழகத்தைப் போன்று ஈழத்திலும் ஆதியில் திராவிடரின் கடவுளராகிய முருகனின் வழிபாடு வியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்திருந்ததை எடுத்துக் காட்டுகின்றன. ஆதிப் பெருங்கற்காலச் சான்றுகள் இதற்குரிய மிகப் பழைய தடயங்களாகும். இவற்றின் வளர்ச்சியையே சங்க காலத் தமிழகத்திலும் காணலாம். சங்க காலத்தில் வேலனது வெறியாட்டு முருக வணக்கத்தில் பிரபல்யம் பெற்றிருந்தது. இவ் வழிபாட்டு மரபே ஈழத்தில் உள்ள கதிர்காமம், மண்டூர், செல்லச்சந்நிதி ஆகிய இடங்களில் இன்றும் காணப்படுகின்றது. இவ் வழிபாட்டு மரபில் முருகன் தனது முதல் மனைவியாகிய வேட்டுவப் பெண்ணாகிய வள்ளியை மணந்தும், அதற்காக ஈழம் வந்தான் என்ற ஐதீகமும் கற்கால - பெருங்கற்கால கலாச்சார சமய நம்பிக்கைகளின் சங்கமிப்பையும் ஓரளவு எடுத்துக் காட்டுகின்றது எனலாம். எவ்வாறுயினும் இவ் வழிபாட்டு மரபுகளுடன் வட இந்தியாவிலிருந்து புகுந்த முருக வணக்கத்துக்குரிய வட இந்திய வேதநெறி மரபுகளும் சங்கமித்ததைத் தமிழகத்துச் சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுவது போன்று ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்துக் காட்டுகின்றன எனலாம். இவ்விரு மரபுகளும் சங்கமித்த வழிபாடே இன்றைய முருக வழிபாடாகும்.

## உசாவியவை


சிற்றம்பலம், சி. க. 1976 இலங்கையின் ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்கள் காட்டும் இந்துமதம் சிந்தனை தொகுதி 1, இதழ் 1, சித்திரை ப. 29 - 36.

1988 / 89 தமிழர் பற்றிக் கூறும் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றிய சில கருத்துக்கள் தமிழோசை யாழ் பல்கலைக்கழகம் ப. 29 - 35.

1989 கிறிஸ்தாப்தத்திற்கு முன் ஈழத்தில் வாழ்ந்த பிராமண குலங்கள் பற்றிய கல்வெட்டுச் சான்றுகள் புங்குடு தீவுமேற்கு அரியநாயகம் புலம் ஸ்ரீ வீரகத்தி விநயகர் கோயில் மகா கும்பாபிஷேக மலர் ப. 50 - 55.

Begley, V. 1981 Excavations of Iron Age burials at Pomparippu Ancient Ceylon No. 4 P: P. 52-59.

Deraniyagala, S. 1972 The citadel of Anuradhapura 1969: Excavations in the Gedige area: Ancient Ceylon No. 2, pp. 48-162.

Godakumbura, C. E. 1968 Administrative Report of she Archaeological Commissioner for the Financial Year 1965-66 (Colombo)

Paranavitana, S. 1970 Inscriptions of Ceylon Vol. I (Colombo)

Ragupathy, P. 1987 Early settlements on Jaffna: an Archaeological Survey (Madras).

Sitrampalam, S. K 1980 The Megalithic Culture of Sri Lanka Unpublished Ph D. Thesis, University of Poona, Poona.

1989 The Brahmi Inscriptions as a source for the study of Puranic Hinduism in Ancient Sri Lanka in Towards the second centenary of Archaeogy of Sri Lanka Dept. of Archaeology (Colombo).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

FROM

# YOKU TRADING CO.

**332, Hospital Road,**

**Jaffna.**

---

தீக்கரை முருகா திகட்டாத தெள்ளமுதே
வண்ணமயில் வாகனு வள்ளிமணவாளா
உங்கள்
கும்பாபிஷேகம், மண்டலாபிஷேக, சிறப்புற வாழ்த்துகிறேம்

# K. K. A. Kandiahpillai

**132, Hospital Road**

**Jaffna.**

Donated by:-
Mr. S. C. KULARATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments
FROM

# YOKU TRADING CO.

332, Hospital Road,
Jaffna.

[illegible]

# K. K. A. Kandiahpillai

132, Hospital Road
Jaffna.

MANTAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிள்ளையாரின் பிரணவ மூர்த்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலே பரதநாட்டியம்

**பேராசிரியர் வி.சிவசாமி**

தலைவர், சமஸ்கிருதத் துறை, யாழ். பல்கலைக்கழகம்

இலங்கையிலே பழையகாலம் தொட்டு நுண்கலைகள் பல்வேறு வகைகளிலே
வளர்ந்து வந்துள்ளன. இங்கு வாழும் சிங்களம், தமிழ் பேசும் மக்களின்
இடையே கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம் முதலிய கலைகள் நன்கு வளர்ச்சியுற்றாலும்,
இசை, நடனம் குறிப்பாகச் சாஸ்திரீயா இசை, நடனம் ஆகியன ஆதிகாலத்திலே
நன்கு வளர்ச்சியடைந்தமைக்குத் தக்க சான்றுகள் இதுவரை கிடைத்தில எனி
னும் பௌராணிக மரபின்படி இலங்கையை ஆண்ட இராவணன் வீணைக்கொடி
யோன் எனவும், அவன் சாமகானம் பாடிச் சிவபெருமானின் திருவருள் பெற்றான்
எனவும் கூறப்படுகின்றது. இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணம் என்ற
பெயரே யாழ்ப்பாடி (யாழ்வாசிப்பவன்) தொடர்பாலேற்பட்டதென்பர். மட்டக்
களப்பிலுள்ள பாடுமீன்களின் இசை குறிப்பிடற்பாலது. இவை ஐதிகங்களாயி
னும் இலங்கைத் தமிழ் மக்களிடையிலே தொன்மையாகவே சாஸ்திரிய இசை
நிலவி வந்துள்ளமை குறிப்பிடற்பாலது. மேலும், வடக்கு, கிழக்கு மாகாணங்
களிலே நிலவி வரும் தென்மோடி, வடமோடி நாட்டுக் கூத்துமரபுகளும் குறிப்
பிடத்தக்கவையே.

தமிழருடைய சாஸ்திரிய நடனம் பரதநாட்டியமாகும். இதற்கான சாஸ்திர
நூல்கள் பெரும்பாலும் தமிழிலும், வடமொழியிலும் உள்ளன. பரதநாட்டிய
சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த கலையாயினும், இது எடுத்துக்
காட்டும் சமய, தத்துவக் கருத்துக்கள் பெரும்பாலும் தமிழகத்திற்கே தனிச்
சிறப்பானவை. குறிப்பாக, நடராஜத்திருவுருவமும், சைவசித்தாந்தமும், பரத
நாட்டியமும் ஒரே அடிப்படையினைக் கொண்டுள்ளன என்பது குறிப்பிடற்பாலது.
வேறொரு வகையாகக் கூறின். சைவசித்தாந்தத்தின் கலை வெளிப்பாடுகளாகவே
நடராஜத் திருவுருவமும், பரதநாட்டியமும் விளங்குகின்றன எனலாம். எனவே,
சைவசமய வளர்ச்சிக்கும், பரத நாட்டிய வளர்ச்சிக்குமிடையிலுள்ள பிரிக்க
முடியாத நெருங்கிய உறவுகள் குறிப்பிடற்பாலன.

சிலப்பதிகார காலம் தொட்டாவது இக்கலை தொடர்ந்து தமிழகத்திலே
வளர்ந்து வந்துள்ளது. தமிழகத்திலே சிறப்பாக வளர்ந்து வந்த பரதக்கலை,
இந்தியாவுக்கு வெளியேயுள்ள இலங்கை, இந்தோனேசியா, வியட்னாம், கம்போடியா,
தாய்லாந்து முதலிய நாடுகளிலும் காலப்போக்கிலே பரவிவந்துள்ளது. இந்தியா
வுக்கு மிக அண்மையில் இருப்பினும், இலங்கையிலிதன் தாக்கம் ஒப்பீட்டு ரீதி
யிலே குறைவாகும். பொதுவாக, இலங்கையிலே வாழும், சிங்களவரும், தமிழரும்
முறையே பௌத்தம், இந்துசமயம் ஆகியவற்றைப் பின்பற்றுகின்றனர். இவர்
களைவிடக் குறிப்பிட்ட தொகை ஸ்லாமியரும், கிறிஸ்த்தவர்களும் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு சிங்களவர் மத்தியிலே பௌத்தம் நன்கு பின்பற்றப்பட்ட காரணத்திளுலோ அல்லது வேறு காரணங்களாலோ சாஸ்திரீய இசை, நடனமரபுகள் புராதன காலத்தில் (கி. பி. 11ம் நூற்ருண்டுவரை) நன்கு வளர்ச்சியடைந்ததில. சோழராட்சி தொடக்கம் (கி. பி 11ம் நூற்ருண்டு தொடக்கம்) சில நூற்ருண்டுகளுக்கு மேற்குறிப்பிட்ட கலைகள் சிங்கள அரசுகளிலே, குறிப்பாக அரச அவைகள், இந்துக்கோயில்கள் ஆகியனவற்றிலே தொடர்ந்து இடம் பெற்றன. தமிழரைப் பொறுத்த மட்டிலே, தமிழ்நாட்டிற் போன்று, இங்கு வாழ்ந்த தமிழர் மத்தியில் இக்கலை நிலவிற்று எனலாம்.

மேலும் கி. பி. 16, 17ம் நூற்ருண்டுகளிலேற்பட்ட போர்த்துக்கிச, ஒல்லாந்தப் படையெடுப்புக்களாலும் அவர்கள் ஆட்சியின் போது பின்பற்றப்பட்ட சுதேச கலையழிப்புக் கொள்கையிஞலும், இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலிருந்த கோயில்கள் முதலியன அழிக்கப்பட்டன. இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலிய நுண்கலைகள் இந்துக்களிடையிலே பெரும்பாலும் கோவிற்கலைகளாகவே நிலவி வந்துள்ளன. கோயில்கள் அழிக்கப்பட்டபோது, அவை சார்பான கலைகளும் மங்கி மறைந்தன. இதஞலேதான் போலும், கரையோரப்பகுதிகளில் இசை நிலவியதற்கான சான்றுகள் நன்கு கிடைத்தில. எனினும், சில இலக்கிய தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன.

பொலந்நறுவ, தேவிநுவர போன்ற இடங்களிலிருந்த சைவ, வைஷ்ணவக் கோவில்களில் தேவரடியார்கள் இருந்து இசை, நடனப் பணிகள் புரிந்தமைக்கான சான்றுகள் உள்ளன. கந்தளாயில் இருந்த விஜயராஜஈஸ்வரம் எனும் சிவாலயத்திலே ஏழு தேவரடியார் இருந்தனர் என அறியப்படுகின்றது. 1

கி. பி. 1344லே இலங்கைக்கு வந்த மொரொக்கோ நாட்டுப் பயணியான இபின் பட்டுட்டாவின்பிரயாணக் குறிப்பிக்களின் மூலம் தேவிநுவரயில் (Dondra) இருந்த பெரிய விஷ்ணுவாலயத்திலே இறைவன் திருமுன் குறிப்பிட்ட கிரியைகளின் போது ஆடுவதற்கும், பாடுவதற்குமாக 500 மாதர் (தேவரடியார்) இருந்தனர் என அறியப்படுகின்றது. 2

ஒப்பீட்டு ரீதியிலே திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலிய புராதன சிவாலயங்களிலும் தேவரடியார் இருந்தனர் எனலாம்.

அண்மைக் காலத்திலே கலாச்சார முக்கோணப் பிரதேச அகழ்வாய்வின் போது அநுராதபுரத்திலுள்ள அபயகிரிவிகாரைப் பகுதியிலே நடனநிலையிலுள்ள அர்த்தநாரீஸ்வரர் சிலையொன்று கிடைத்துள்ளது. சிவன், சக்தி, தாண்டவம், லாஸ்யம் பற்றிய கருத்துக்களை உள்ளடக்கிய இச்சிலை நன்கு ஆராய்தற்குரியது. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரன அர்த்தநாரீஸ்வரர் சிலைகள் வேறுசில இடங்களிலும் கிடைத்துள்ளன. இலங்கையில் எழுதப்பட்ட பாளி, சிங்கள, சம்ஸ்கிருத இலக்கிய நூல்களில் அங்கும் இங்கும் இசை, நடனம் பற்றிய சில குறிப்புகள் உண்டு. பொலந்நறுவையில் இருந்து ஆட்சி செய்துவந்த முதலாம் பராக்கிரமபாகு (1153-1186) சரஸ்வதி மண்டபத்தினை நிறுவி இசை, நடனமாகியவற்றையும் போற்றிப் பேணி வந்தான். இவனுடைய பட்டத்தரசியான லீலாவதி நடனத்திலே தேர்ச்சி பெற்றிருந்தாள். 4

கி.பி. 14ம் நூற்றாண்டு தொடக்கம் 16ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியிலே சிங்களத்தில் எழுதப்பட்ட சந்தேசய(தூது) ப் பிரபந்தங்களிலே சமகாலத் தென்னிலங்கையிலே நிலவி வந்த இசை, நடனம் பற்றிய குறிப்பிடத் தக்க தகவல்கள் காணப்படுகின்றன· அரசசபைகளிலும், இந்துத் தெய்வங்களின் திருமுன்பும் இடம்பெற்றுவந்த நடனம் பற்றிய வருணனைகள் இந்நூல்களில் உண்டு. டெடிகமவில் இருந்து, ஆட்சிபுரிந்து வந்த ஐந்தாம் பராக்கிரமபாகுவின் அரண்மனையில் இடம்பெற்ற நடனங்களைப் பற்றித் திசரசந்தேசய எனும் நூல் விவரிக்கின்றது. ''நடனமாதரின் கண்புருவங்கள் வண்டுகளின் நிரை போல நெளிகின்றன.'' எனவும். ''நடனமாதர் கடைக்கண்களாலே பார்க்கின்றனர்'' எனவும் அந்நூல் கூறும். களனியில் இருந்த விபீஷணனின் தேவாலயத்திலே ''ஆடல் மகளிர் கைவழி நயனம் செல்ல ''ஆடுதல் பற்றிச் சேலலிஉறினிசந்தேசய குறிப்பிடுகின்றது. ஸ்ரீராகுலர் தமது பரவி சந்தேசயத்திலே நாட்டியகரணம் பற்றியும் நடனமாதின் அங்க அசைவுகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். 5

மேற்குறிப்பிட்ட நூல்களிலே நடனம் பற்றியகுறிப்புக்கள், வருணிக்கப்பட்ட நடனக்காட்சிகள் முதலியனவற்றின் அடிப்படையிலே நோக்கும் போது, பரதரின் நாட்டிய சாஸ்திர மரபு இக்காலத்தில் இங்கு பின்பற்றப்பட்டு வந்தமை தெளிவு. இங்கு பெரும்பாலும் சமகாலத்தமிழகத்திலே நிலவிய பரதமே நிலவியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. றேசகம், அபிநயம் முதலியன பரதநாட்டிய மரபை ஒட்டியவை. பரதநாட்டியத்தைப் போன்று இதனையும் பெண்கலைஞரே பெரும்பாலும் ஆடிவந்தனர். மேலும், இக்காலகட்டத்தில் இங்கு கேரள மாநிலத்துக் கதக்களியோ, கண்டி நடனமோ இடம் பெற்றதற்குத் தக்க சான்றுகள் இல்லை எனவும், பரதநாட்டியமே நிலவியிருக்கும் எனவும் இலங்கை நடனம் பற்றி ஆராய்ந்த பேராசிரியர் இ.ஆர் சரத்சந்திரா சுட்டிக்காட்டியுள்ளார். 6

பதினாறும் நூற்றாண்டிலேற்பட்ட போர்த்துக்கீச ஆட்சியைத் தொடர்ந்து இந்நடனம் இங்கு மங்கியிருக்கலாம். மேலும், இந்நடனம் சிங்களப் பொது மக்களை அதிகம் கவரவில்லைப் போலும். இது பெரும்பாலும் நகரங்களிலே தான் நிலவிற்று எனக் கருதப்படுகின்றது. இந்நடனத்தின் இந்துசமயம் கருப்பொருள் பௌத்த மக்களைக் கவராமையில் வியப்பில்லை. இதைவிட மலையகத்தில் உருவாகி வளர்ந்து வந்த கண்டிநடனம் பரவ, இதன் செல்வாக்குக் குன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கலாம். கண்டி நடனத்திலும் பரத நாட்டியத்தின் சில அமிசங்கள் உண்டு. ஆனுல், அது பெரும்பாலும் கதக்களியின் செல்வாக்கு உடையதென ஒருசாரார் கருதுவர். சாஸ்திரீய நடனங்களாக இம்மூன்றும் பரதநாட்டிய சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதாலும் பொது அமிசங்கள் காணப்படுதல் இயல்பே.

பழந்தமிழ் நூல்களில் ஒன்ருன சிலப்பதிகாரத்திற்கு எழுதப்பட்ட உரை நூல் என்பது தெளிவில்லை. இக்கால இலங்கையிலே நிலவும் சோகரி சிலம்பு கூறும் சொக்கம் என சாரார் கருதுகின்றனர்.

மேலும், கி. பி. 11ம் நூற்ருண்டு தொடக்கம் 16 ம் நூற்ருண்டு வரையுள்ள காலப்பகுதியில் நிலவிய பொலநறுவ, யாப்பகூவ, கம்பளை, டெடிகம, கோட்டை அரசுகளிலே நிலவிய சாஸ்திரீதிய நடனம் பரதமாயிருந்திருக்கலாம் எனக் கொள்ளுதற்குக் காரணங்கள் உண்டு. இலங்கையிலே கி. பி. 10ம் நூற்ருண்டு முடிவிலேற்பட்ட சோழப்பெருமன்னர் ஆட்சியின் போது, பரதக்கலை முன்னை யிலும் பார்க்க இங்கு நன்கு பரவ வாய்ப்புக்கள் ஏற்பட்டன. இலங்கையிலே சோழரின் தலைநகராக விளங்கிய பொலந்நறுவையில் அமைக்கப்பட்ட வானவன் மாதேவி ஈவரத்திலே (சிவன் கோவிலில்) திருப்பணி புரிந்த தேவரடியார் கோவி லிலே ''நந்தாவிளக்கு'' எரித்தனர் எனக் கல்வெட்டுக் கூறும். சோழர் காலத்திய வெண்கலாத்தாலான நேர்த்தியான நடராஜத் திருவுருவங்கள் பொலந்நறுவையில் கிடைத்துள்ளமை குறிப்பிடற்பாலது. முன்னேஸ்வரம் ஆலயத் திலுள்ள நடராஜத் திருவுருவமும் பழமையானது ஆனுல் இது சோழப்பெரு மன்னர் காலத்தியதா என்பது திடமாகக் கூறமுடியாது.

சோழரைத் தொடர்ந்து இலங்கையில் ஆட்சிபுரிந்த முதலாம் விஜபாகு, முதலாம் பராக்கிரமபாகு போன்ற சிங்களமன்னர்களும் இக்கலையினை ஆதரித்த னர். தொடர்ந்து ஏற்பட்ட இரண்டாவது பாண்டியப்பேரசு, விஜயநகரறபேரரசு தொடர்புகள்மேற்குறிப்பிட்டகலைத்தொடர்புகளை மேலும்வலுப்படுத்தியிருக்கலாம் மேலும் தமிழ்நாட்டிலே சிறிது காலம் கி. பி 14 ம் நூற்ருண்டிலேற்பட்ட முஸ்லிம் ஆதிக்கத்தின் விளைவாகவும், கலைஞர் சிலர் வடஇலங்கைக்கு மட்டுமன்றித் தென் னிலங்கைக்கும் சென்றிருப்பர். மேலும் இக்காலப் பகுதியிலே, - கி. பி 33ம் நூற்ருண்டு முடியும் வரையுள்ள காலப்பகுதியிலே, தென்னிலங்கையில் இருந்த அரச அவைகளிலே தமிழ்ச் செல்வாக்கு நிலவியமை குறிப்பிடற்பாலது. கி. பி 16ம் நூற்ருண்டுக் கோட்டை அரசில் ஆட்சி புரிந்த புவனேகபாகு தமிழிலே கைச்சாத்திட்டான் என அறியப்படுகிறது. மேற்குறிப்பிட்ட காலப்பகுதியிலே யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு தமிழரசு ஒன்று நிலவியதும் ஈண்டுக் குறிப்பிடற்பாலது.

நடனம் பற்றி மேற்குறிப்பிட்ட சந்தேசய (தூது) க்காவியங்கள் கூறும் கருத் துக்களைச் சமகாலத்திய சில சிற்பங்களும், ஓவியங்களும் உறுதிப் படுத்துகின் றன. யாப்பகூவவிலும், கடலதெனியாவிலும் உள்ள கல்லாலான போதிகைச் சிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிலே உள்ள நடன உருவங்கள் குறிப்பிடற்பாலன. யாப்பகூவச் சுவர்களில் உள்ள நடன உருவங்கள் சைவ உலகின் கோயிலாக விளங்கும் சிதம்பரம் கோயிற் சுவர்களில் உள்ளவற்றுடன் ஒப்பிடத்தக்கவை எனப் பேராசிரியர் சரத் சந்திரா குறிப்பிட்டுள்ளார். இந்நடன உருவங்களிலே நடராஜத்திருவுருவமும், சதுர, கரிஹஸ்த, கண்டதுசி, திகுஞ்சித முதலிய கரணங்களைக் காட்டுவனவும் குறிப்பிடற்பாலன. மேலும், சமகாலத்திய வேறுசிற்பங்களிலும் ஓவியங்களிலுமுள்ள பல நடனமாதர் உருவங்கள் சாஸ்திரிய நடனநிலையில் உள்ளன. பெடிகமவிலே கிடைத்துள்ள விளக்கிலும், சாஸ்திரீய நடனநிலையில் உள்ள பெண் உருவம் உண்டு. எம்பெக்க தேவாலயத்தில் உள்ள மரச்சிற்பங்களிலும் உள்ள நடனமாதர் பரதர் கூறும் பல்வேறு நடனநிலைகளில் உள்ளனர்.[9]

தமிழர் மத்தியிலே நடனம் சிலகாலமாக ஒழுக்கக் கேடுள்ளவர் கலையெனக் கருதப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டு வந்தது போலச் சிங்கள மக்கள் மத்தியிலும் இக்கலைஞர் புறக்கணிக்கப்பட்டு வந்தனர். ஆனால் சமகாலச் சிங்களவர் மத்தியிலே நடனக்கலையில் புதிய விழிப்பும், உத்வேகமும் ஏற்பட்டுள்ளன. கிராமிய நடனங்கள், கண்டிநடனம ஆகியவற்றைவிடப் பரதநாட்டியத்தையும் சிலர் கற்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஆட்சிபுரிந்து வந்த தமிழ் மன்னர் பரதக்கலையினை ஆதரித்து வளர்த்து வந்தனர். இக்காலத்தில் எழுதப்பட்டவை பாபாடல், கைலாயமாலை முதலிய நூல்களிலே நடனம் பற்றிய சில குறிப்புக்கள் உண்டு. எடுத்துக்காட்டாக, வையாபாடலிலே "நச்சுவிழி நாட்டியம்' செய்வோர்", "ஆடும் மாதர் வலம்வர", "கறுவு மனக்கணிகையர்" என வருவனவும் கைலாயமாலையிலே "பங்கமுடன் மாதர் நடிக்க" என வருவதும் குறிப்பிடற்பாலன. எனவே, யாழ்ப்பாணத்திலிருந்த சில பெரிய கோவில்களிலாவது தேவரடியார் இருந்து சமயப்பணிகளும், கலைப்பணிகளும் செய்திருப்பர் எனலாம். யாழ்ப்பாண அரசை வென்று தத்தம் ஆதிக்கத்தை ஏற்படுத்திய போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களிலே ஏற்கனவே குறிப்பிட்டவாறு நடனக்கலை ஆதரவின்றி மங்கிற்று. தொடர்ந்து ஏற்பட்ட பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலே மீண்டும் தலைகாட்டிற்று. இக்காலதிலே சமகாலத்தமிழகத்திலே போன்று தேவதாசிகள் இங்கும் ஒழுக்கம் கெட்டவர்களாக வாழ்ந்தனர். இதனால் ஆறுமுகநாவலர் போன்றோர் இவர்களைக் கண்டித்துள்ளனர்.

கோவில்களிலே இசை போன்று
எனினும் ஆகமமுறைப்படி அமைக்கப்பட்ட நாவலர் பெருமான்
நடனமும் ஒழுக்கமுள்ள கலைஞர்களாலே நடத்தப்படுதலை
விரும்பிலர் எனக் கூறமுடியாது. எனினும் சில தேவதாசிகள் தமிழ் நாட்டிலி
ருந்து இங்கு வந்து சென்றனர். இவர்கள் பெரும்பாலும் ஒப்பந்த அடிப்படை
யிலே சில வணிகர், தரகர் முதலியோரால் கொண்டுவரப்பட்டன. வேறுசிலர்
இங்கு தொடர்ந்து வாழ்ந்தனர். வண்ணார்பண்ணை, இணுவில், நல்லூர், மாவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசித்து வந்தனர். கி. பி 19ம்
டபுரம், அளவெட்டி போன்ற இடங்களில் அவர்கள் வசித்து வந்தனர். கி. பி 19ம்
நூற்றாண்டு யாழ்ப்பாணத்திலே வாழ்ந்த கனகி எனும் தேவதாசி வண்ணை
வைத்தீஸ்வரன் கோயில் ஒரு நர்த்தகியாகவும் விளக்கினாள். இவளைப் பற்றி நட்
டுவச் சுப்பையனார் எனும் புலவர் அங்கதச்சுவை (Satire) ததும்ப கனகிபுரா
எனும் நூலினை இயற்றியுள்ளார். ஆறுமுகநாவலர் போன்றோர் நேரடியாகவே
ஒழுக்கமற்ற தேவதாசிகளைக் கண்டிக்க ஏறக்குறைய அதே காலத்திய சுப்பைய
னார் அவர்களை எள்ளி நகையாடி இலக்கிய மூலம் அவர்களைக் கண்டித்துள்ளார்
எனலாம். நடனக்கலையில் மட்டுமன்றி பரத சாஸ்த்திரத்திலும் தேர்ச்சியுள்ள
அறிஞர் சிலர் இங்கு வாழ்ந்தனர். கி. பி. 17ம் நூற்றாண்டிலே, தமிழ்நாட்டிலே
வாழ்ந்த பிரபல நாட்டியக் கலைஞராகிய கங்கை முத்துப்பிள்ளை (தஞ்சை நால்வரின்
பாட்டனார்) எழுதியுள்ள பரதசாஸ்திர நூல்களில் ஒன்றான நடனாதிவாத்யரஞ்சனம்
எனும் நூல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணநாவலர் முன்னி
லையில் பரிசோதித்துத் தமிழ்நாட்டிலே பிரசுரிக்கப் பட்டதாக அறியப்படுகின்
றது. 10 மேலும் இந்த நூற்றாண்டின் முப்பதுகளிலே பரதக்கலை மறுமலர்ச்சிக்கு
அரும் தொண்டாற்றியவர்களிலே கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியும் ஒருவ
ராவர்.

ஒழுக்கமும், சமயப்பற்றுமுள்ள திருவாரூர் ஞானம் எனும் நடனமாது இவ
ருக்கு நடனக்கலை பற்றி அறிவுறுத்தினார் எனக் கூறப்படுகின்றது நடனமாண
வர்கள் கற்கவேண்டிய நந்திகேஸ்வரரின் அபிநயதர்ப்பணம் எனும் நூலிற்கு இவர்
துர்க்கிராலா எனும் அறிஞரோடு சேர்ந்து ஆங்கில மொழிபெயர்பு ஒன்றினை
1917 லே நியூயோர்க்கிலே வெளியிட்டார். இதனால், ஆங்கில கற்ற இலங்கையர்,
இந்தியர் மட்டுமன்றி, வேறு நாட்வரும் இந்திய நடனக் கலையின் சிறப்பினை
அறியவும், கற்கவும் தூண்டினார். இந்திய, இலங்கைக் கலைகளைப் பற்றி ஆராய்ந்து
விரிவுரையாற்றியும், எழுதியும் இந்நாடுகளின் மக்கள் தத்தம் கலைகளின் சிறப்
பினையும் பெருமையையுப அறிந்து விழிப்படையச் செய்தார். தமிழ் நாட்டிலே
பரதக்கலை மறுமலர்ச்சியடைவதற்கும் இவர் அயராது உழைத்தவர், மரபுவழிக்
கலைஞராகிய தேவதாசிகள் இழிகுலத்தவரன்றி, உயர்ந்தசமூக நிலைக்குரியர் எனும்
கருத்தினை முன்வைத்துக் கட்டுரைகள் எழுதினார், 1918ல் இவர் வெளியிட்ட
சிவநடனம் எனும் கட்டுரைத்தொகுப்பு குறிப்பிடற்பாலது. இதிலுள்ள சிவநடனம்
இந்திய இசைஆகியன பற்றிக் கட்டுரைகள் நன்கு குறிப்பிடற்பாலன. சுவாமி
விபுலானந்தர் பண்இசை கர்நாடகஇசை குறிப்பாக யாழ் ஆகியனபற்றி மட்டு
மன்றிப் பரதம் பற்றியும் எழுதியுள்ளார். வடமொழி நாடகவியல் பற்றி தனஞ்
ஜயன் எழுதியுள்ள தசரூபத்தினைத் தமிழிலே மொழி பெயர்த்துத் தமது மதங்
சுளாமணி எனும் நூலிலே சேர்த்து வெளிட்டுள்ளார்.

இந்த நூற்றாண்டின் நாற்பதுகளிலே பிரசித்தி பெற்ற கதக்களி கலைஞரான
குருகோபிநாத், புகழ்பெற்ற பரதக்கலைஞரான பாலசரஸ்வதி, பரதநாட்டிய
மேதை பந்தனை நல்லூர் ஜெயலக்ஷ்மி முதலியோர் யாழ்ப்பாணத்திலும் தமது
நடனக் கச்சேரிகள் நிகழ்த்திச் சென்றனர். இவை சிலரைக் குறிப்பாக நடனத்
திலீடுபடச் செய்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலே, 1947ம் ஆண்டுத் தேவதாசிச் சட்டம் நிறைவேறியதைத் தொடர்ந்து கோவில்களிலே தேவதாசிகள் நடனமாடுதல் தடைசெய்யப்பட்டது. இதன் விளைவாகப் பல நூற்றாண்டுகளாக கோவில்களில் இடம் பெற்று வந்த சதிர் அல்லது பரதநாட்டியம், பொதுமன்றங்களிலும், வேறு அரங்குகளிலும் இடம் பெறலாயிற்று. இப் போக்குத் தமிழ்நாட்டிலே மட்டுமன்றி இலங்கையிலும் ஏற்படலாயிற்று.

தமிழகத்திலேற்பட்ட பரதக்கலை மறுமலர்ச்சியைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்திலே பரதக்கலை மறுமலர்ச்சிக்குப் பங்களித்தோர்களிலே திரு. ஏரம்பு சுப்பையா, திரு.எம்.எஸ்.பரம், கலைப்புலவர் நவரத்தினம், திருமதி மகேஸ்வரி நவரத்தினம், திரு.வீரகத்தி, திரு.எஸ்.ஆர். இராசநாயகம், கலையரசு சொர்ணலிங்கம் முதலியோர் குறிப்பிடற்பாலர். முதலிலே இங்குள்ள நடனக்கலைஞர்களிடமும் பின்னர் தமிழகத்திலுள்ள வழுவூர் ராமையாபிள்ளை, அடையாறு லஷ்மணன் போன்ற நடனக்கலைஞர்களிடமும், கலாக்ஷேத்திரம் போன்ற பிரசித்தி பெற்ற கலைக்கூடங்களிலும், நடனக் கலை பயின்று, பல கலைஞர்கள் இலங்கையிலே இக்கலையினை கற்பித்து வளர்த்து வருகின்றனர். யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய இடங்களிலே தனிப்பட்ட கலைஞர் கூடங்களிலும், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு கலை நிறுவனங்களிலும் பரதக்கலை இன்று போதிக்கப் படுகின்றது. இவற்றுள்ளே நிறுவனரீதியாக இயங்குவனவற்றிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த இராமநாதன் நுண்கலைக்கழகம், வட இலங்கைச் சங்கீதசபை, மட்டக்களப்பிலுள்ள விபுலாநந்தர் இசைக்கல்லூரி, கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி முதலியன குறிப்பிடற்பாலன. நடனம் ஒரு பாடமாக ஆரம்ப, இடைநிலை, உயர்நிலைக்கல்விக் கூடங்களிலே கற்பிக்கத் தொடங்கிய பின் இதனைக் கற்போர் தொகை அதிகரித்து வருகின்றது.

இலங்கையைச் சேர்ந்த பரதக்கலைஞர் சிலர் வெளியே பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் அவுஸ்ரேலியா போன்ற பிற நாடுகளிலும் இக் கலையினைக் கற்பிக்கின்றனர். சதங்கை ஒலி அரங்கேற்றங்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகளிலும், இலங்கையின் பிரதான நகரங்களில் மட்டுமன்றி வெளிநாட்டுத் தலைநகரங்களிலும் அடிக்கடி கேட்கிறது. இலங்கையிலுள்ள சில சிங்களக்கலைஞர்களும் இதனைக் கற்றும் கற்பித்தும் வருகின்றனர். சமகாலத்தில் அவர்களிற் சிலர் அரங்கேற்றமும் செய்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புக்கள்


1. *Paranavitana S. Epigrahia Zeylonica, Vol III, London. 1943,* pp *191 – 196,*
2. *Ibn Batuta. The Rehla (Tr. by M. Husain). Ch. XvII. Baroda, pp. 223–224*
3. தினகரன், கொழும்பு, 22. 08. 1982, ப. 1
4. *Makulolluwa W. D. Dances of Ceylon, Ceylon. P. 32*
5. *Sarachchandra E. R. Teh Folk Drama of Ceylon. 1966. P. 15*
6. *do — Ibid*
7. *Krishna Sastri H., South Indian Inscriptions, Vol IV. Madras 1924, P. 490*
8. *Sarachchandra E. R, Op. cit, P. 16*
9. *do — Ibid*
10. கங்கைமுத்துப்பிள்ளை, நடனதிவாத்யரஞ்சனம், ஸ்ரீ அனவரதநாதர் சன்னிதானத்து மகாவித்துதான் நெல்லையப்பிள்ளை அனுமதிப்படி யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணநாவலர் அவர்கள் முன்னிலையில் பரிசோதித்து (வெளியிடப்பட்டது), திருநெல்வேலி, 1823.



உ

அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் — கொண்டு
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய

யாழ். ரேட் சென்ரர் **BATA ASENT**

**பாட்டா ஏஜென்சி**

11, நவீன சந்தை

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தில் முருகன் வழிபாடு

திரு. சிவ. மகாலிங்கம் B A.
( ஆசிரியர் - யாழ். இந்துக் கல்லூரி )

## கலியுகமும் முருக அவதாரமும்;

கலியுகம் பிறந்தது. தர்மங்கள் ஒளிந்து எங்கும் அதர்மங்கள் தலைதூக்கி நின்றன. கொலைக்குக்கொலை; பொய்க்கு பொய் வஞ்சனைக்கு வஞ்சனை என்ன நிலை தோன்றியது. இதனால் கவலைப்பட்ட சிரேஷ்டர்கள் அனைவரும் விவசாய முனிவரிடம் சென்று வேதங்களை வகுத்த பெரியோரே அதர்மத்தின் கொடுமை தாங்கமுடியாமல் நாம் துன்பப்படுகிறோம். எங்கும் அதர்மமே தலைவிரித்தாடுகிறது. தர்மம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் இருக்கிறது. இந்தக் கொடுமையிருயிலிருந்து விமோசனம் அடைவதற்கு நீங்களே நமக்கு வழிகாட்ட வேண்டும் என்று பிரார்த்தித்து நின்றார்கள் வியாச பகவான் போன்ற தவயோகிகள் மோன நிஷ்டை புரிபவர்கள் மோனமென்பது ஞான வரம்பு மௌனம் நீங்கி அவர்களது நாவிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஆப்தவாக்கியங்களாக வேத மந்திரங்களாகவே அமைந்துள்ளன. தாம் அனுபவித்த இறையருள் இன்பத்தை உலக மக்களும் பெறவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு அனுபூதிச் செய்வார்கள் நமக்குத் தந்த அருள் வாசகங்களே. நமது இக உலக வாழ்விற்கும் பர உலக வாழ்விற்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்குகளாக அமைந்துள்ளன.

''நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''

என்றே நமது இலக்கண நூலாகிய தொல்காப்பியமும் செப்புகிறது.

''ஸ்கந்தஸ்ய கீர்த்தி மதுலாம் கல் கல் மஷ நாசி நீம்''

என்று மனங்குளப்பிய நிலையில் கலக்கமுற்றிருந்த முனி சிரேஷ்டர்களுக்கு வியாச பகவான் திருவாய் மலர்ந்தருளினார். கலியுக வரதனாகிய கந்தவேள் பெருமானின் தரிசனமே கலிகாலப் பாவங்களைப் போக்கக் கூடிய அருமருந்து என்பதுதான் எத்திருவாக்கின் பொருளாகும்.

சிவபெருமானது ஆற்றல் வெளிப்பாடே முருகனின் திருஉருவம் மன்மதனை தமது நெற்றிக் கண்ணிலிருந்தே குமரனாகிய முருகனையும் தோற்றுவித்தார். இறைவனுடைய ஐந்து திருமுகங்கள் ஈசானம், தற்புருடம் அகோரம், வாமதேவம் சத்யோஜாதம், என்பனவாகும் இவை முறையே ஆகாயம், கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்ற ஐந்து திசைகளை நோக்குகியுள்ளன.

(1) ஈசானம்: எல்லாவற்றையையும் ஆளும் தன்மையுடையது.

(2) தன்புருடம்: வேதபரீரம் மானுட சரீரம் ஆகியவற்றில் அதிட்டிட்து நிற்பது.

(3) அகோரம்: சாந்தமாக இருப்பது.

(1) வாமதேவம் அறம் பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை ஆன்மாக்களுக்கு அருள வல்லது.

(5) சத்யோஜாதம்: உயிர்களுக்கு உடல்களைத் தோற்றுவித்து உள் தோன்றி அருள வல்லது.

இந்த முகங்களுடன் கீழ்நோக்கும் அதோமுகமும் சேர்ந்து ஆறு முகத்துடன் முருகப்பெருமான் உயிர்கட்குத் தனிப்பெரும் கருணை புரிகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோமஸ் கந்த மூர்த்தம்

இறைவனுக்கும் உமைக்கும் இடையிலே முருகப் பெருமான் வீற்றிருந்து சோமஸ் கந்த மூர்த்தத்தில் அடியார்களுக்கு அருள் புரிகிறார். சோமஸ்கந்த மூர்த்தியே சிவாலயங்களில் திருத்தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிக்கிறார் இறைவன் குடும்பம் உடையவராக எழுந்தருளுகிறார். குடும்பத்தோடு வாழும் மக்களுக்கு அருளைப் பொழியவும் மனைவி பிள்ளைகளுடன் அவன் "நங்கடம்பனைப் பெற்றவன் பங்கினனாக' எழுந்தருளுகிறான். அருளைத் தன்னிடத்தே அடக்கிக் கொண்டவராகிய சிவபெருமான் அதனை வெளிப்படுகிறார். அந்த அருளே உமை வடிவில் ஒளிர்கிறது. அது பின்னும் விரிந்து குழந்தை வடிவில் பாய்கிறது. அந்தக் குழந்தையே முருகன் அதுவே மரம் பூத்துக் கனி குலுங்க நிற்பதுபோல அருளின் முழுப்பயனும் அடைய வைக்கும் திருக்கோலம் சோமஸ்கந்த மூர்த்தி ஆகும்.

## வேத ஆகமங்களின் முருக வழிபாடு

கௌமாரம் என்னும் சமயத்துக்குரிய கடவுள் குமரன் என்பதின் பொருளாகும். பிரமாவாய் உலகத்தைப் படைத்தும் விஷ்ணுவாய் உலகத்தைக் காத்தும் உருத்திரராய் உலகத்தை அளித்தும்நிற்கின்ற பரஞ்சோதிப் பிழம்பே ஆறுமுகப்பெருமான் என்பது முருக உபாசகர்களின் நம்பிக்கையாகும் சிவசொரூபம் சக்தி சொரூபம் ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்து அமையப்பெற்றவன் சுப்ரவண்யன் தெய்வத்தையும் அதன் சக்தியையும் பிரித்து உணர முடியாது. அக்கினியும் உஷ்ணமும் இணைபிரியாததுபோல சிவமும் சக்தியும் இணைபிரியாதவர்கள் சுப்ரமண்யன் என்பதன் பொருள் பிரம்ம ஞானத்தில் விருப்பத்தை வளர்ப்பது என்பதாகும் வேதகாலத்தில் முனிவர்கள் தங்கள் யாகாதிகளை முடித்தபோது சுப்ரமணயோம் சுப்ரமண்யோம் சுப்ரமண்யோம் என்று மும்முறை கூறுவாக தைத்ரீயாணயாம் கூறுகிறது. காளிதாசமகாகவி குமார சம்பவத்தில் குமாரக்கடவுளின் பெருமையைக் குறிப்பிட்டார் பாணினி தனது வியாசரண சூத்திரத்திலும் ஸ்ரீ தத்துவ நிதியிலும் குமரக்கடவுளின் சிறப்பைக் குறிப்பிடுகிறார்.

சிவாகமங்களில் காமிகம் காரணம் சாப்பிரபேதம் முதலியன முருகனின் வரலாற்றுக் குறிப்பிக்களை கூறுகின்றன. உத்தர காமிகம் முருகனுக்கு தனிக்கோயில் அமைக்கக் கூடிய முறையை கூறுகிறது. குமார தந்திரம் என்னும் ஆகம நூல் முழுவதும் முருகனின் வரலாறு பிரதிட்டை முறை விழா பூசை, விரதம் முதலியவற்றை முறையாக் குறுகிறது.

## இதிகாச புராணங்களில் முருக வழிபாடு.

முருகப் பெருமானின் மகிமை இதிகாசங்களில் வருகிறது. இராமயத்தில் விசுவாமித்திரா இராமலட்சுமணருக்கு கங்கையின் வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும் போது முருகனைப் பற்றியும் கூனகிறார். பாரதம் முருகனை யோக புருஷர் எனப் போற்றுகிறது. குமரனின் பெயர்கள் மகாபாரதத்தில் வனபர்வத்தில் முப்பத்திரண்டாம் அதிகாரத்தில் தருமரின் வேண்டுகோளுக்கிணங்கத் தொகுத்து கூறப்பட்டுள்ளது. முருகன் தேவ சேனாதிபதியாகவும் காட்சி தருகிறான் "சேனைத் தலைவர்களில் நான் ஸ்கந்தன்" என்று கிருஷ்ணர் பகவத்கீதையில் சொல்லுமளவிற்கு முருகன் பெருமை பரந்துள்ளது.

பதஞ்சலி தமது காலத்தில் சிவன் ஸ்கந்தன் விசாக என்ற தெய்வங்களின் வணக்கம் இருந்ததாக குறிப்பிடுகிறார். குஷாண மன்னனான கனிஷ்க மன்னன் நாணயத்தில் கிரேக்க எழுழதில் ஸ்கந்தோ. விசாகோ என்ற பெயர்களில் முருகப் பெருமானின் திருவுருகங்கள் காணப்படுகின்றன. வேத மாத்திரியின் விரத கண்ட என்ற நூலில் கார்த்திகேயன் என்ற தெய்வத்துக்குரிய புனித கிரியைகள் விரதங்கள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. பழைய காலத்தின் பம்பாய்ப் பிரதேசத்தை ஆண்டு வந்த சாளுக்கியமன்னர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் அரசு தங்களுக்கு கார்த்திகேயனின் திருவருளால் கிடைத்தது என்று கல்வெட்டு களின் பொறித்திருந்தனர்.

புராணங்களிலும் முருகனின் பெருமை பேசப்படுகிறது. காளிதாச மகாகவி செய்த குமார சம்பவம் என்னும் காவியம் முருகனைப் பற்றியே கூறுகிறது. கந்தவேள் பெருமானின் திவ்விய சரித்திரத்தைக் கூறும் ஸ்கந்த புராணத்தை பக்திச்சுவை சொட்டும் பாடல்களாக நமக்குத் தந்தவர் கச்சியப்பமா முனிவர் ஆவார். சிறந்த வேதாகம விற்பன்னராகிய கச்சியப்பர் முருகனே குருவாக உள் நின்று உணர்த்த இந்நூலைப் பாடியருளினார் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால் வகை புருடார்த்தங்களையும் விளக்கி அவற்றை பெறும் வழிவகைகளையும் வகுத்துக் காட்டுவது கந்தபுராணம் ஆகும். திராவிடர்களின் சிந்தனையில் தோன்றிய உயர் தத்துவமென அறிஞர்களால் போற்றப்படும் சைவ சித்தாந்த தத்துவத்தின் சிறப்பியல்புகளை எல்லாம் எடுத்து விளக்கும் உயர்ந்த நூலே கந்த்புராணம் ஆகும். கந்தபுராணத்தில் இல்லாத பொருள் எந்தப்புராணத்திலும் இல்லை" என்றொரு பழமொழி உண்டு. சமய சாஸ்திரக் கருத்துக்கள் எல்லாம் நிரம்பிய பொக்கிஷம் கதபுராணம் ஆகும்.

## முருகன் தமிழர்களின் குல தெய்வம்

முருகப் பெருமானைக் கலியுகக் கடவுளாகவே தென்னாட்டவர்கள் கருதி வழிபடுகின்றனர். தமிழகத்திலே குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் கேசயில் கொண்டுள்ளான். முருகனே தமிழரின் முதல் தெய்வம் முருகப் பெருமான் திருத்தோள்கள் பன்னிரண்டு தமிழில் உள்ள உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு முருகப்பெருமானின் திருக்கண்கள் பதினெட்டு, தமிழில் உள்ள மெய் எழுத்துக்கள் பதினெட்டு முருகப்பெருமானின் திருமுகங்கள் ஆறு, தமிழில் இன எழுத்துக்கள் ஆறு. முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் தெய்வமானது கசுயுகக் கடவுளாகிய கந்த

வேள் பெருமான் காட்சி தருகிறார்.

ஆதித்த நல்லூரில் கண்டெடுத்த பழைய

## தமிழகத்தில் முருக வழிபாடு

காலத்து சேவல் மயில் ஆகிய சின்னங்கள் தமிழ் நாட்டில் முருக வழிபாட்டின் தொன்மைக்கு சான்றாக இருக்கின்றன. உயர்ந்து காணப்படும் மலைக்கு உயர்ந்து விளங்கும் முருகனையே உரிய தெய்வமாகக் காடடுகிறது தொல்காப்பியம் இதனை சேயோன் மேய மைவரை உலகமும் என்ற தொல்காப்பியமும் செப்புகிறது. ''செவ்வேள்'' பள்ளி பாடல்கள் பரிபாடலில் உள்ளன. கலித்தொகையிலும் முருகனைப்பற்றிய குறிப்புகள் வருகின்றன. சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்திலும் தமிழ் நாட்டில் ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில் இருந்ததாகப் பாடப் பெற்றுள்ளது.

'யாம் இரப்பவை பொருளும் பொன்னும்
போகமுமல்ல நின்பால் அருளும் அன்பும்
அறனும் மூன்றும் உருளினர்க் கடம்பின்
ஒலிதாராரயோ''

என்று முருகனைப் போற்றும் பொழுது பொன்னையும் பொருளையும் போகத்தெயும் கருதாமல் அருளையும் அன்பையும் அளத்தையும் கோரினர் எனப் பரிபாடல் சான்று பகர்கிறது. புற நானூற்றில் முருகனைத் திருத்தகு சேய்' என்று புலவர்கள் போற்றினர். முருகனிடம் அடியார்களை ஆற்றுப்படுத்தும் நூல் திருமுருகாற்றுப்படை ஆகும். திருமுருகாற்றுப்படை சிறந்த பக்திப் பிரபந்தமாதலால் திருமுறை வரிசையிலும் தொகுக்கப் பெற்றுள்ளது. இதில் முருகனுக்குரிய ஆறு படை வீடுகள் போற்றப்படுகின்றன. கலித்தொகை, அகநானூறு, புற நானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு ஆகிய நூல்களிலெல்லாம் முருகன் பெருமை பேசப்படுகிறது.

குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகன் தமிழ் மக்களின் வாழ்க்கையுடன் தொடர்புடையவனாகவும் அவர்களுடைய இன்ப துன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களில் ஈடுபாடுடையவனுகவும் விளங்கு கிருன் முருகன் சங்க கால மக்களால் போர்த் தெய்வமாகவும் வெள்ளித் தெய்வத மாகவும் வருணிக்கப்பட்டான். சங்க காலத் தில் முருக வழிபாடு வெறியாட்டுடன் நடை பெற்றமையை சங்க இலக்கியங்களிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது. இவ்வழி பட்டாடில் இறைவனுக்கும் மக்களுக்கும் தொடர்பேற்படுத்தி வைக்கும் பிராமண ருக்கோ அன்றிப் பூசாரிகளுக்கோ இடமில்லை வழிபடுவோர் தம்மில் இறைவன் வந்து வெளிப்படுவான் என்ற நம்பிக்கையுடன் கூத்தாடினர். இளம் பெண்களைக் காம நோயால் வருந்தச் செய்பவன் அழகன் முருகன் என்றே சங்க இலக்கியங்கள் பகர் கின்றன.

சங்க காலத்தின் பிற்பகுதியில் ஆரிய வழிபாட்டு நெறிகள் தமிழகத்தில் புகுந்தன. ஆரியர்களின் சுப்பிரமணியன் தமிழர்களின் முருகனேடு இணைக்கப்பட்டான். குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகன் குறிஞ்சி நிலத் தலைமகளாகிய வள்ளியை காதலித்து திரு மணம் செய்தான் என்றே சங்க இலக்கியங் கள் செப்புகின்றன. ஆதியில் வள்ளியே முருகனின் சக்தயாக தமிழர்களால் வணங் கப்பட்டு வந்ததாகவும்' ஆரியர்கள் வரு கைக்கு பின் இந்திரன் மகளாகிய தெய்வா னையும் முருகனின் சக்தியாகப் போற்றப் பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. முருகனின் கிரியா சக்தியாக தெய்வானையும் இச்சா சக்தியாக வள்ளியம்மையும் ஞான சக்தி யாக வேலும் திகழ்பவை இன்று நாம் முருக வழிபாட்டில் காண்கிறோம். சங்க காலத்திலே தமிழ் நாட்டிலே மிகவும் சிறப்பு பெற்றிருந்த முருகவழிபாடு சங்கமருவிய காலத்தின் பிற் பகுதியிலும் பல்லவர் காலம் சோழர் காலத் தின் முற்பகுதி ஆகியவற்றிலும் முக்கியத் துவம் இழந்து காணப்படுகிறது. பல்லவர் காலம் பக்தி இயக்க காலமாக பரிணமித்தது சமணபௌத்த மத ஊ குருவல்களை எதிர்த்து சைவமும் வைணவமும் போரடவேண்டிய ஒரு நிலை இக்காலத்தில் ஏற்பட்டது. நாயன் மாகளும் ஆழ்வார்களும் பக்தி இயக்கத் தின் ஊடாக தமது சமயத்தை வளர்க்க அரும் பாடுபட்டனர். சங்கமருவிய காலத்தில் காரைக்காலம்மையாரால் ஆரம்பிக்கப்பட்ட சிவனை முதன்மைப் படுத்தி வழிபடும் வழி பாட்டு நெறி பல்லவர் காலத்தில் பரிணமம் அடையத் தொடங்கியது, அருட்கடலாகிய சம்பந்தரும் அன்புக்கடலாகிய அப்பரும் சிவ நெறியைப் பாதுகாத்த புண்ணியக் கண்கள் எனச் சேக்கிழார் பெருமானுல் போற்றப்படு கிருர்கள் சங்க காலத்தில் வெறியாட்டுடன் நடத்த முருக வழிபாட்டில் பலியிடுதல், மது அருந்துதல் ஆகிய செயல்கள் இடம் பெற் றன. பல்லவர் காலத்தில் சமண பௌத்தர் களுக்கெதிராக சமயப் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நாயன்மார்கள் முருக வழி பாட்டை முதன்மைப் படுத்திஞல் தமது வாதம் வலிமையிழந்தது விடும் என்ற காரணத்தி ஞல் முதன்மைப் படுத்தாமல் விட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. எனினும் நாயன்மார் கள் திருப்பெருங்குன்றம் பெறுவேருர் திருச் சேய்ஞலூர் ஆகிய முருகன் தலங்கள் மீதும் பதிகங்கள் பாடியிருக்கிருர்கள்.

சோழர் காலத்திலும் சிவ வழிபாடே மேலோங்கிக் காணப்பட்டது என்பதை அக் காலக் கோயிலகளும், இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் எடுத்துக் காட்டுகின்றன. எனினும் சோழர் காலத்தில் எழுந்த அற்புத மான காவியமாகிய கந்தபுராணத்திலே சுப் பிரமணியன் வரலாறு முழுவதும் சித்தரிக்கப் படுகிறது சைவ சித்தாந்த தத்துவத்தின் உட்பொருளை விளக்கும் கருவூலமாக கந்த புராணம் காணப்படுகிறது. நாயக்கர் காலத் தில் முருக வழிபாடு மீண்டும் புத்துயிர் பெறுகிறது. சந்தத் தமிழிலே உள்ளம் உருக் கும கவிதைகளால் முருகனைப் பாடித் துதிக் கிருர் அருணகிரிநாதர். முருகன் மீது பின் ளைத்தமிழ் பாடினுர் பகழிக் கூத்தர் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தானுபூதி. மயில் விருத் தம், வேல் விருத்தம் என்பனஅ ருணகிரிநாத ரால் பாடப்பெற்ற பாடல்கள் ஆகும். குமர குருபரர், தேவராய சுவாமிகள், தண்டபாணி சுவாமிகள், இராமலிங்க அடிகள் போன்ருேர் முருகன் அருள் பெற்ற அடியார்களாவர்.

## ஈழத்தில் முருக வழிபாடு

ஈழத்தில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகளில் ஈழத்தாழிகள் சேவற்சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியன கண்டெடுக்கப்பட்டன. முருக வழிபாடு ஈழத்தில் மிகத் தொன்மைக் காலம் தொட்டே சிறப்பிடம் பெற்று இருக்கிறது. அசுரர்களோடு போரிட்டு தேவர்களைக் காப்பாற்ற வந்த திருமுருகன் கதிர்காமத்திலே பாசறை அமைத்து தங்கியிருந்தான் எனவும், கதிர்காமம் ஏமகூடம் என அழைக்கப்பட்டதாகவும் வரலாறுகள் கூறுகின்றன. இலங்கையின் முதல் சிங்கள மன்னனாகிய விஜயனை அவனுடைய மனைவியாகிய குவேனி கொலை செய்ய முற்பட்ட பொழுது கதிர்காமக் கந்தனே காப்பாற்றினான் என 'இராஜவலிய' என்ற இலங்கையின் வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது தமிழ் அரசனாகிய எல்லாளனை வெற்றி கொண்ட துட்டகைமுனு தனது நேர்த்திக் கடனை நிறைவேற்றுவதற்காக 'அந்தணர்களும், பிக்குகளும் புடைசூழக் கதிர்காமம் சென்று வந்தான் எனக் 'கந்த உபத' என்ற சிங்கள நூல் குறிப்பிடுகிறது. கதிர்காமத்தில் முருகனோடு எழுந்தருளியுள்ள சக்திகளில் ஒருத்தியாகிய வள்ளி என்னும் பெயர் தூய தமிழ்ப் பெயராகும். இதனால் கதிர்காமத்துக்கும் தமிழருக்கும் இடையே உள்ள பழமையான தொடர்பு புலனாகின்றது. அருணகிரி நாதர்ப் பெருமான் கதிர்காமத் தலத்தின் பெருமையை 'இறவாமல் பிறவாமல் என்ற பதிகத்தின் ஊடாக வெளிப்படுத்துகிறார். நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் "அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி' என்ற பாடலில் கதிர்காமத் தலத்தின் பெருமையைத் தெளிவாகக் காட்டுகிறார். இன்றும் வேட்டுவ பரம்பரையினராக கப்புறாளைகளே கதிரகாமக் கந்தனின் பூசகராயும் அறங்காவலராயும் விளங்குகிறார்கள்

ஆகம மரபுக்குட்பட்ட முருக வழிபாடே தமிழகத்தில் பெரிதும் நிலவி வருகிறது. இங்கு 'கிராமிய வழிபாட்டுடன் கூடிய பழைய தமிழ் மரபிலே பெரும்பாலும் வழிபாடுகள் நடைபெறுகின்றன கதிர்காமம், செல்வச் சந்நிதி, மண்டூர் ஆகிய முருகன் ஆலயங்களிலெல்லாம் வாயைத் துணியால் கட்டியே பூசைகள் நடைபெறுகின்றன. சோழ இளவரசியாகிய மாருதப் புரவீக வல்லியின் குதிரை முகம் மாறப் பெற்றதற்காக சோழ மன்னன் மாவிட்டபுரத்தில் சிறந்ததோர் முருகன் ஆலயத்தை கட்டுவித்தான். ஆகம முறை தவறாது குமாரதந்திர முறையில் கிரியைகள் இவ்வாலயத்தில் நடைபெறுகின்றன. புவனேகபாகு மன்னனால் கட்டப்பட்ட நல்லூர் முருகன் ஆலயம் போர்த்துக் கேயரால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது. பின்பு கந்தபுராணப்படனம் நடக்கும் வேற்கோட்டமாக ஆரம்பித்த மடாலயமே இன்று நல்லூர்க் கந்தசுவாமி ஆலயமாகக் காட்சி தருகிறது இப்படியாக ஈழத்திருநாடு முழுவதுமே முருகன் ஆலயங்கள் செறிந்து காணப்படுகின்றன. முருக வழிபாட்டை உலகின் பல பாகங்களிலும் பரப்பிய பெருமை நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டிமாரையே சாரும். கொழும்பு மாநகரத்தில் வருடாவருடம் இவர்கள் சிறந்ததோர் வேல்விழாவை நடாத்தி வருகிறார்கள்.

## வேல் வழிபாடு

ஈழநாட்டில் முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயங்கள் பலவற்றில் முருகனை வேலில் ஆவாகனம் செய்து வழிபடும் முறையே இன்றும் இருந்து வருகிறது, சிலப்பதிகாரத்தில் வரும் 'வேற்கோட்டம்' என்ற தொடர் தமிழ் நாட்டில் வேல் முருகனாக வழிபடப்பட்ட வரலாற்றை நமக்கு காட்டுகிறது. 'வேலும் மயிலும் துணை' என்பதே முருகனடியார்களின் தியான மொழியாகும், முருகனின் கையிலிருக்கும் வேலானது உயிர்களின் வினைகளை அப்புறப்படுத்தி உண்மையாக பக்தியை அறிவதற்கு கருவியாக அமைகிறது. ஞானசக்தியாகிய வேலைத் தாங்கிய முருகவேளை 'ஞானந்தனுருவாகிய நாயகன் என்று போற்றுகிறான் சிங்கமுகாசுரன் முருகப் பெருமானுடைய மூவிரு முகங்கள் போற்றி என்ற பாடலின் இறுதி வரியில் திருக்கை வேல் போற்றி, போற்றி எனப்பாடி முடிக்கிறார். இருபதாம் நூற்றாண்டின் புரட்சிக் கவியாகிய பாரதியாரும் வேலவனைத் துணைக்கொண்டால் நமது பகையெல்லாம் தூர விலகி விடும் என்று காட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார். 'வெற்றி வடிவேலன் அவனுடைய வீரத்தினைப் புகழ்வோம் சுற்றி நில்லாதே போ, பகையே, துள்ளி வருகுது வேல்'

என்ற பாரதியின் பாடல் வடிவேலனின் வேல் நமது பகையை அறுத்து நமக்கு நல் வாழ்வைக் காட்டும் திசை காட்டி என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

## காரைநகரும் களபூமி முருகமூர்த்தி கோலமும்

ஈழத்திருநாட்டின் யாழ்ப்பாண மாவட்டத்திலே சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் கிராமமாகத் திகழ்வது காரைநகர் ஆகும் தமிழ்மொழியின் சிறப்பையும் சைவத்தின் பெருமையையும் நன்குணர்ந்த காரைநகர் மக்கள் ஆலய வளர்ச்சிக்காக தாம் ஈட்டிய பொருளின் பெரும்பகுதியைச் செலவிடும் தன்மை நிறைந்தவர்கள் காரைநகர் கிழக்கு களபூமியிலே வீற்றிருந்து தன்னை நாடிவரும் பக்தர்களின் துன்பத்தைப் போக்குகின்ற கந்தவேள்ப் பெருமானின் தலத்தை புணரமைத்து மகா கும்பாபிஷேகம் செய்திருக்கிறார்கள். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதை உணர்ந்த அவ்வூர் மக்கள் முருகப் பெருமானுக்கு அழகான கோபுரம் அமைக்க பெருவிருப்பம் கொண்டிருக்கிறார்கள், தூல லிங்கமாகிய கோபுரமே ஆலயத்தின பெருமைக்கு அணிசெய்யும் சிறப்பான அணிகலனாகும். மிக விரைவாக இராஜகோபுரத்துடன் கம்பீரமாக நிமிர்ந்து நின்று அடியவர்களுக்கு அருள் பாலிக்கும் குமரகோட்டமாக களபூமி முருகமூர்த்தி ஆலயம் மிளிர நாம் அனைவரும் அந்தக் கலியுகவரதனின் பாதார விந்தங்களையே பணிந்து வேண்டுவோமாக.


காரைநகர் · திக்கரை
முருகமூர்த்தி கோவில் மகா கும்பாபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

வீ. ஆர். ரி
கிளிநொச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் களபூமி திக்கரை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி கோயில்
குடமுழுக்கு கும்பாபிஷேகம் சிறப்புடன் நடக்க
அன்புடன் வேண்டுகிறோம்.



**தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்**

**கொடிகாமம்**

---

*With the Best Compliments*

FROM

**Mohamedally Abdulally**

**Grand Bazaar**

**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கரை முருகா, எங்கள் குமரக்கடவுளே
பிணிதீர்க்கும் வேலவனே எங்கள் பிணிதீர்க்கவேண்டுகிறோம்
திக்கரை முருகா திக்கெட்டும் உமது புகழ்பரவ வாழ்த்துகிறோம்
கும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம் இனிது நிறைவேற
வாழ்த்துபவர்கள்

# ரஞ்சனாஸ்

17, 18, 18A நவீன சந்தை
யாழ்ப்பாணம்
தொலைபேசி 24015

ஜவுளி
உலகின்
நவீன
முன்னோடிகள்



# Ranjanas

17, 18, 18A, Model Market,
Jaaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் மற்றும் முகூர்த்த பட்டுப் புடவைகளை உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய ஏற்றதோர் எழிற்கூடம்

இன்றே விஜயம் செய்யுங்கள்

*நம்பிக்கை!* *நாணயம்!!* *கைராசி!!!*

# இளவரசி ரெக்ஸ்ரைல்

**57, நவீன சந்தை உட்புறம்)**

**யாழ்ப்பாணம்.**

With the Best Compliments

FROM

# E. S. PERAMPALAM

**50, Kasthuriar Road,**

**Jaffna.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றுதோறும் நீ இருப்பாய் குமரா

எம்மிடம் சகலவிதமான உள்ளூர் உற்பத்தி
நவதானிய வகைகளும்
மற்றும்
சாய்ப்புச் சாமான்களும் மலிவாகவும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

# ஆதவன் றேடிங் அன் கோ

**37 ஸ்ரான்லி வீதி**
**யாழ்ப்பாணம்**

---

*With the Best Compliments*

FROM

# Kanapathy Stores

**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments*

*from :*

↓

**CENTRAL AGENCY,**

4, Wolfendhal Street,
COLOMBO - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Wishes*

*from :*

Mercury Trading Company,

203, Keyzer Street,

COLOMBO - 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு :

# ஆ. சண்முகம்,

அரசாங்க ஒப்பந்தக்காரர்

முதலிக்குளம் சந்தி,

பன்குளம்.

கிளை :

## முருகன் ஸ்ரோர்ஸ்,

துணுக்காய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு :

# ஆர். எஸ். செல்வராஜ் பிறதர்ஸ்,

120, டாம் வீதி, - கொழும்பு - 12.

☎ 27901

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகன் துணை

கும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம் இனிது நிறைவேற
வாழ்த்துபவர்கள்

# விநாயகர் ஸ்ரோர்ஸ்

166 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

# VINAYAGAR STORES

166, HOSPITAL ROAD
JAFFNA
T. P. 23787

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

From



**K. K. Kandiahpillai**

**&**

**Son**

**318, Hospital Road**

**Jaffna.**

**T. P. 22581**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கரை முருகமூர்த்தி கோவில்
கும்பாபிஷேகமும் மண்டலாபிஷேகமும் சிறப்பாகநடைபெற
வாழ்த்துகிறோம்

# நியூ ஆனந்தா ஸ்ரோர்ஸ்

**60, ஆஸ்பத்திரி வீதி,**

**யாழ்ப்பாணம்.**

---

திக்கரை முருகா, எங்கள் குமரக்கடவுளே
பிணிதீர்க்கும் வேலவனே எங்கள் பிணிதீர்க்கவேண்டுகிறோம்
திக்கரை முருகா திக்கெட்டும் உமது புகழ்பரவ வாழ்த்துகிறோம்

# RATNAM PHARMACY & GROCEREY

**380, Hospital Road,**

**Jaffina.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KUGAN STORES

180 (380) Hospital Road

Jaffna.

காரைநகர் - திக்கரை

முருகமூர்த்தி கோவில் மகா கும்பாபிஷேகம்

சிறப்புற வாழ்த்துகிறோம்

# குகன் ஸ்ரோர்ஸ்

180 (380) ஆஸ்பத்திரி வீதி

யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

From

**D.S.I**

**மொத்த விற்பனையாளர்**



# Rajes Distributors

**128, Hospital Road**

**Jaffna.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

FROM



# CITY MEDICALS

**487, Hospital Road**
**Jaffna.**

---

*With the Best Compliments*

FROM



# UTHAYA TRADING COMPANY

**143, 144, Hospital Road,**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best wishes from :

**SHANMUGA TRADING CENTRE**

*141, 4th Cross Street,*

*COLOMBO - 11.*

With best wishes from :

**SRI THIRUPPATHY AGENCY**

180, 4th Cross Street,

COLOMBO - 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best Compliments

from :

# S. S. WILSON & CO. (PVT) LTD.

**General Merchants**

**176 Fourth Cross Street,**

COLOMBO.

**T'Grams : GRATITUDE** **T' Phone : 27662**

அன்பளிப்பு :



★ முருக பக்தன் ★

**P. K. P. Sreetharan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best Compliments from :

## MURUGA TRANSPORTERS

**Dhanapalan**

**ATCHUVELLY**

With best Compliments from :

## THRUKA TRANSPORTERS

**NAVAGIRI, PUTTUR.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அன்பளிப்பு :

காரை

திக்கரை முருகன் அடியார்கள்

கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திக்கரை முருகனின் திருவருள்

காரைநகர் களபூமி திக்கரைத் தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுந்த இவ்வந்தாதிக் கீர்த்தனைகளை ஆக்கியவர் யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த இயலிசை வாரிதி பிரமஸ்ரீ ந. வீரமணி அவர்களாவர். இக் கீர்த்தனைகளின் கையெழுத்துப் பிரதி எமது கரங்களுக்கு எட்டியதே திக்கரை முருகனின் திருவருளேயன்றி வேறில்லை

அண்மையில் பிரமஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களை முக்கிய அலுவல் காரணமாகக் காண இணுவிலில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்றிந்தோம். மாலை நேரம். வீரமணி ஐயர் அவர்கள் அமைதியாக இல்லத்தில் இருந்தார். முகமன் கூறி வரவேற்று தமது ஆக்கங்கள் பற்றியும் இசைத் துறை சாதனைகள் பற்றியும் அளவளாவிக் கொண்டிருந்த சமயம் திக்கரை முருகனின் திருவருளினால் ஓர் அற்புதம் நிகழ்ந்தது என்றே கூற வேண்டும். தமது அலுமாரியில் வைத்திருந்த ஆக்கங்களிற் சில எப்போதோ உருவானவை என்றும் இன்னும் பதிப்பிக்கப்படவில்லை என்றும் கூறி, அடியிற் கிடந்த கையெழுத்துப் பிரதியொன்றினை தற்செயலாக எடுத்துக் காட்டினார். 1953 ல் அவராக்கிய திக்கரை முருகனின் அந்தாதிக் கீர்த்தனைகள் அடங்கிய கையெழுத்துப் பிரதியே அது. !வீரமணி அவர்களிடம் செல்வதற்கு ஏறக்குறைய ஒருமாதத்திற்கு முன்புதான் திக்கரை ஆலய திருப்பணிச்சபையினர் மகாகும்பாபிஷேகத்தின் சிறப்பு மலர் ஆக்கத்தின் பொறுப்பை எம்மிடம் ஒப்படைத்திருந்தனர். வீரமணி ஐயர் அவர்களது கையெழுத்துப் பிரதியைக் கண்டதும் திக்கரை முருகனின் கும்பாபிஷேக மலரை உருவாக்கும் பொறுப்பு எம்மிடம் தரப்பட்டுள்ளதால் இக்கீர்தனைகளை அம்மலரில் இடம்பெறச் செய்யவே முருகன் இந்த அற்புதத்தைத் செய்தருளியுள்ளான் என அவரிடம் கூறி, மலர் வெளியீட்டுக்குப் பொறுப்பான ஆலயத்திருப்பணி சபையினரிடம் இசைவு பெற்று அச்சில் பதிக்க ஆவன செய்வதாகக் கூறினோம். உண்மையில் முருகனின் திருவருளே இக்காரியத்தை ஊக்குவித்தது. வீரமணி ஐயர் அவர்களும் மனம்பூரித்து பக்தியுடன் முருகனை நினைந்து பூசையறையில் இவ்வந்தாதி கையெழுத்துப் பிரதியினை வைத்துப் பூசித்த பின்னர் எமக்கு விபூதிப் பிரசாதம் தந்து இப்பிரதியை எமது கரங்களில் தந்தபொழுது இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலய கண்டாமணி இம்முயற்சிக்கு ஆசி கூறுவது போல் நாதமெழுப்பியது மற்றொரு அற்புதமாக அமைந்தது. தாம் எவருக்குமே தமது ஆக்கத்தின் கையெழுத்துப் பிரதியினைப் தருவதில்லை என்றும் எமது விடயத்தில் முருகன் திருவருளே முன்னிற்பதால் அதனைத் தருவதாக மிகவும் விநயத்துடன் கூறினார் வீரமணி ஐயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அவரிடம் கூறியபடி காரியம் ஆற்றுவதற்கு முடியாத வகையில் மலர் பிரசுரிக்கும் விடயம் பல்வேறு சிரமங்களினால் தாமதமாகிக் கொண்டிருந்தது. மலரில் அந்தாதியை இடம்பெறச் செய்ய வாய்ப்பிருக்குமோ என ஏங்கிக் கொண்டிருந்த போது 'யாமிருக்கப் பயமேன்' என அருள் பாலித்தான் முருகன். இம் மலரின் ஆக்கத்திற்கு உறுதுணையாக விளங்கிய ஆசிரியர் திரு. அம்பிகைபாகன் 24. 02. 1990 அன்று ஆலய திருப்பணிச்சபை அன்பர்கள் இருவருடன் மலர் வெளியீடு பற்றிப்பேச எமதில்லம் வந்திருந்தார். அவர்களிடம் வீரமணி ஐயர் அவர்களது அந்தாதியைக் காட்டி அதுபற்றிக் கூறினோம். அவர்களும் மிகவும் மன மகிழ்ச்சியுற்று, எச் செலவு ஆனாலும் பரபாயில்லை முருகன் புகழ்பாடும் கீர்த்தனைகளை மலரில் இடம் பெறச் செய்யும்படி அன்புடன் வேண்டிக் கொண்டமையும் முருகனின் திருவருளே.

முருகன் புகழ் பரப்பும் இவ்வந்தாதிக் கீர்த்தனைகளை மலரில் பதிப்பிக்க இசைந்தமைக்கு பிரமஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களுக்கும் ஆதரவு நல்கிய திருப்பணிச்சபையினருக்கும் மலராசிரியர் என்ற நிலையிலும் மலர்க்குழு சார்பிலும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அனைவருக்கும் முருகனின் திருவருள் கிட்டுவதாகுக.

பிரமஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் ஈழத்துச் சாகித்ய கர்த்தாக்கள் வரிசையில் முதன்மை பெறுபவர் எனக் கூறின் மிகையில்லை, பல்துறை கலைஞர் இவர் ஆலயங்கள் பலவற்றிற்குத் திருவூஞ்சல் பாடிப் பரவியுள்ளார். இவரது திறமைக்கு அவ்வப்போது கிடைத்த பட்டங்கள் குறிப்பிடற் பாலன. இயலிசைவாரிதி, கவிமாமணி,ஸாகித்ய சிரோமணி, ஸாகித்ய மாமணி, ஸாகித்ய ஸாகரம், சிருஷ்டி கலா பானு, முத்தமிழ் வாரிதி, ஸாகித்யலஹரி, போன்ற பட்டங்கள் அவரது ஆக்கத்திறனுக்கும் பெருமைக்கும் தக்க சான்றுகள், ஈழத்திலும் தமிழகத்திலும் நன்கு அறிமுகமான சிறந்த கவிஞருமாவர். இசை நுட்பங்களை வெளிப்படுத்தும் ஆக்கங்களையும் உருவாக்கிய பெருமை இவருக்குண்டு.

திக்கரை முருகன் மீது இவர் பாடியுள்ள இவ்வந்தாதிக் கீர்த்தனைகளில் இசையும் பக்தியும் முருகனது தலப் பெருமைகளும் இணைந்துள்ளன. இசையோடு பாடுவதற்கேற்ற ராகம் தாளம் ஆகியவற்றுடன் இயற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது பக்தர்களுக்குச் சிறந்த தோத்திரத் தொகுதி. இசைத்துறையில் வல்லவர்களுக்கு ஏற்றதொரு கீர்த்தனைத் தொகுதி, இதனை படிக்குந்தோறும் அடியவர்கள் உள்ளத்தில் முருகன் மீதுள்ள பக்தி பெருகும். அடியவர்கள் சென்று பக்தியுடன் வழிபடுவதற்கேற்ற தெய்வமாக முருகனைப் போற்றிக் கூறும் இக்கீர்த்தனைகள் திக்கரைத் தலப்பெருமைகளைச் சிறப்பாகக் கூறுகின்றன. இவையே இப்பாடல்களின் கருப்பொருள்.

பிரமஸ்ரீ வீரமணி அவர்களது இத்தகைய சிறப்புப் பொருந்திய அந்தாதிக் கீர்த்தனைகளை திக்கரை முருகனின் திருவடித் தாமரைகளில் சமர்ப்பித்து வழிபடுவோமாக.

01-03-1990

கலாநிதி. ப. கோபாலகிருஷ்ணன்

மலராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

காரைநகர் - திக்கரை

# முருகன் அந்தாதிக் கீர்த்தனைகள்.

☆

ஆக்கம்:

"இயலிசை வாரிதி"
"கவிமாமணி"
"ஸாஹித்ய ஸாகரம்"
"ஸாஹித்ய மாமணி"
"ஸாஹித்ய சிரோமணி"
"முத்தமிழ் வாரிதி"
"ஸாஹித்ய லஹரி"
"ஸ்ருஷ்டி ஞாயிறு"

யாழ்ப்பாணம்.

பிரம்ம ஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள்.

திக்கரை முருகனின் மலர்ப்பாதங்களுக்கு
சமர்ப்பணம்

1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்கரை முருகன் அந்தாதிக் கீர்த்தனைகள்

## விநாயகர் ஸ்துதி

### இக்கணம் அருள்வாய் இன்பவிநாயகா

ராகம்: நாட்டை

தாளம்: ஆதி

பல்லவி

இக்கணம் அருள்வாய் இன்பவிநாயகா
திக்கரைமுருகனைத் தீந்தமிழிற்பாட

அனுபல்லவி

மிக்கபுகழ்காரை மிளிர்கள பூமியதில்
தக்கவோர் துணையாகத் தாளெழுந்த சுடரே!

சரணம்

ஆறுமுகன் பதத்தை அழகுத்தமிழில் போற்றிக்
கூறுபுகழ் பாடக் குஞ்சரனே அருள்வாய்
வேறுதுணையில்லை வேழமுகத்தவனே
ஏறுமயில் ஏறும் எம்பிரான் கழல்பாட (1)

### பாடிட வருவான் பாலசுப்பிரமணியன்

ராகம்: ஷண்முகப்பிரியா

தாளம்: ஆதி

பல்லவி

பாடிட வருவான் பாலசுப்பிரமணியன்
ஆடிமாமயில் அணங்கார் புடைசூழ

அனுபல்லவி

ஓடிடும் தீவினைகள் ஒளிரருட்சுடர்வேலன்
நாடியே வந்திடுவான் நல்லவை தந்திடுவான்

சரணம்

வள்ளிகுஞ்சரி காந்தன் வடிவேல் முருகேசன்
தெள்ளு தமிழ்ப்பாடல் தேனமுதுண்டவன்
துள்ளம் அலைபுரளும் தூயதிக்கரை வாசன்
அள்ளி அருளைநல்கும் ஆனந்தத்தமிழ் கானம் (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோனக்களபூதி ஞான திக்கரைவாசன்

ராகம்: பூபாளம் தாளம்: ஆதி

பல்லவி

கானக்குறத்திவள்ளி தேவக்குஞ்சரி நாதன்
மோனக்களபூமி ஞானதிக்கிரை வாசன்

அனுபல்லவி

தீனதயாபரன் திருமுருகன் குமரன்
ஞானவேல் ஏந்திடும் நாயகன் வேலன்

சரணம்

பாதாரவிந்தமே பக்திசெய்து துதிப்பாய்
ஆதாரமாகி அருள் ஆறுமுகன் தருவான்
நாதா எனப் போற்றி நற்றமிழ்ப் பண்படிப்பாய்
காதாரக்கேட்டு அருள் கந்தன் தருவன் என்றும் (3)

## குன்றுதோறும் எழில் நின்று ஆடும்பாதன்

ராகம்: பௌல ஹரி தாளம்: ஆதி

பல்லவி

என்றும் கந்தன் பதம் பாடு எல்லாம்
வென்று வாழும் வழி வேல்தரும் கண்கூடு

அனுபல்லவி

குன்றுதோறும் எழில் நின்றுஆடும் பாதன்
அன்று அரக்கர்குல அகந்தை தொலைத்த நாதன்

சரணம்

நெக்குநெக்குருகியே நிமலன் பதத்தை நாடு
"இக்குவயலத்தினில் இன்பமாய்ப் போற்றிப்பாடு"
திக்குவேறில் ஊயெனத் திருமுருகனைதேடு
திக்கரை முருகனும் பக்குவ அருளை கூடு (4)

## கூடிருக்கையில் கூடுவாய்

ராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

கூடிருக்கையில் கூடுவாய்-திக்கரை
நாடிருக்கும் ஷண்முக நாதன் திருப்பதத்தை

அனுபல்லவி

மாடிமனைவி மக்கள் மன்னிடும் சொந்தமுமல்ல
தேடிப்புதைத்த செல்வம் தேகமும் நிந்தமல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

பக்குவ மார்க்கம் காட்டிப் பரிசுத்த நிலைதந்து
மிக்கிடு பேரின்பம் மிளிரத் தருவான் குஹன்
திக்கரை முருகனின் திருப்பாதத்தை நினைத்து
எக்கணமும் தொழுது ஏற்றுவாய் நின்வினைகள் (5)

## வினை தீர்க்கும் வேலவன்

ராகம்: காமாஸ் தாளம்: ஆதி

பல்லவி

வினைதீர்க்கும் வேலவன் விரிமயில் வாகனன்
எனை ஆளும் திக்கரை எழில் குஹன் மோகனன்

அனுபல்லவி

தினைமாவும் தேனமுதும் தெவிட்டாமல் உண்டவன்
கனைமா கடல் சூழ் அலைக் களபூமி கொண்டவன்

சரணம்

மன்னும் அவன் அருளை மாநிலத்தில் நாடு
கன்னல் தமிழில் அவன் கழல் திருப்புகழ் பாடு
வன்னமயில் அழகன் வடிவேலன் பதம் கூடு
இன்னமுதான அருள் இனிது பருகி ஆடு (6)

## ஆடும் மாமயில் அமரும் அழகன்

ராகம்: ஸிந்துபைரவி தாளம்: ஆதி

பல்லவி

ஆடும் மாமயில் அமரும் அழகன்
நாடும் மிளிர் திக்கரை வாழும் மால்மருகன்

அனுபல்லவி

ஏடும் புகழ் எழிலின் ஏந்தலாம் ஷண்முகன்
ஈடும் இணையிலாத இன்ப அருள் தருவன்

சரணம்

கடலலைகள் பாடிக் கந்தன் பதம் நாடும்
நடனமிடும் வயல் நெல் நாடிக்குகனைப்பாடும்
மடமயிலும் ஆடும் மாங்குயில்கள் கூவும்
இடமதுவாம் காளர இன்பக் களபூமியதில் (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிமதுரத் தமிழ் அமுதமுண்டவன்

ராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

அதிமதுரத்தமிழ் அமுதம் உண்டவன்
பதிக்களபூமித் திக்கரைத்தலம் கொண்டவன்

அனுபல்லவி

நதிமதியணியரன் நற்குருவானவன்
கதியென வந்தவர் கடிவினை வென்றவன்

சரணம்

அருளமுதம் அள்ளி ஆனந்தமாய் தருவான்
திருவடி தந்துனை திகழ்ந்திடச் செய்பவன்
குருவடிவானவன் குஞ்சரன் சோதரன்
பெருவருள் பேரின்பம் பேணி யருள்பவன் (8)

## பலவினை நீக்கிடும் சரவணபவன்

ராகம்: வலஜி தாளம்: ஆதி

பல்லவி

பலவினை நீக்கிடும் சரவணபவன் குஹன்
தவநிறை யருள்தனைத் குமரகுருபரன்

அனுபல்லவி

புவனியில் திக்கரை புனிதன் திருமுருகன்
அவனியின் அடியவர்க் கருள்தனைத் தருபவன்

சரணம்

முன்னம்மாங்கனி வேண்டி வன்ன மயிலின்மீது
இன்னமுதாய் உலகை இவர்ந்தவன் கவர்ந்தவன்
கன்னல் தமிழ் அவ்வை கனித்தமிழ் உண்டவன்
நன்னல் வரமதை நாளும் தருபவன் (9)

## களபூமித் திக்கிரைக் கந்தனே!

ராகம்: ஹம்ஸத்வனி தாளம்: ஆதி

பல்லவி

தருவேங்கைமரமாகி தள்ளாடும் கிழமாகி
பெருவேடனுக வந்த பெருமானே நீ அருள்வாய்

அனுபல்லவி

அருமாறைகள் போற்றும் ஆறுமுகனே முன்னர்
குறமாமகளை வேண்டி குறும்புகள் செய்ய அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

அழகான மயில்மீது எழில்மாதர் புடைசூழ
களபூமித் திக்கரைக் கந்தனே நீ அருள்வாய்
விழிநீரும் சொரிபாய வேலவனே உன்னைத்
தமிழ்பாடிப் போற்றிட தண்ணருள் நல்கிடுவாய் (10)

## நல்கிடுவாய் அருள் நாயகனே

ராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

நல்கிடுவாய் அருள் நாயகனே - திக்கரை
மல்கும் மால் மருகனே மாமயில் வேலவனே

அனுபல்லவி

வெல்கவுன் விறல்வேலும் வீரச்சேவற் கொடியும்
பல்கலை போற்றிடும் பாலசுப்பிரமண்யனே

சரணம்

கல்யாணி அபிராமி கட்டியணைத்த செல்வா
நல்யானைமுகத்தவன் நாளும் போற்றும் முதல்வா
தொல்லானை யுரித்தவன் நுதல்விழி யுதித்தவா
கல்லோரும் கற்றவரும் கனிந்தருள் புரிந்தவா (11)

## வா வடிவேலா சேவடி தா

ராகம்: காபி தாளம்: ஆதி

பல்லவி

வா வடிவேலவா சேவடி தா - புனிதா
கா வடிஆடியே கழல்பணிந்தேன் முருகா

அனுபல்லவி

பூவடிப் பாதந்தா புண்ணியனே கந்தா
கோமகளின் மைந்த கோமள அரவிந்த

சரணம்

தாமரைப் பாதமே தந்தருள நீவா
சோமசுந்தரன் மைந்தா சுந்தரனே தேவா
தேமலர்ப் பொழில் சூழும் திக்கரைத்தல வாசா
நாமமகிமை பாட நாளும் வரமே நீதா (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதானல்லால் வேறு துணையார்?

ராகம்: கரகரப்ரியா

தாளம்: ஆதி

பல்லவி

நீதானல்லால் வேறுதுணையார் — ஷண்முகா
நாதா திக்கரைவாழும் நாயகனே முருகா

அனுபல்லவி

பாதார விந்தமே பாரில் துணையெனவே
ஆதாரமென்றடைந்தேன் ஆறுமுகனே அருள்

சரணம்

சந்ததம் நின்கழல் சரணடைந்தேன் முருகா
வந்தெனக்கருள் நீயும் வரந்தா குமரா
செந்தமிழில் உன்னை சேவிக்க வரந்தா
கந்தனே கார்த்திகேயனே சேந்தா (13)

## சேந்தனே வள்ளி காந்தனே வருவாய்

ராகம்: கல்யாணவசந்தம்

தாளம்: ஆதி

பல்லவி

சேந்தனேவள்ளி காந்தனே வருவாய்
பூந்தளிர்பாதமே புகலிடமாயடைந்தேன்

அனுபல்லவி

மாந்தளிர் மேனி மங்கை மருவு குஞ்சரிவள்ளி
மாந்திடும் அழகனே மாதிக்கரைக் குகனே

சரணம்

நின்னிடு தாளிணை நிதம்பாட நீயருள்
பன்னிருகையனே பரிந்தருள்வாய் பொருள்
புல்வினையாம் இருள்போக்கிடும் வேல் அருள்
கன்னல் கழனி சூழும் களபூமி வாசனே (14)

## வாசமலர் பொழில்வள நிறை திக்கரை

ராகம்: பௌலஹரி

தாளம்: ஆதி

பல்லவி

வாசமலர்பொழில் வளநிறை திக்கரை
நேசனே வேலனே நினதடியே கதி

அனுபல்லவி

விசுமணம் கமழ் வியன் கடம்பணி மார்பா
பூசுரர் தொழும் ஞானப்புனித குணசீலா

சரணம்

பதமலர்தனை நாறும் பாரில் துணையெனவே
நிதமுருகித்துதித்தேன் நீயருளாயோ கந்தா
சதமெனநம்பினேன் ஷண்முக வடிவேலா
மதக்கரி மாமுகன் மருவிடும் இளையோனே (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருவிடும் திக்கரை மயிலோனே

ராகம்: பெஹாக் தாளம்: ஆதி

பல்லவி

மருவிடும் திக்கரை மயிலோனே—அபயம்
திருவிளங்கும் காரைக் களபூமியாம் தலம்

அனுபல்லவி

பெருகிக்கண்ணீர் சொரியப் பேரானந்தப் பதத்தை
உருகி உருகிப் பாடி உவந்துனைப் போற்ற அருள்

சரணம்

சந்தத்தமிழில் உன்னை வந்தனை செய்து தமிழ்
சிந்தும் அருணகிரி சிறக்க அருள் செய்தாய்
செந்தமிழ்த் தேனருந்தும் சேந்தனே ஷண்முகனே
வந்தெனைப் பராயோ வரங்களும் தாராயோ (16)

## தாராய் நின்னருள் வடிவேலா

ராகம்: கரகரப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

தாராய் நின்னருள் வடிவேலா—நிதம்
சீராய் விளங்கும்காரைத் திக்கரை வேல்முருகா

அனுபல்லவி

காராளைக் கிளையோனே கந்தனே கடம்பனே
பேரானந்தம் அருளும் பெருமாளே குருநாதா

சரணம்

அரன்மகிழும் குரு அழகனே குழகனே
வரம் அருளி நல்ல வாழ்வும் தருவாயோ
சிரமணி ஆடிட சேவற்கொடி ஆட
கரமலர் வேலாடக் கந்தனே நீ விரைந்து (17)

## விரைந்து வந்தாளுவாய் வேலவனே

ராகம்: கானடா தாளம்: ஆதி

பல்லவி

விரைந்து வந்தாளுவாய் வேலவனே—நினைக்
கரைந்து கரைந்து நாளும் கசிந்துருகும் என்னை

அனுபல்லவி

நிறைந்து பொலியும்பதி நீடுபுகழ்க்காரை
உறைந்துமலியும் கள பூமிதிக்கரை வாசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

அவ்வை அகவல் கேட்டு அகமும் குளிர்ந்தனை
செவ்வடிவேலேந்தி செய்தனை நல்லருள்
திவ்விய குணாளனே திக்கரை வேலவா
கொவ்வை யிதழ் முறுவலை குழிய மயிலேறி (18)

## மயிலேறி விளையாடும் வேலவனே

ராகம்: சாமா தாளம்: ஆதி

பல்லவி

மயிலேறி விளையாடும் வேலவனே - ஞான
அயிலேந்தி எனையாளும் ஆறுமுகனே அபயம்

அனுபல்லவி

வயலேறும் திக்கரை வளநாடு வாழ்பவனே
மயலாடும் குறவள்ளி குஞ்சரி நாயகனே

சரணம்

அனுதினமும் உந்தன் அம்புஜப் பாதமலர்
பனுவலும் பண்ணும்பாடி பக்திசெய்து துதித்தேன்
புனுகும் ஜவ்வாதுமிட்டு பூமாலை சூட்டிப்பாடி
உனையலங்கரித்தேன் உவந்தருள் செய்தருள் (19)

## அருள்பொலி ஆறுமுகம்

ராகம்: காமாஸ் தாளம்: ஆதி

பல்லவி

அருள்பொலி ஆறுமுகம் தரும் எழில் தேறுமுகம்
திருவளர்கள பூமித் திக்கரை வாழுமுகம்

அனுபல்லவி

மருவும் அடியவரின் மனக்குறை தீர்க்கும் முகம்
உருவின் அழகுமலி உயர் அருள் நல்குமுகம்

சரணம்

மயிலேறி விளையாடும் மாமுகமும் ஒன்று
மயல்தீர ஓங்காரம் மண்ணிட ஓதுமுகம்
கயல்விழிமாதரை கட்டிய னைக்குமுகம்
அயில் ஏறுமுகம் அடியார் கருளும் முகம் அமுதம் (20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமுதமூறும் தமிழின் அழகன்

ராகம்: தேஷ் — தாளம்: ரூபகம்

பல்லவி

அமுதமூறும் தமிழின் அழகன்
அவனே திக்கரைப் பதியின் முருகன்

அனுபல்லவி

குமுதசெவ்வாய் குஞ்சரி நாதன்
கமழும் பொழில் சூழ் களபூமிவாசன்

சரணம்

இனிக்கும் தமிழில் இனியன் பதத்தை
பனிக்கப்பாடி பக்திசெய் இகத்தில்
குனித்த புருவம் குமிழ் சிரிப்புடன்
நனித்தவழ் அருள் நல்கும் வேலன் (21)

## வேலன் பதத்தின் நிழல் நாடு

ராகம்: காம்போதி — தாளம்: ஆதி

பல்லவி

வேலன் பதத்தின் நிழல் நாடு - மனமே
சீலம் மிகு திக்கரை சேந்தனை நீபாடு

அனுபல்லவி

நீலகண்டன் குமரன் நீலாயதா க்ஷிபாலன்
பாலசுப்பிரமண்யன் பரிந்தருள்வான் பூபாலன்

சரணம்

வாலைக்குமரி வள்ளி தேவக்குஞ்சரி காந்தன்
வேலைஏந்தும் பெருமான் விரிமாமயில் வேந்தன்
நாலுவேதம் புகழும் தேவன் ஷண்முகநாதன்
காலைப்பிடித்தால் கதி கனிந்து தரும் பொற்பாதன் (22)

## பொற்பதம் அருளும் பூபாலன்

ராகம்: பூபாலன் — தாளம்: ஆதி

பல்லவி

பொற்பதம் அருளும் பூபாலன்— வேலன்
நற்பதம் நாடுவாய் நல்லருள் தரும் சீலன்

அனுபல்லவி

கற்பனை கடந்திடும் கட்டழகன் முருகன்
தற்பரனின் புதல்வன் தாக்ஷாயணிகுமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

ஆனந்தரூபனும் அழகு திக்கரை வாசன்
கானந்தனைப் பாடகனிந்தருள் தருமநேசன்
மோனந்தவழும் காரை ஞானக் களபூமித்தேசன்
ஞானந்தனைத் தருவான் ஞாலமதில் என்றும் (23)

## ஞாலம் வலம் வந்த நாயகனே

ராகம்: அடாணு தாளம்: ஆதி

பல்லவி

ஞாலம் வலம்வந்த நாயகனே முருகா
கோலமயில்மீதில் கோலப்பழம் வேண்டி

அனுபல்லவி

பாலசுப்ரம்மண்யா பரிந்தருள் நீ தருவாய்
காலபயம் வெல்லக் கந்தனே வந்தருள்வாய்

சரணம்

காரைக் களபூமிக் கவின்பதி திக்கரை
ஊரைச்சிறக்கவருள் உன்னதக் கோயில் கொண்டாய்
சீரை சிறப்பைநல்கி சேவடி நீ தருவாய்
நாரைமலி வயல்சூழ் நற்திக்கரை நாதா (24)

## திக்கரை நாதனே தீனதயாபரா

ராகம்: பந்துவராளி தாளம்: ஆதி

பல்லவி

திக்கரை நாதனே தீனதயாபரா
முக்கண்ணன் புதல்வனே முத்தியின் தத்துவனே

அனுபல்லவி

தக்கதுணை நீயே தண்ணருள் நீ தருவாய்
மிக்க புகழ் காரை மிளிர் களபூமிப் பதித்

சரணம்

நாதவேத தத்துவ நாயகனே குமரா
பாதமலர் தாராய் பத்மநாபன் மருகா
கீதம் பாடி உன்னை நாதனே போற்ற அருள்
வேதம் புகழும் வடிவேலனே ஷண்முகனே (25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷண்முகா நின்பதம் சரணம்

ராகம்: பாகேஸ்ரீ

தாளம்: ஆதி

பல்லவி

ஷண்முகா நின்பதம் சரணமையா - உன்னை
பண்முறையால் பாட பரிந்தருள் செய்வேலையா

அனுபல்லவி

கண்மணியே முருகா கார்த்திகேயா கடம்பா
வண்ணமயிலழகா வாயாரப்பாட அருள்

சரணம்

அருணகிரிநினது அடிமலர்ப் புகழ்பாட
அருளை அள்ளிஅள்ளி ஆறுமுகா சொரிந்தாரே
திருவளர் களபூமித் திக்கரை முருகையா
வருவாயோ தமிழ் திருவடிபாடினேன் (26)

## பாடிட பாடிட பாட்டினிக்கும்

ராகம்: பீப்பினாஸ்

தாளம்: ஆதி

பல்லவி

பாடிடப் பாடிடப் பாட்டினிக்கும் — மனம்
நாடியே முருகனின் நல்லருளைப் பருகும்

அனுபல்லவி

ஆடிடும் மயில்மீது அணங்காரிருவருடன்
நாடிலங்கும் திக்கரை நாயகனைத் தமிழில்

சரணம்

உள்ளமும் உருகும் உருகியருள் பருகும்
கள்ளமிலா மனமும் கசிந்து கண்ணீர் பெருகும்
வள்ளிமணவாளன் வடிவழகு திகழும்
புள்ளிமயில் வேலன் புகழ்தனைச் செந்தமிழில் (27)

## கந்தனைப் பாடிடுவாய்

தாளம்: ஆதி

ராகம்: தன்யாஸி

பல்லவி

செந்தமிழ்க் களபூமிச் செழுநகர்த் திக்கரைக்
கந்தனை பாடிடுவாய்—மனமே

அனுபல்லவி

சுந்தரரூபனை சுகுண சல்லாபனை
விந்தை மயிலேறும் வேலவனைக் குகனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

தமிழுக்கு உருகுவான் தாமோதரன் மருகன்
அமுதமாய் அருள்தனை அள்ளி அள்ளித் தருவன்
நமதிடர் தீர்த்திடுவன் நாயகி வள்ளி காந்தன்
கமழும் வயல்மலியும் களபூமி வாழ்பவன் (28)

## களபூமித் தெய்வமே கந்தா

ராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

களபூமித் தெய்வமே கந்தா — உன்னை
உளமாரவே துதித்தேன் உவந்தருள் செய்குமரா

அனுபல்லவி

வளமேவும் திக்கரை வயல்சூழ வாழ்பவனே
அழகான மயில்மீது அமர்பவனே குகனே

சரணம்

சரணம் சரணமென்று சந்ததம் உனைத்தொழுதேன்
வரமருளி நீயும் வந்தருள் தாராயோ
கரமிளிர் வேலேந்திக் கலாபமிவர்பவனே
தரணியில் உனதிரு தாளைச் சரணடைந்தேன் (29)

## சரணமலரருள் ஷண்முகனே

ராகம்: வசந்த தாளம்: ஆதி

பல்லவி

சரணமலரருள் ஷண்முகனே - குஹனே
பரமனின் புதல்வனே பாலசுப்ரமணியனே

அனுபல்லவி

புரமெனும் திக்கரை அப்புனிதனே வேலவனே
மரணபயம் தீர்க்கும் மரகதமயிலவனே

சரணம்

அருளை நினைத்துருகி அல்லும் பகலுமுந்தன்
திருவடி தொழுமெனக்குத் துணைசெய்ய வாராயோ
முருகனே முகுந்தனின் மருகனே மாமணியே
பெருவரம் நல்கிடும் பேரானந்தப் பொருளே (30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளறியாப்பிரமன் பெருமகந்தையைவென்றுய்

ராகம்: ஹம்ஸத்வனி

தாளம்: ஆதி

பல்லவி

பொருளறியாப் பிரமன் பெருமகந்தையை வென்றுய்
கருவானுய் ஓங்காரக் கந்தனே நீ அருள்வாய்

அனுபல்லவி

திருவளர் திக்கரை திகழும் சுப்பிரமணியா
திருவடி நம்பினேன் ஒருவரும் இல்லை ஐயா

சரணம்

அருவியெனத் தமிழ் அழகுப் பாடல்தனைச்
சொரிய வைத்தாய் ஐயா சொக்கநாதன் மகனே
பெருவடிவேலேந்தி குறமகள் குஞ்சரியும்
மருவிட வருவாயோ மயிலேறும் குருபரனே (31)

## குருபரனின் திருவடிகள் சரணம்

ராகம்: நாதநாமக்ரிய

தாளம்: ஆதி

பல்லவி

குருபரனிற் திருவடிகள் புவனியிலே சரணடைவாய்
பெருவரங்கற் தந்து குஹன் பேரின்பநிலை தருவன்

அனுபல்லவி

மருவுவயல் அழகுமலி மாபதியாம் திக்கரையில்
உருவினெழில் திகழுமிறை உத்தமனும் தத்துவஞ்சேர்

சரணம்

அலைகள் அவன் புகழதனை அசைந்துருண்டு ஆடிப்பாடும்
தலையசைந்து நெற்கதிர்கள் தாளிணைகள் நாடியாடும்
குலைமலிப்பூக்குலுங்கிலிடுமே குமரன் இசைகுயில் பாடும்
நிலைதரும்வேல் திமிர்ந்து அருள் நீணிலத்தில் நல்கி ஆடும் (32)

## ஆடும் பரிவேல் ஆறுமுகன்

ராகம்: சுபபந்துவராளி

தாளம்: ஆதி

பல்லவி

ஆடிடும் பரிவேல் ஆறுமுகன்—பதம்
நாடியே துதிப்பாய் நரகதி வருமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

கூடிடும் வினையெலாம் குமரவேல் கொல்வான்
தேடிடும் அருளைத் தித்திக்கத் தருவான்

சரணம்

வாயார அவன் புகழ் வண்டமிழிற் பாடு
நேயா எனக்குகன் நீழலை நாடு
பாதாவிந்தமே பரிந்தருள்வான் ஐயன்
தீதானவை தொலைப்பான் திக்கரை முருகன் (33)

## திக்கரை முருகனின் திருவடிபோற்று

ராகம்: நாட்டைக்குறிஞ்சி தாளம்: ஆதி

பல்லவி

திக்கரை முருகனின் திருவடி போற்று
அக்குருபரன் அருள் அள்ளியே தருவான்

அனுபல்லவி

பக்குவமார்க்கம் காட்டி பரமானந்தம் ஊட்டி
தக்க பேரானந்த தண்ணருளம் தருவான்

சரணம்

சரவண பவ எனும் சடாட்சரத்தை ஓது
பரமலர் வேலேந்தும் கந்தன் உனை ஆள்வான்
மரகத மயிலேறி மகானுபாவன் வருவான்
புரநகர் திக்கரை புரக்கும் முருகேசன் (34)

## முருகேசனை நினைத்து உருகு

ராகம்: பெஹாக் தாளம்: ஆதி

பல்லவி

முருகேசனை நினைந்து உருகு - மனமே
திருவாழும் காரைநகர் திக்கரை வளர்ந்திடும்

அனுபல்லவி

குருவாக ஈசனின் பெருமாதவ முருகன்
வருவான் உனையென்றும் வாழ்வினில் காத்திடுவான்

சரணம்

நீறிலங்கும் நெற்றி நெடுவேலேந்தும் கரம்
ஆறிரு நயனங்கள் அருளை அள்ளி நல்கும்
மாறிலா வள்ளியும் பருவுகுஞ்சரி மாதும்
எழிமாமயில்மீது எழிலப் பவனிவரும் (35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவனி வந்தான் புவனிதனிலே

ராகம்: சுருட்டி

தாளம்: ரூபகம்

பல்லவி

பவனி வந்தான் புவனி தனிலே
பவங்கற் தீர்க்கும் சரவண பவன்

அனுபல்லவி

தவநிறை தலம் திருத்திக்கரையில்
அவனிபோற்ற ஆறுமுகன் திருப்

சரணம்

வேதகோஷம் முழங்க சாம
கீதம் தேவர் கின்னரர் பொழிய
நாதன் ஷண்முகன் நல்லருள் கொடுக்கப்
பாதம் நல்கிப் பக்குவம் ஈய (36)

## பக்குவநிலை தந்து பரிந்தருளும் தெய்வம்

ராகம்: கிரவாணி

தாளம்: ஆதி

பல்லவி

பக்குவநிலைதந்து பரிந்தருளும் தெய்வம்
திக்குபுகழும் காரை திக்கரையுறை செல்வன்

அனுபல்லவி

எக்கணமும் மறவா தெழில் வேலன் பதம்நினைந்து
நெக்குருகும் அன்பர் நெஞ்சமதிலே நின்று

சரணம்

அகமதில் ஆறுமுகன் அருளுருவம் தோன்றும்
இகமதில் நல்லருளை இனியவேல் நின்றூன்றும்
புகலரிய புகழும் புனிதத்தமிழ் மூன்றும்
குகனருள்வாய் காரை களபூமியில் என்றும் (37)

## என்றும் எழில்வேலன் துணையே

தாளம்: ஆதி

ராகம்: ஹம்ஸாநந்தி

பல்லவி

என்றும் எழில் வேலன் துணையே--திக்கரை
நின்று அருளும் கந்தன் நிழலுக்கு ஏதிணையே

அனுபல்லவி

கன்றுகுரல் கேட்டு கனிந்து வரும் பசுபோல்
என்றும் அருள்சொரிந்து எம்மை ரஷிப்பான் வாழ்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

தாமரைப் பூம்பதம் தஞ்சமென அசைவாய்
சோமசுந்தரன் மகன் சொரிந்திடுவான் அருள்
பூமலர் சோலைமலி புனிதக் களபூமி
க்ஷேமமுற அமர்ந்து செய்தருளும் தெய்வம் (38)

## அருளும் தெய்வம் ஆறுமுகம்

ராகம்: ரஞ்ஜனி தாளம்: ரூபகம்

பல்லவி

அருளும் தெய்வம் ஆறுமுகம் வேதப்
பொருளின் முதலும் முடிவுமானவன்

அனுபல்லவி

இருளும் அகற்றி இடர்கள் தீர்த்து
பெருவரம் நல்கி பேரின்பம் தந்து

சரணம்

நினைந்து உருகி நிழலைப் பெறுவாய்
கனிந்து தமிழிற் கந்தனைத் துதிப்பாய்
புனைந்து கடப்பும் அணியும் குமரன்
சிறந்து காரைத் திக்கரைத் தலத்தில் (39)

## திக்கரை தலமுறை திருமுருகன்

ராகம்: ஹமீர்கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

திக்கரைத் தலம்உறை திருமுருகன்—குகன்
தக்கவரம் நல்கும் தாமோதரன் மருகன்

அனுபல்லவி

எக்கணமும் அவன் எழில்நிறை பூம்பதம்
இக்களபூமியிலே என்றும் பூஜிப்பாய் நிதம்

சரணம்

கலியுக வரதனும் கந்தன் அருள்செய்வான்
நலிவெலாம் நீக்கிடுவான் நல்லருளும் பெய்வான்
மலியும் வயல்கள்பொலி வளநகர் கபிரைதனில்
பொலிய அமர்ந்தருள் பேரின்ப வடிவாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(40)

## பேரின்ப வடிவேலன்

ராகம்: காமவர்த்தனி

தாளம்: ஆதி

பல்லவி

பேரின்ப வடிவேலன் வருவான் - சித்திரத்
தேரின் மீதார்ந்தருள் தெவிட்டாமல் தருவான்

அனுபல்லவி

ஊரின் திருத்தவழும் உயர் திக்கரைத் தலத்தில்
பூரித்தமர்ந்தருளும் புண்ணி மூத்தியவன்

சரணம்

அடியவர் அகம் நெகிழ அரோ ஹரா எனப்பாடி
வடிவேலன் பவனியை வாயார வாழ்த்துவர்
மிடிமையிருள் நீக்கி மிளிர்ந்தருள் செய்கந்தன்
கடிமலர் கழல்மணி கலகலஎன ஓடி (41)

## ஓடோடி வந்தான் கதிர்காமன்

ராகம் : ஸ்ரீ

தாளம்: ஆதி

பல்லவி

ஓடோடி வந்தான் கதிர்காமன் - மயில்
மீதேறி வேலேந்தி மாதர்புடை சூழ

அனுபல்லவி

மாடோடி ஈசனின் மகனும் குமரேசன்
நீடாழியுலகினில் நிறை திக்கரை தனிலே

சரணம்

நீயேதுணையெனவே நிழலை மனம்நாடி
வேலே கதியெனவே விம்மியழுதேன் குகன்
மேலேத்தும் மருமகன் மயில்வாகனன் பரன்
சேயேனெக்கருள செகத்தில் திக்கரை தனில் (42)

## பக்திக்கரை தனில்

ராகம்: தேஷ்

தாளம்: ஆதி

பக்திக்கரை தனில் ஓர்படகு-அது
முத்திக்கரை காட்டும் வேல்முருகு
சித்திக்கரை பெறவே நீ அருகு - அந்தச்
சக்திவேல் நினைந்து நீர் பெருகு

முத்தமிழ்த் தேன்பருகும் முத்தழகு-அவன்
தித்தித்திடும் தமிழ் நீ பழகு
அத்திமுகத்தவன் அன்பழகு-முருகன்
இத்திக்கரைத்தலத்தின் இன்பமுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளந்தனில் இனிக்கும் உயர் அமுதம்-அவன்
உவகைகொண்டு சிரிக்கும் இதழ் குமுதம்
புள்ளி மயில்வேலன் அருள் புனிதம் - குற
வள்ளி கணவனைப் பாடுநிதம்

காரைநகர்க் களபூமிவாசன் — அவன்
சூரசம்மாரன்வேல் முருகேசன்
சீரைத்தரும் எழிற் சேந்தன் குமரேசன் — குகன்
பாரை ஆளும் அருள் திக்கரை வாசன்

செந்தமிழ்க்குருகும் கந்தன் — சோம
சுந்தரர் கருளும் மைந்தன்
சுந்தரி அபிராமி நந்தன் — தமிழ்
சந்ததம் மாந்தர விந்தன் (43)

## அரவிந்த மலர்ப்பதம் தந்தான்

ராகம்: பைரவி தாளம்: ஆதி

பல்லவி

அரவிந்த மலர்ப்பதம் தந்தான்— சந்தன்
பிரபந்தத் தமிழ்பாட வந்தான் குகந்தான்

அனுபல்லவி

சரணமலர் அருளுவந்தான் சேந்தன்
புரமெனும் திக்கரைக் யுறையாது முகந்தான்

சரணம்

கையிலே வேலேந்திக் கலாமயில் ஏறி
மையலார் வள்ளியும் மருவுகுஞ்சரியோடு
ஐயனும் முருகையன் அபயகரம் தூக்கி
வையகமீதிலே வளர் களபூமியதில் (44)

## களபூமி வாழும் இளமுருகன்

ராகம்: ஸ்ரீரஞ்ஜனி தாளம்: ஆதி

பல்லவி

களபூமிவாழும் இளமுருகன் — கடம்பன்
வளமார்ந்த திருவடி வருந்துவாய் நல் நெஞ்சே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

பழமேவும் குளிர்சோலை பரவுதிக்கரை தனில்
அழகான மயில்மீது அமரும் சிங்கார வேலன்

சரணம்

பூம்பதம் அருளும் புனிதன் ஷண்முகநாதன்
சாம்பசிவன்மைந்தன் சடா க்ஷரன் வேலவன்
மாம்பழச் சோலைமலி மருவு காரை நகர்
தீம்பதி கோவில் கொண்டு திருவருள் செய்பவன் (45)

## திருவருள் நல்கிடும் திருக்குமரன்

ராகம்: வசந்த தாளம்: ஆதி

பல்லவி

திருவருள் நல்கிடும் திருக்குமரன்- பதம்
உருகி உருகி உள்ளம் உவந்துதுதி மனமே

அனுபல்லவி

பெருவரம் தருவான் பெருமான் முருகையன்
திருதிகழும் பதி திக்கரைக் குமரையன்

சரணம்

கந்தனின் கழலே கதியெனப்பிடித்தால்
வந்துனே ஆளுவான் வரங்களும் தருவான்
தந்தி முகத்தவன் தம்பியாம் கதிர்வேலன்
பைந்தமிழ் காரைக்கள பூமியில் உறைபவன் (46)

## உறைந்துள்ளத்தில் நிறைந்தான்

ராகம்: ஆபோகி தாளம்: ஆதி

பல்லவி

உறைந்துள்ளத்தில் நிறைந்தான் உமைபாலன் —அவன்
நிறைந்து வந்தருள் செய்தான் நிமலன் கதிர்வேலன்

அனுபல்லவி

சிறந்த மிளிர்ந்தோங்கும் சீலக் களபூமி
வளர்ந்து திக்கரைதனில் மிளிர்ந்திடும் கந்தசாமி

சரணம்

ஆறுமுகங்களிலே அருள் அழகு பொலியும்
வீறுகொள் ஞானவேல் விளங்கிவரம் ஈயும்
ஏறுமயிலும் தோன்றும் எழில் குறவள்ளி தோன்றும் (47)
கூறுதமிழ் தோன்றும் குஞ்சரியும் தோன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குஞ்சரி குறவள்ளி காந்தன்

ராகம்: ஆபேரி

தாளம்: ஆதி

பல்லவி

குஞ்சரி குறவள்ளி காந்தன் கந்தன்
அஞ்சலென்றருள்வான் ஆறுமுகன் சேந்தன்

அனுபல்லவி

தஞ்சமென்றே அவன் தாளைப் பிடித்தவர்க்கு
மிஞ்சிடும் அருள்தனை மிளிர்ந்து செரிபவன்

சரணம்

கழனி சூழும்காரை கவின் பதி திக்கரை
அழகுமவிய அருள் அன்புடன் தருபவன்
பழனிமலையாண்டி பாலசுப்ரமணியன்
கழலடி பாடுவாய் கலாபமேறி வருவான் (48)

## கலாபமயில் வாகனன்

ராகம்: ஹரிகாம் போதி

தாளம்: ஆதி

பல்லவி

கலாபமயில் வாகனன் கனிந்து வந்தருளுவான்
நிலாப்பிறையணிந்திடும் நீலகண்டன் புதல்வன்

அனுபல்லவி

உலாவிடும் கடலலை உமைபாலனைப் பாடும்
பலாகுலுங்கும் சோலைப்பதித் திக்கரை வாழும்

சரணம்

அன்பின் வடிவம் அவன் ஆறுமுகன் குகன்
இன்புறப் பேரின்பம் இறைஞ்சும் குமரேசன்
துன்புறுவார் துயர் துடைத்திடும் வடிவேலன்
பண்புத்தமிழ் வாழும் பதிக்கள பூமிவாசன் (49)

## வாசமலர் தொடுத்து வடிவேலன் பதம் சூட்டு

ராகம்: ஸாவேரி

தாளம்: ஆதி

பல்லவி

வாசமலர் தொடுத்து வடிவேலன் பதம்சூட்டு
பூசனைகள் செய்து புண்ணியம் நீ நாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

நேசன் உநிமலன் கந்தன் நீலாயதா க்ஷிபாலன்
ஈசன்புதல்வன் உந்தன் இன்னல்கள் தீர்த்திடுவான்

சரணம்

சரவணபவ எனும் சடா க்ஷர மந்திரம்
தரணியில் வேலேந்திக் காலாபமிவர்ந்த வந்தே
வரமருள் நல்குவான் வளதிக்கரைவேலனே (50)

## வேலனைக் கூவிடுவாய் குயிலே

ராகம்: மணிரங்கு தாளம்: ஆதி

பல்லவி

வேலனைக் கூவிடுவாய் குயிலே
மாலவனின் மருகன் மயில்வாகனன் குகன்

அனுபல்லவி

காலனை உதைத்திட்ட காலகாலன் புதல்வன்
பாலசுப்ரமணியன் பதி திக்கரை வாழும்

சரணம்

வினைமடிக்கும் கைவேல் விரைந்தெடுத்தே வந்து
எனை ஆளுவாய் என எம்பிரானைக் கூவு
சுனை சூழும் களபூமிச் சுப்ரமணியன் பதம்
தனைப் பாடிபோற்றுவாய் தண்டமிழ் பருகிடும் (51)

## தண்டமிழ்த் தேனருந்தும் தண்டாயுதபாணி

ராகம்: கௌரிமனோஹரி தாளம்: ஆதி

பல்லவி

தண்டமிழ்த் தேனருந்தும் தண்டாயுதபாணி
வண்டமிழ்க் களபூமி வளர் திக்கரை ஸ்வாமி

அனுபல்லவி

பண்டாரமாக அந்து பழம் வேண்டிக்கோபங்கொண்ட
விண்டாமரைப்பழனி விளங்கும் திக்கரைக் கழனி

சரணம்

கண்டார் களிப்புறவே கலாபமயிலேறி
மண்டாமரைமலரும் மாபதிக்கரைநகர்
கொண்டேத்தும் கோயில் கொண்டுகுறை தீர்க்க வந்தவன்
கண்தாரை பெய்ய அவன் கழலடி போற்றுவாய் (52)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போற்றி செய்வாய் மனமே

ராகம்: தர்பார் தாளம்: ஆதி

பல்லவி

போற்றி செய்வாய் மனமே—தினமே
நாற்றிசையும் புகழும் நாதன் ஷண்முகன் பதம்

அனுபல்லவி

வீற்றிருந்தே திக்கரை வியங்களபூமியதில்
தேற்றியடியவர்க்கு திருவருள் தருபவனைப்

சரணம்

வானவர் புகழ்ந்தேத்தும் வடிவேல் முருகமூர்த்தி
ஞானவேலேந்திடும் மோன நான் மறைக்கீர்த்தி
கானமயிலேறி குஞ்சரி வள்ளியுடன்
தீனர்கருளும் சிவ திருக்குமரனை வாழ்வில் (53)

## திருக்குமரன் கையில் இருக்குது வீரவேல்

ராகம்: மாயாமளவகௌள தாளம்: ஆதி

பல்லவி

திருக்குமரன் கையில் இருக்குது வீரவேல்
எதுக்கும் அஞ்சாதே எழில் வேல்துணை செய்யும்

அனுபல்லவி

அரக்கர் அகந்தையன்று தொலைத்த நல்ஞானவேல்
புரக்கும் திக்கரை வாழும் புண்ணிய மூர்த்தியாம்

சரணம்

வீரவேல் வாழ்வினில் வெற்றியும் தந்திடும்
சூரசம்மாரவேல் சித்தியும் நல்கிடும்
காரைநகர்க் களபூமியில் வாழும்வேல்
காலபயம்வென்று காத்திடும் கந்தனும் (54)

## கந்தன் மனமிரங்கி வந்தான்

ராகம்: பீம்பிளாஸ் தாளம்: ஆதி

பல்லவி

கந்தன் மனமிரங்கி வந்தான் - அருள்
எந்தன் வினையகலத் தந்தான் திக்கரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

மந்தமாருதம் வீசும் மன்னிடுவயல் தேயும்
சந்தத் தமிழ்மலரும் அந்தக் களபூமிக்

சரணம்

நற்றமிழ் தேன்பருகும் நாதன் கார்த்திகேயன்
பொற்பதம் தந்தருளிப் புகலிடமும் தருவன்
சொற்றமிழ் மலர்மாலை சூட்டிமகிழ்ந்திடுவாய்
கற்றவர் சூழ்ந்திடும் காரைநகர்ப்பதியில் (55)

## காரைநகர்ப்பதிக் கவின் திக்கரை முருகன்

ராகம்: சுபபந்துவராளி தாளம்: ஆதி

பல்லவி

காரைநகர்ப்பதிக் கவின் திக்கரை முருகன்
தாளைப்பணி மனமே - தினமே

அனுபல்லவி

சூரசங்கார மூர்த்தி சுப்ரமண்யன் குகன்
வீரவேல் ஏந்திடும் வேலன் அருள் தருவான்

சரணம்

முத்துக்குமரையன் சக்தி வடிவேலன்
பக்தி செய்யும் அடியர்பாபம் தொலைத்திடுவான்
சித்த மதில் நடம் செய்யும் சிவபாலன்
இத்தரணிமீதில் இலங்கும் குகநாதன் (56)

## குகநாதனருள் கூடும்

ராகம்: பெஹாக் தாளம்: ஆதி

பல்லவி

குகநாதன் அருள்கூடுமே — அவன்
இகமீதில் அமர்ந்தருள் இனிய தலம்பாட

அனுபல்லவி

மகமாயி அபிராமி மகன்வீரவடிவேலன்
செகமேழும் போற்றிடும் சேந்தன் கழல்பாட

சரணம்

தித்திக்கும் செந்தமிழில் திருவடி - பாடுவாய்
முத்துக்குமரனருள் சித்திக்குமே புவியில்
கத்தும் திரைக்கடல் சூழ் கவின் காரைக்களபூமி
அத்திக்கரை வாழும் ஆறுமுகனைப் பாட (57)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுமுகம் இருக்க அஞ்சுவதேன் மனமே

ராகம்: தேவகாந்தாரி தாளம்: ஆதி

பல்லவி

ஆறுமுகம் இருக்க அஞ்சுவதேன் மனமே
வீறுநிறைந்த வெற்றி வேலன் தருவானன்றே

அனுபல்லவி

சீறும் அசுரர்குலம் வீணகந்தை தொலைத்த
நீறுதவழும் நெற்றி நிமலன் திக்கரை தனில்

சரணம்

வாரிவாரி அருளை வழங்கும் வடிவேலன்
கூரிதழ்வேலிருகக் கொடுவினை சேராதே
பாரில் அழகுவயல் சூழும் கரைநகர்
ஊரில் களபூமி உத்தமனும் கந்தன் (58)

## கந்தன் கழலே கதி

ராகம்: காபி தாளம்: ஆதி

பல்லவி

கந்தன் கழலே கதி-மனமே
உந்தன் வினையகற்றி உயர்வாழ்வு நல்கிடும்

அனுபல்லவி

செந்தமிழ் ஓங்கிடும் செழுநகர்த் திக்கரை
வந்தமர்ந்தருள்தரும் வடிவேலன் சிவபாலன்

சரணம்

அம்புறப் பதமலர் அனுதினமும் துதிப்பாய்
வெம்பவவினைகளை வேரறுப்பான் குமரன்
சம்பன் மகன் குகன் சாம்பவியின் புதல்வன்
உம்பர் தொழும் சீலன் உயர்மறையின் முதல்வன் (59)

## உயர்மறை போற்றிடும் உத்தமனே

ராகம்: திலங் தாளம்: ஆதி

பல்லவி

உயர்மறை போற்றிடும் உத்தமனே – முருகா
ஜெயமருள் நிறை ஞானதத்துவனே சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

வயலெழில் சூழ்ந்திடும் வளநகர் திக்கரை
நயமுடன் அமர்வள்ளி நாயகனே அபயம்

சரணம்

இச்சைஞான கிரியா சக்தியொடு விளங்கும்
பச்சை மயில் ஏறும் பாலசுப்ரமண்யா
மெச்சிடும் செந்தமிழ் மேலவர் சூழ்ந்திடும்
இச்செகம் புகழ் காரை இன்பமாய் வளர்ந்திடும் (60)

## வளரருள் களபூமி வாசன்

ராகம்: வாரளி தாளம்: ஆதி

பல்லவி

வளரருள் களபூமி வாசன் - முருகேசன்
மிளிரருள் மிகும் குமரேசன் நேசன்

அனுபல்லவி

உளமதில் உறை கார்த்திகேயன் சீலன்
வளமிகு திக்கரைப் பதிச் சிவபாலன்

சரணம்

பன்னிருகையன் பாலசுப்ரமண்யன்
என்னிருகண் நிறை எழில் லாவண்யன்
பன்னிடும் புகழ்மலி பரனருள் புண்யன் (61)
மின்னிடும் வேலேந்தும் மோகனக்கண்யான்

## மோகனக் கண்காட்டி முறுவல் செய்தான்

ராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

மோகனக் கண்காட்டி முறுவல் செய்தான் — மயில்
வாகனத்தில் முருகன் வள்ளி குஞ்சரியோடு

அனுபல்லவி

நாகபூஷணி மைந்தன் நகர்த்திக்கரை நாதன்
தேகம் புல்லரித்திட தோன்றி என்முன் வந்து

சரணம்

அஞ்சல் என அவன் அபய கரம் காட்டி
மிஞ்சும் அருள் தந்தே மிளிர்தமிழும் தந்தான்
தஞ்சம் என்றே குகன் தாளைப் பிடித்தேன் அவன் (62)
செஞ்சதங்கை இதழ் செகத்தில் நடம்புரிந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடம் புரியும் மயில் நாதன்

ராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

பல்லவி

நடம்புரியும் மயில் நாதன் — வேலன்
கடம் பமலரணியும் மார்பன் பொற்பாதன்

அனுபல்லவி

விடமணி கபாலியின் மைந்தன் திக்கரை
இடம் வளர்கதிர்காமன் கந்தன்

சரணம்

சரணமலரருளும் ஷண்முக மூர்த்தி
மரணபயமகற்றும் சரவணபவ பூர்த்தி
தரணியில் தமிழ்பாடு தண்ணருள கீர்த்தி
வரமருளும் அவனும் கருணையின் சீர்த்தி (63)

## கருணையின் சீர்த்தியே கந்தன்

ராகம்: பூர்ண சந்திரிகா தாளம்: ஆதி

பல்லவி

கருணையின் சீர்த்தியே கந்தன் - அவன்
திருவருள் தருவான் திரிசூலிமைந்தன்

அனுபல்லவி

திருவளர் திக்கரை முருகனும் வருவான்
பெருமைத் தமிழ்கேட்டுப் பேரின்பம் தருவான்

சரணம்

குருவடிவானவன் குமரகுருபரன்
அருள்வடிவானவன் ஆறுமுகன் பரன்
மருவிடும் குஞ்சரி வள்ளி மணவாளன்
அருவியாய் தமிழதைச் சொரியவே வைத்தவன் (64)

## சொரியக்கண் நீர்வழியச் சோதியைப்பாடு

ராகம்: முகாரி தாளம்: ஆதி

பல்லவி

சொரியக்கண்ணீர் வழியச் சோதியைப் பாடு
அரியவேல் அருள் தரும் அவனுக்கேது ஈடு

அனுபல்லவி

துரியவேல்வினையைத் தடைத்திடும் வாழ்வில்
பெரியதோர் நிலைதந்து பேரின்பம் நல்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

திக்கரை நற்றலம் தினம்துதி பாடுவாய்
எக்குறைவரினும் நிக்காது ஓடுமே
திக்குகள் போற்றிடும் தீனதயாபரன்
அக்குரு பரனடி அடைந்திடு நெஞ்சமே (65)

## நெஞ்சமதில் உறைந்த செஞ்சரணம்

ராகம்: அமிர்தவர்ஷனி தாளம்: ஆதி

பல்லவி

நெஞ்சமதில் உறைந்த செஞ்சரணம் — முருகன்
கஞ்சவடிப்பாதம் தஞ்சமருள் அபயம்

அனுபல்லவி

மிஞ்சும் எழில் மலியும் மிளிர் திக்கரை தனிலே
வீஞ்சி வள்ளி குஞ்சரி கொஞ்சிடும் குமரன்தாள்

சரணம்

பதுமத்திருவடிகள் பாடித்துதி மனமே
மதுமலர்ச் சேவடிகள் மன்னும் அருள்தருமே
மெதுமலர்கமழ்ந்திடும் மேலான காரைநகர்
புதுக்களபூமியதில் பொலிமுருகையன் கழல் (66)

## முருகையன் அருள் தன்னை நாடு

ராகம்: ரீதிகௌளை தாளம்: ஆதி

பல்லவி

முருகையன் அருள் தன்னை நாடு – மனமே
திருதிகழ் திக்கரைப் பெருமான் சிவபாலன்

அனுபல்லவி

இருகைகள் கூப்பி நீ இன்பத் தமிழ்பாடு
அருளை அள்ளி அள்ளி அவன் நல்கும் கண்கூடு

சரணம்

எல்லாம் அவன் செயல் எங்கும் அவன் அருள்
நல்லாசி யாவுமே நாதன் குகன் கருணை
வல்யானை மணவாளன் வள்ளி மாதின் லோலன்
தொல்மாபதிக்கரை துலங்கும் களபூமி (67)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களபூமித் திக்கரைக் கடம்பன்

ராகம்: யமுனகல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

களபூமித் திக்கரைக் கடம்பன்–அருள்
வளமாரத நல்குவான் வாயாரப் பாடுவாய்

அனுபல்லவி

இளமாதர் புடைசூழ அழகான மயில்மீதில்
புளகாங்கிதங்கொள்ளப் புன்னகை பூத்திடும்

சரணம

சரணாரவிந்தத்தை சந்ததம் நீதுதிப்பாய்
வரமீயும் வடிவேலன் வந்தருள் தந்திடுவான்
கரமாடும் கதிர்வேலும் கலாபமும் துணைசெய்யும்
புரமாதலக் காரை புகழும் செந்தமிழ் முருகன் (68)

## செந்தமிழ் முருகனைச் சேர்ந்திடுவாய்

ராகம்: மலயமாருதம் தாளம்: ஆதி

பல்லவி

செந்தமிழ் முருகனைச் சேர்ந்திடுவாய்-நெஞ்சே
கந்தன் கடம்பனைக் கார்த்திகேயனைப்பாடி

அனுபல்லவி

வந்தனைசெய்பவர் வல்வினை தீர்த்திடுவான்
சிந்தனை செல்வமும் சேர அருள் செய்வான்

சரணம்

நம்புவர்க் கெளியன் நாதன் ஷண்முகன் குகன்
சம்புவெழிற்குமரன் சாம்பவியின் புதல்வன்
நம்வினை தீர்ப்பவன் நளினி செம்பொற்பாதன்
அம்புவித் திக்கரை அழகன் அமுதன் பவன் (69)

## அழகன் அமுதன் ஆறுமுகன்

ராகம்: வலஜி தாளம்: ரூபகம்

பல்லவி

அழகன் அமுதன் ஆறுமுகத்தன்
குழகன் குமரன் குஞ்சரி நாதன்

அனுபல்லவி

பழமுதிர்ந்திடும் பதி திக்கரைவாழ்
பழனியாண்டி பதம் தந்தருள்வான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

தண்டமிழ் பாடித் தாளைத்தொழுவாய்
அண்டரும் போற்றும் அரியின் மருகன்
கண்டவர்க்கினியன் காரைக்களபூமி
கொண்டவன் முருகன் கூர்வடிவேலவன் (70)

## கூர்வடி வேலவன்

ராகம்: தேவகாந்தாரி தாளம்: ஆதி

பல்லவி

கூர்வடிவேலவனைப் பார்வதிபாலகனை
பார்தனிலே பணிந்து பதம் தொழுவாய் மனமே

அனுபல்லவி

கார்மேக வண்ணனின் கனிந்த மருமகன்
சீர் மேவு திக்கரை சிறந்தருள் செய்பவன்

சரணம்

அடியவர்க்கினியவன் ஆறுமுகத்தவன்
மிடியெலாம் நீக்கவே மிளிர்வேல் அருள்பவன்
கடிகணபதியவன் கருணையிளையவன்
கொடியதில் கோழியைக் கொண்டவன் குருபரன் (71)

## குருபரனின் திருவடிகள் போற்று

ராகம்: நடைபைரவி தாளம்: ஆதி

பல்லவி

குருபரனின் திருவடிகள் போற்று — முருகன்
பெருவருளே புவியதனில் பெருந்துணையாய்க் காக்கும்

அனுபல்லவி

திருவுறையும் பதியான திக்கரையில் கோயில் கொண்டு
பெருவுலகில் அடியவர்க்குப் பேரின்பம் தரவுறையும்

சரணம்

திருமுருககுக சரணம் திகழுமெழில் வேலழகா
அருமறைகள் புகழ்ந்தேத்தும் அருணகிரித் தமிழ்ழகா
பெருமானே துணையென்வே பெருவடிகள் சரணடைவாய்
முருகனவன் மனமகிழ்ந்து முத்தியின்பம் தானருள்வான் (72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தியின்பம் நல்கும் முத்துக்குமரையன்

ராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

முத்தியின்பம் நல்கும் முத்துக்குமரையன்
சக்திவேல் முருகனின் சரணமலர் துதிப்பாய்

அனுபல்லவி

தித்தித்திடும் தமிழில் திக்கரை முருகனைப்
பக்தியுடன் பாடி பாதமலர் தொழுவாய்

சரணம்

சஞ்சலம் தீர்த்திடும் சரவணன் கைவேல்
அஞ்சலென அருளும் ஆறுமுகனின் வேல்
மிஞ்சிடும் எழில்நிறை மிளிர்ந்திடு வீரவேல்
தஞ்சமென் றடைந்தவர் தாபம் தீர்திடும் வேல் (73)

## வேல்முருகன் குமரன்

ராகம்: வாசஸ்பதி தாளம்: ஆதி

பல்லவி

வேல்முருகன் குமரன் விளங்கு திக்கரைவாசன்
மால்மருகன் அழகன் மலரடிபோற்று நெஞ்சே

அனுபல்லவி

நால்மறை ஏத்துகின்ற நாதன் ஷண்முக வேலன்
சேல்தவழும் களபூமிக் காரைநகர்

சரணம்

பாதார விந்தமலர் நீதா முருகா என
ஆதாரமாகி அவன் ஆனந்தம் தந்தருள்வான்
மாதாபிதா குரு தெய்வமெனத் துதித்தால்
வேதாசலம் மருகன் வேண்டும் அருள் நல்கும் (74)

## வேண்டுவார் வேண்டியதை விரும்பித் தரும் சீலன்

ராகம்: ஸரஸ்வதி தாளம்: ஆதி

பல்லவி

வேண்டுவார் வேண்டியதை விரும்பித்தரும் சீலன்
தூண்டுசுடரனைய ஜோதி திக்கரை வேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

ஆண்டு உனக்கு அருள் - அள்ளி அள்ளித் தருவான்
பூண்டுமலர் மாலைப் புனிதன் ஓடிவருவான்

சரணம்

மயிலதனில் ஏறி மாதர் இருவருடன்
அயிலொரு கையேந்தி அழகுக் கொடியுமேந்தி
பயிலும் தமிழ்பாடிப் பக்குவமார்க்கம் காட்டி
சயிலம் எறிந்தவேலன் சரணம் தரவருவான் (75)

## வானவர் போற்றிடும் ஞானக்குருபரன்

ராகம்: மாண்டு தாளம்: ஆதி

பல்லவி

வானவர் போற்றிடும் ஞானக்குருபரன்
மோனப்பதம் பாடுவாய் — மனமே

அனுபல்லவி

தீனதயாபரன் திக்கரை வாழ் முருகன்
கானக்குறவள்ளி குஞ்சரி நாயகன்

சரணம்

சிந்தனைச் செல்வமும் சிறந்தருள் நல்கிடும்
கந்தனைப் பாடியே கழலடி போற்றுவாய்
வந்துனை ஆளுவான் வடிவேலன் குகன்
பைந்தமிழ் காரைக் களபூமியில் வளர்பவன் (76)

## பவம் நீக்கும் சரவணபவ ஷண்முகன்

ராகம்: ஹமிர்கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

பவம் நீக்கும் சரவணபவ ஷண்முகன் - குஹன்
சிவபாலன் சேவடிகள் சேவித்திடுவாய் நெஞ்சே

அனுபல்லவி

தவம் நிறைதிருப்பதி புவனியில் திக்கரை
தலம் வளரும் வேலன் தாளைத் துதித்திடுவாய்

சரணம்

பிறவிப் பிணியறுக்கும் பிடித்த வினையகற்றும்
அறவழி அருள்தரும் ஆனந்தச் செவ்வடிவேல்
குறமகள் குஞ்சரியும் குலாவிடும் திருமுருகன்
மறமதை நீக்கிடுமே மயில்வாகனன் வேலன் (77)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலன் பதம் நாடு மனமே

ராகம்: சுருட்டி தாளம்: ரூபகம்

பல்லவி

வேலன்பதம் நாடு மனமே --சிவ
பாலன் திக்கரை வாழ் சீலன்முருகனும்

அனுபல்லவி

மாலின் மருமகன் மாரியம்மை மகன்
சேலின்விழி வள்ளி தெய்வானை காதலன்

சரணம்

நீலத்திரைக்கடல் சூழும் காரைநகர்
கோலத்திருக்கோயில் கொண்ட குருபரன்
சீலக் களபூமி திக்கரைச் ஷண்முகன்
நீலகண்டன்மகன் நித்திய பூரணன் (78)

## நித்திய பூரணனை நினைநெஞ்சே

ராகம்: புன்னுகவராளி தாளம்: ஆதி

பல்லவி

நித்திய பூரணனை நினை நெஞ்சே – வாழ்வில்
சத்திய ரூபனும் சரவணபவனுன

அனுபல்லவி

கத்தும் கடல் சூழும் கவின் திக்கரைவாழும்
முத்துக்குமரையன் சக்தி வடிவேலன்

சரணம்

சந்ததம் கந்தனைச் செந்தமிழ் பாடியே
வந்தித்துதுதிசெய்வாய் வரம் தரவந்திடுவான்
மந்திர மாமறை மன்னும் உருவான
சுந்தர ரூபனை வந்தனைசெய்து நீ (79)

## நீணிலவாழ்வினில் நீயே துணை முருகா

ராகம்: ஸிம்மேந்திரமத்யமம் தாளம்: ஆதி

பல்லவி

நீணிலவாழ்வினில் நீயே துணை முருகா
ஆணிப் பொன்னம்பலவன் அருமை மகனே என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

வேணியபிராமி விரும்பிடும் பாலகனே
தோணித்துறைக் காரைத்திக்கரை வளர்குகனே

சரணம்

அய்யனே குமரா ஆறுமுகா கடம்பா
துய்யனே தூயவா துணை நின் சரணமலர்
மெய்யனே விமலா மேலவனே நிமலா
வையகமீதில் களபூமிக்கதிர்காமா (80)

## கதிர்காமன் கழலடிகருத்திருத்து

ராகம்: ஆரபி தாளம்: ஆதி

பல்லவி

கதிர்காமன் கழலடிகள் கருத்திருத்து--மனமே
மதிசூடும் அரன்மைந்தன் மயில்வாகனன் பவன்

அனுபல்லவி

சதிர் ஆடுமயில் மீது சதுரமறைகள் போற்ற
குதியோடு ஆடிவரும் குமரன ஷண்முகவேலன்

சரணம்

சிந்தையில் கந்தனை நிதம் இருத்தி நீயும்
வந்தனை செய்குவாய் வண்டமிழ் பாடுவாய்
வந்துனை ஆளுவான் வரங்களும் நல்குவான் (81)
செந்தமிழ்க் களபூமி செழித்து வாழ் வடிவேலன்

## வாழ்வு தரும் வடிவேல்

ராகம்: ஹிந்துஸ்தான்காபி தாளம்: ஆதி

பல்லவி

வாழ்வு தரும் வடிவேல் உண்டு - உனக்கு
தாழ்வு மனப்பான்மை தரணியில் ஏன் மனமே

அனுபல்லவி

சூழ்கடல் ஒலித்திடும் சோபனத் திக்கரை
வாழ்முருகேசனும் வண்டமிழ் கேட்டுமே

சரணம்

ஆறுபடை வீடும் அழகு களபூமி
கூறுமொரு வீடாய்க் கொண்டுறையும் வேலன்
தேறுமொழி சொல்லி தேனருளும் தருவான் (82)
வீறுடைவேலேந்தி வெவ்வினை தானழித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெவ்வினை களைந்திடும் வேலவன்...

ராகம்: பஹுதாரி

தாளம்: ஆதி

பல்லவி

வெவ்வினைகளைந்திடும் வேலவன்--முருகன்
செவ்விதழ் சேவடி சேர்ந்திடுவாய் மனமே

அனுபல்லவி

அவ்வையின் அகவலில் அமுகம் மகிழ்ந்தவன்
கொவ்வையின் செவ்விதழ் குழியச் சிரித்தவன்

சரணம்

தமிழிசை கேட்டவன் தணல்மெழுயாயுருகி
அமிழ்தமாம் தன்னருள் அள்ளி அள்ளித்தருவன்
கமழ்வயல் சூழ்ந்திடும் காரைத்திக்கரை வாழும்
புகழ்நிறை புண்ணியன் புனித வேல் ஏந்தியே (83)

## வேலேந்தி விளையாடி வந்தான்

ராகம்: பாகேஸ்ரீ

தாளம்: ஆதி

பல்லவி

வேலேந்தி விளையாடி வந்தான்--கந்தன்
மாலேத்தும் மருமகன் மாபதி திக்கரையில்

அனுபல்லவி

கோலேந்திப் பழனியில் கோவண ஆண்டியாய்
நூலேத்த நின்றவன் நுண்கலை நுகர்பவன்

சரணம்

இன்னிசைக் குருகுவான் இனிய தமிழ் மாந்தி
புன்னகை புரிந்தவன் புளகாங்கிதம் கொள்வான்
தன்னிருமலரடி தந்து எமைக்காப்பான்
பன்னிருகையனும் பராபரையின் புதல்வன் (84)

## பராபரை புதல்வன் பாலசுப்ரமணியன்

ராகம்: ஸாரங்கா

தாளம்: ஆதி

பல்லவி

பராபரையின் புதல்வன் பாலசுப்ரமணியன்
தராதயந்தனில் காரைத் தலத்திக்கரை வாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

சுராசுரர் பணிந்திடும் சுகுணமனோஹரன்
அராவணைதுயிலுமால் அரியின் மருமகன்

சரணம்

அருவியெனத் தமிழ் பருகிடத் தந்தவன்
திருவிளங்கும் காரை திக்கரை உறைபவன்
மருவிடும் குஞ்சரியும் குறமகள் மகிழ்பவன்
முருகு தவழ்ஞான முதிர்ச்சியில் முதல்வன் (85)

## ஞானமுதிர்ச்சி நல்கும் நாயகன்

ராகம்: ஹம்ஸநாதம் தாளம்: ஆதி

பல்லவி

ஞானமுதிர்ச்சி நல்கும் நாயகன் - முருகன்
கானமயில் அமரும் கந்தன் கடம்பன் குகன்

அனுபல்லவி

தேனமுதான தமிழ்கானந்தனைப் பருகும்
மோனத்தமிழ் அழகன் முகுந்தன் மருமகன்

சரணம்

சுந்தரிய பிராமி மைந்தனும் ஷண்முகன்
வந்தணைதேவளம் தந்த திக்கரை நாதன்
தந்திடுவான் அருள் தண்டமிழ்குருபரன்
செந்தமிழ் காரைநகர் சேந்தன் வெற்றிவேலன் (86)

## வெற்றிவேல் முருகனின் பொற்றிருப் பதமலர்

ராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

வெற்றிவேல் முருகனின் பொற்றிருப்பதமலர்
பற்றிடுவாய் மனமே-தினமே

அனுபல்லவி

எற்றி எறி திடுவான் முற்றிய வெவ்வினைகள்
நற்றிருத்தாமரை உற்றதுணை தருவான்

சரணம்

தேவரும் மூவரும் தேனருளை வேண்டி
ஆவலாய் பூஜித்த அம்புஜமலர்ப் பாதன்
கூவிடும் கோழியைக் கொடியாப்பிடித்தவன்
பூவில் திக்கரை தன் புன்னகை புரிபவன் (87)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புன்னகை புரிந்தான் என்னையன்

ராகம்: கீரவாணி

தாளம்: ஆதி

பல்லவி

புன்னகைபுரிந்தான் என்னையன்–புவியில்
பன்னிடு திக்கரை மாபதி அமர்ந்திருந்து

அனுபல்லவி

கன்னி வள்ளியொடு கவின் குஞ்சரி சூழ
வன்னமயிலிலேறி வண்டமிழிசை பருகி

சரணம்

கன்னல்தமிழ் கேட்டு கருணை மிகவாகி
அன்னவன் கவியமுதை அள்ளி அள்ளித் தந்தான்
என்னருங்கண் நிறைந்தான் ஏரம்பன் சோதரன்
முன்னம் நக்கீரனவன் முதுதமிழ் உண்டவன் (88)

## தமிழ் உண்ட தங்க வேல்துணை

ராகம்: தேஷ்

தாளம்: ஆதி

பல்லவி

தமிழ் உண்ட தங்கவேல் துணையிருப்பான்
அமிழ் தான தன்னருள் அள்ளிதருவான்-அவ்வை

அனுபல்லவி

கமழும் மலர்கள் சூழும் காரைக்களபூமி
அமரும் திக்கரை வேலன் ஆறுமுகத்தவன்

சரணம்

தேனினும் பாலினும் தெவிட்டாத தீந்தமிழ்
கானமிசைத்தாலவன் கசிந்துருகி வருவான்
மானின் மகள் வள்ளி மருவுகுஞ்சரி காந்தன்
வானின் அமுதமென வாரி அருள் தருவான் (89)

## வாரித்தமிழ் தரும் வாரிதியே

ராகம்: ஸிந்துபைரவி

தாளம்: ஆதி

பல்லவி

வாரித்தமிழ் தரும் வாரிதியே ஆதரி
கூரிதழ் வேலேந்தும் குமரகுருபதியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

ஊரில் திகழ் காரை உயர்களபூமியதில்
நாரியிருவருடன் நயந்தருளும் முருகா

சரணம்

நின்மலர்ச் சேவடி நினைந்து நினைந்து பாடிக்
கன்னல் தமிழ் சூட்டக் கனிந்துநீ வாராயோ
மன்னும் திக்கரை வாழும் மயில்வாகனு குகனே
இன்னமும் தாமதம் ஏனோ தயாபரா (90)

## ஏனோ தயாபரா இம்மௌனம்?

ராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

ஏனோ தயாபரா இம்மௌனம்? - முருகா
வானோர் துதிக்கும் வடிவேலனே கண்பாராய்

அனுபல்லவி

தேனோ கனிரஸமோ தெவிட்டாத செந்தமிழோ
நானோ மனங்கனிந்து நாடிஉனை அழைத்தால்

சரணம்

பக்தி பரவசத்தால் பித்துப்பிடித்தது போல்
கத்திக் கதறிநானும் கந்தா முருகா என்றேன்
எத்தனை சொன்னாலும் திக்திக்குமே தமிழ்
அத்தமிழ் குருகிடும் ஆறுமுகா என்றால் (91)

## என்றாலும் என்குல தெய்வமன்றோ:

ராகம்: ஸாருகேஸி தாளம்: ஆதி

பல்லவி

என்றாலும் என்குல தெய்வமன்றோ: - முருகா
குன்றாடும் குமரனே குகனே குருபரனே

அனுபல்லவி

மன்றாடும் மஹாதேவன் மகனே சிவபரனே
வென்றாடும் வீரவேல் நின்றாடும் சரவணனே

சரணம்

நின்னையன்றிக்கதி நிலத்தில் எவருமுண்டோ?
பன்னிரு கையனே பரிந்தருள் தாராயோ?
அன்னை அபிராமி அருமைப் புதல்வனே (92)
கன்னல் தமிழ்திக்கரை கனிந்து அருள்பவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனிந்து அருள் செய்யக் கந்தன் வந்தான்

ராகம்: லதாங்கி தாளம்: ஆதி

பல்லவி

கனிந்து அருள் செய்யக் கந்தன் வந்தான்-கண்கள்
பனிந்து நீர்மல்கிட பரவசத்தால் நின்றான்

அனுபல்லவி

நினைந்து நினைந்துருகி நிமலா ஷண்முகா என்று
பணிந்து இறை பாடப்பாலசுப்ரமணியன்

சரணம்

சிவனுக்குபதேசித்த சுவாமி நாதன் குகன்
அவனியில் களபூமி அழகு திக்கரை வாசன்
புவனியில் செந்தமிழ்ப் புண்ணியன் கண்ணியன்
தவநிறைத் தண்டமிழ் தண்ணிசை பாடிட (93)

## இசைபாட இன்னருள் சுரந்தான்

ராகம்: ஹேமவதி தாளம்: ஆதி

பல்லவி

இசைபாட இன்னருள் சுரந்தான் — சேந்தன்
அசைமாமயிலேறி அழகு திக்கரை வந்தான்

அனுபல்லவி

திசையாவும் போற்றிடத் தீந்தமிழ் வளர்த்திடும்
இசைமேவும் இன்னகர் இலங்கு களபூமியதில்

சரணம்

பன்னிரு கரங்களும் பரிந்துநல்லாசி நல்க
கன்னி வள்ளியும் காதல் குஞ்சரியும் மகிழ
வன்ன மயில் ஆட வடிவேலும் கொடியாட
என்னிருகண்களும் என்றும் நிறைந்து நின்று (94)

## என்றும் நிறைந்திடும் எழிற்சுடரே

ராகம்: பாகேஸ்ரீ

தாளம்: ஆதி

பல்லவி

என்றும் நிறைந்திடும் எழிற்சுடரே — முருகா
வென்று தரும் வீரவேலனே அருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்வி

அன்று அரக்கர்குல அகந்தைதனை அழித்தாய்
குன்று தோறும் நீயே நின்று அருள் செய்தாய்

சரணம்

அன்பொடு பூசனை அனுதினமும் செய்தேன்
இன்புற நின்னருள் இரங்கி நீ தாராயோ?
நன்புகழ் மிளிர்காரை நற்பதி திக்கரை
மன்பதிவாழ்பவனே மலரடியே தருவாய் (95)

## மலரடி தருவாய் மயில்வாகனு

ராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

பல்லவி

மலரடிதருவாய் மயில்வாகனு—உந்தன்
அலகிலாபுகழதை அழகுதமிழிற் பாட

அனுபல்லவி

உலகினில் தமிழ் மிளிர் உயர் காரைகளபூமி
தலமுறை திக்கரை தனில் நிதம் வாழ்பவனே

சரணம்

சரணம் தர உனக்கு மனமில்லையா முருகா
சரணம் சரணமென்று கதறுவதறியாயோ?
வரமருளி நல்ல வாழ்வருளும் வேலா
மரகத மயிலேறி மகிழ்ந்து வந்தே நீயும் (96)

## வந்தே நீ எனை ஆள்

ராகம்: சக்கரவாகம் தாளம்: ஆதி

பல்லவி

வந்தே நீ எனைஆள்-முருகவேள்
செந்தாமரைப் பதம் சேவிக்கவரம் தந்தே

அனுபல்லவி

செந்தேனும் செந்தமிழும் சிறந்து மிளிர் திக்கரை
வந்தாறுமுகாவுந்தன் வண்டமிழ் பதந்துணையே

சரணம்

தித்திக்கும் செந்தமிழ் தேனிருக்கு உந்தன்
பக்தி சேர் பாதாரம் பரிந்திருக்கு கந்தன்
சித்திசேர் நற்றமிழ் இசையிருக்கு நானும்
இத்தரை மீதிலே இன்பமாயுனைப்பாட (97)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனைப்பாட வரம் தருவாய்

ராகம்: சஹானா                                                                 தாளம்: ஆதி

பல்லவி

உனைப்பாட வரந்தருவாய் கந்தா
நினைப்பாடி நெக்குருகி நீழலின் பம்பெற

அனுபல்லவி

சுனைசூழும் களபூமி தனில் மேவும் திக்கரை
தனைநாடி வந்துறைந்த தண்டமிழ்த் தெய்வமே நான்

சரணம்

உள்ளம் உருகித்தமிழ் உவந்துனைப் பாடிப்பாடி
தெள்ளு தமிழ்ப்பாடல் தெவிட்டாமல் பாட அருள்
வள்ளிமணவாளா வனிதை குஞ்சரிநாதா
அள்ளி அருளைநீதா அழகு மங்களம் நீதா (98)

## மங்களம் நீதா

ராகம்: மத்தியமாவதி                                                                 தாளம்: ஆதி

பல்லவி

மங்களம் நீதா மலரின் பொற்பாதா
தங்கவேல் நாதா தண்டமிழ்த் தேவா

அனுபல்லவி

அங்கயற் கண்ணி அம்பிகை புதல்வா
சங்கரன் மகனே ஷண்முக நாதா

சரணம்

திக்கரை முருகா தீனதயாபரா
சக்கர பாணிச் சதுரன் மருகா
நற்களபூமி சற்பதி நாயகா
சொற்றமிழாலே சொரிந்துனைப் பாட (99)

## பாடிடுவேன் மங்களம்

ராகம்: சுருட்டி                                                                 தாளம்: ஆதி

பல்லவி

பாடிடுவேன் மங்களப் பாட்டு—வேலன்
நாடி வந்தருளுவான் நந்தமிழிசை கேட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

ஆடிடும் மாமயில் அமர்ந்த வடிவேலன்
கூடிடும் திக்கரைக் கோயில் கொண்ட நாதனை

சரணம்

மஞ்சளும் குங்குமம் பொங்கிட அருள்பவன்
தஞ்ச மடைபவர்க்குத் தண்ணருள் தருபவன்
அஞ்சல் என அபயம் அடியார்க் கருள்பவன்
கஞ்ச மலர் சூழும் காரைக் களபூமியானை

மங்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு :

# குமரன் ஸ்ரோர்ஸ்,

ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.



கந்தா குமரா கார்த்தியேகா
தங்கள் மண்டலாபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்.

---

With best Compliments from :

# KANESAN STORES,

63, 78, K. K. S. Road, Jaffna.



ஏறுமயில் வாகனனே
ஏந்தலே சண்முகா !

மண்டலாபிஷேகம்

சிறப்புற வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு :

# தருமராசா ஸ்தாபனம்,

கண்டி வீதி, பரந்தன்.

விவசாய உபகரணங்கள்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன
ஏக விநியோகத்தர்கள்.

## திருச்சிற்றம்பலம் ஸ்ரோர்ஸ்,

தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

பலசரக்கு வியாபாரம்
சீமெந்து மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

அன்பளிப்பு

## மகாராணி ரெக்ஸ்ரைல்ஸ்,

மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best Compliments from :

★

# Anbu Textile,

**155, K. K. S Road,**

**JAFFNA.**

With best Compliments
from :

# New Devi Stores,

**27/1, Old Park Road,**

**JAFFNA.**

எம்மிடம் :

பலசரக்கு பொருட்களும், சாய்ப்பு சாமான்களும்,
மாளிகைப் பொருட்களும், குளிர்பானவகைகளும்,

● மலிவு விற்பனை விலையில் பெற்றுக்கொள்ளலாம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு தேவையான சகலவிதமான
சித்த ஆயுள்வேத மருந்துகளும், எண்ணெய் வகைகளும்,
கோவில் அபிஷேகத் திரவியங்களும்
நம்பிக்கையாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்

மற்றும் :

- ராதா மின்சார மருந்து
- ராதா மணிமார்க் சந்தனாதித் தைலம்
- ராதா ஓம வாட்டர்
- சஞ்சீவி மாத்திரை
- ராதா குருதைலம்
- ராதா பிரமி கூந்தல் தைலம்
- கோரோசனை மாத்திரை
- ராதா மணிமார்க் கேசரோக நிவாரணத் தைலம்
- உடன் அரைத்த சந்தனக் குழம்பு

# எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி

53, (181) கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

160, செட்டியார் தெரு,
கொழும்பு.

With best wishes from :

☆

# S. V. Sivagurunathan,

85, Hospital Road,
JAFFNA.

# K. Sivapragasam & Sons

**312, Hospital Road**

**Jaffna.**

எங்களிடம் நல்ல தரமான அரிசி குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

---

*திக்கரை முருகா திகட்டாத தெள்ளமுதே*

*உங்கள்*

கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகிறோம்

# கந்தன் களஞ்சியம்

கரடிப் போக்கு

கிளிநொச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

FROM



# S. Sinnathurai & Bro

**39, K. K. S. Road,**

**Jaffna.**

With the Best Compliment

FROM



# V. M. PARAMANATHAN & SONS

**47, K. K. S. Road,**

**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

FROM

GENERAL MERCHANT AND

CO - OPERATIVES SUPPLIERS

DEALERS IN: WHOLESALES & RETAIL FOR ALL KINDS OF EKEL BROOMS, COIR, BROOMS COIR, YARNS, JUTE TWINE PAPER BAGES OIL AND OTHER LOCAL PRODUCE

# Mayutharan & Co

**41, K. K. S. Road,**

**Jaffna.**

---

எம்மிடம் சகலவிதமான சில்லறைச்சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

# லிங்கம் ஸ்ரோர்ஸ்

**கண்டி வீதி**

**பரந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
நன் கடன் னடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே''

அன்பளிப்பு:



**க. கனகசுந்தரம்**

களபூமி

காரைநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுந்தருளி மூர்த்தியின் அலங்காரத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொன்னூஞ்சல்

ஆக்கியோன்

அளவையூர் அருட்கவி.

சீ. விநாசித்தம்பி அவர்கள்

## காப்பு

எண்ணுபவர் மனத்திருக்கும் எம்பி ரானே
ஏகாந்த வாழ்வுதரும் தும்பி நாதா
கண்ணுதலான் கருதியருள் கணேசமூர்த்தி
கைதொழுவார் வினையறுக்கும் விக்ன ராஜா
வண்ணமிகு காரைநகர் - களபூமி என்னும்
வளர்பதிசேர் திக்கரையில் வதியும் செவ்வேட்
புண்ணியனின் பொன்னூஞ்சல் புனைய நின்றுட்
போதினையென் புந்திவைத்தேன் காப்பதாமே.

## நூல்

1. பார்பூத்த சராசரங்கள் பாசம் நீங்கி
பரானந்தத் தேனீரிற் படிந்துவைக்கத்
தார்பூத்த சங்கரனும் சிவையுந் தந்த
சரவணனே வேலேந்தித் தவக் குறத்தி
பேர்பூத்த கஜவல்லி பாக ஞகிப்
பிரகாச மயிலேறித் தொண்டர் பேணும்
தேர்பூத்த காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடி ரூஞ்சல்

2. ஓமென்ற பிரணவமே விட்டமாக
ஓங்கும்தத் துவங்கண்மேல் வட்டமாக
நாமமுயர் நான்குமுறை தூண்களாக
நாவின்றசிவா கமங் கணெடு நாண்களாக
சேமமிகு திருமுறைகள் மாலையாக
செப்பிடுமா புராணங்கள் சோலையாக
தேமலர்க்காக் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடி ரூஞ்சல்

3. ஆதவனும் அம்புலியும் கவிகை தாங்க
அக்கினியும் சலபதியும் கவரி வாங்க
மாதவனும் சிவனுமையும் தாமம் சூட
மறையவனும் கலைமகளும் வேதம் பாட
பூதகணம் தேவகணம்விருது காவ
பொருந்துகண பதியாசி மலர்கள் தூவ
சீதவயற் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடி ரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஐங்கரனுர் பழம்வாங்க ஆண்டி யாகி
அருட்பழமாய் ஆவினன் குடியில் நின்று
தங்குறுதிக் கைபிலாயக் காட்சி காட்டும்
சற்குருவே தமிழ்வளர்த்த சக்தி வேலா
துங்கமிகு மசுரர்குல மழித்து வானேர்
துயர்துடைத்த பாஸ்கரனே நீப மார்பா
செங்கமலத் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடி ரூஞ்சல்

5. முந்துமறைப் பொருள்கேட்டு முளரி யானை
முதுசிறையிட் டப்பனுக்கு ஞானம் சொன்ன
கந்தனெனச் சிந்தனைசெய் யடியார் நெஞ்சில்
கற்பகமாய்ச் சதானந்தச் சோதியாகி
அந்தமிலா வாழ்வுதரும் அழகா, கௌரி
அணிமுலைப்பா லுண்டறுவர் பாலு முண்டு
செந்தமிழ்வாழ் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடி ரூஞ்சல்

6. நற்பதத்தார் நடுநாடி வெளியிற் கானும்
ஞானகுரு மாமணியே நான்கு வேதச்
சொற்பதமும் கடந்துமிளிர் துரியா தீதச்
சுடர்விளக்கே சுவையாத சுவையே ஆறு
வெற்பிலுறை இரத்தினமே வினை தணிக்கும்
வேல்மருந்தே சந்ததமும் தொண்டர் போற்றச்
சிற்பமிகு காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடி ரூஞ்சல்

7. சத்திகமு வருளேறு முகங்களாறும்
தவவாழ்வு வழிகாட்டும் கரமீ ராறும்
அந்திமகள் நல்விமகள் பொருந்து தோளும்
அகராதி யட்சரங்கள் அமைந்த வேலும்
முத்திதரும் திருக்கழலும் முறுவல் வாயும்
முத்துமணிக் குழையொடருள் விழியும் காட்டி
சித்திரத்தேர்க் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடி ரூஞ்சல்

8. அறந்திகழும் கரமாட முகங்மளாட
அன்புமலர் விழியாட செவிக ளாட
பிறந்தமறை வாயாட மகுட மாட
பெருங்கருனைக் கழலாட வடிவேலாட
குறந்தறவாய்க் குறத்தியுங்குஞ் சரியு மாட
கோலமயி லாடவயக் கோழி யாட
சிறந்தகலைக் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே ஆடி ரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வெங்காள கண்டரொடு உமையா ளாட
விநாயகரும் நாராணனும் அயனு மாட
சங்கீத வாணிமலர் மாமி யாட
தருவீர சோதரரும் சுரரு மாட
மங்காத மண்டலமீ ரேழு மாட
வருகோளு மூவொன்பான் நாளு மாட
சிங்காரக் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடி ருஞ்சல்

10. நரைஔளவை கவிகேட்ட நாவற் பாலா
நக்கீரர் துயர்தீர்த்த ஞான சீலா
வரைகிழியச் சமரிட்ட வெற்றி வேலா
வருமடியார் பவமறுக்கும் கால காலா
துரைமணியாய் மதுரையர சாண்ட நீதா
தொல்லமணர் கழுவேற வென்ற நாதா
திரைகடல்சூழ் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே ஆடி ருஞ்சல்

11. வான் செழித்த வேலுடையீர் ஆடி ருஞ்சல்
மறை செழித்த காலுடையீர் ஆடிருஞ்சல்
மான் செழித்த கரன்மைந்தா ஆடிருஞ்சல்
வரம் செழித்த கரக்கந்தா ஆடிருஞ்சல்
ஊண்செழித்த ஊறறுப்பீர் ஆடிருஞ்சல்
உளம் செழித்த பிழைபொறுப்பீர் ஆடிருஞ்சல்
தேன் செழித்த காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே ஆடிருஞ்சல்

## வாழி

திக்கரை முருக மூர்த்தி சேவடி வாழி அன்னுன்
பக்கல் வாழ் தெய்வயானை பயில்வள்ளி வாழி செவ்வேல்
மிக்குயர் கீர்த்திவாழி மிளிர்மயில் சேவல் வாழி
பக்குவ ஞான சைவப் பரம்பரை வாழி வாழி

தருணமா மழையால்பூமி தருவளம் நிறைந்து வாழி
குருமுறைச் சமயமாண்பு குலவிடு மக்கள் வாழி
திருமுறைச் செல்வம் வாழி சீவகா ருண்யம் வாழி
மருவிய தொண்டர் கூட்டம் மகிழ்வுற வாழி

## எச்சரீக்கை

அருட்பேறு தருங்கருணைக் கையாளச்ச ரீக்கை
ஆடும்மயில் ஏறிவரும் ஐயாளச்ச ரீக்கை
மருட்பாச விடரறுக்கும் வரதாளச்ச ரீக்கை
மதிதருநாற் கதிசுரக்கும் சரதாளச்ச ரீக்கை
பொருட்பேற்றைத் தருசெய்யாள் மருகாளச்ச ரீக்கை
புலனூறி வருயோக குமராளச்ச ரீக்கை
திருக்காரை திக்கரைவாழ் தேவாளச்ச ரீக்கை
சிவமுருக சரவணசண் முகவாளச்ச ரீக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

நீராரும் வேணியரின் மகனே — பராக்கு
நீலமயி லேறிவரும் குகனே — பராக்கு
ஊராரும் குறவள்ளி கணவா — பராக்கு
ஓங்குகுஞ் சரிமருவு துணைவா — பராக்கு
கூராரும் வேலேந்தும் குருவே — பராக்கு
குறியாது குறித்தறியும் உருவே — பராக்கு
சீராரும் காரைத்திக் கரையாய் — பராக்கு
சிவமுருக சரவணசர்க் கரையாய் — பராக்கு

## லாலி

மருக்கோலச் சுந்தரனே — லாலி லாலி
வளர்சுருதித் தந்திரனே — லாலி லாலி
குருக்கோல நாயகனே — லாலி லாலி
குன்றுடும் தூயவனே — லாலி லாலி
உருக்காட்டி உணர்விப்பாய் — லாலி லாலி
ஒளிகாட்டி உள்நிற்பாய் — லாலி லாலி
திருக்காரைத் திக்கரையாய் — லாலி லாலி
சிவமுருக மூர்த்தியே — லாலி லாலி

## மங்களம்

அண்ணல் விநாயகருக்கு ஜெயமங்களம் - தில்லை
அம்பல வாணனுக்கு ஜெயமங்களம்
வண்ண நடேஸ்வரிக்கு ஜெயமங்களம் – அரி
வரத முகுந்தனுக்கு ஜெயமங்களம்
கண்ணருள் வைரவர்க்கு ஜெயமங்களம் – அருட்
கவிதரும் கலைமகட்கு ஜெயமங்களம்
திண்வள்ளி குஞ்சரிக்கு ஜெயமங்களம் – காரைத்
திக்கரை முருகனுக்கு ஜெயமங்களம்

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் களபூமி திக்கரை

## முருகமூர்த்தி தேவஸ்தான திருவிழா உபயகாரர்கள்

1. முதலாந்திருவிழா:- கொடியேற்றம் திரு. சி. க. கந்தையா (கோவில் முகாமையாளர் அவர்கள்)
2. இரண்டாந்திருவிழா:- திரு. பொ. சதாசிவம் குடும்பத்தினர்.
3. மூன்றாந்திருவிழா:- திரு. ச. மு. பேரம்பலம் குடும்பத்தினர்,
4. நாலாந்திருவிழா:- திரு. ஆறுமுகம், திரு. நாகலிங்கம், திரு. கணேசன் குடும்பமும், உறவினர்களும்
5. ஐந்தாந் திருவிழா:- திரு. சி. ச. கனகரத்தினம் பிள்ளைகள்,
6. ஆறாந் திருவிழா:- திரு. மு. பாலசிங்கம்
7. ஏழாந் திருவிழா:- திரு. ஆ சுப்பிரமணியம்
8. எட்டாந் திருவிழா:- திரு. ஆ. ச. கந்தையா பாலசுப்பிரமணியம்
9. ஒன்பதாந் திருவிழா:- திரு. சி. எஸ். ஆறுமுகம்
10. பத்தாந் திருவிழா:- திரு. தா. ஆறுமுகம் குமாரசாமி உறவினர்கள்

### கார்த்திகைத் திருவிழா உபயகாரர்கள்

1. சித்திரை மாதம்:- திரு. ச. ஆறுமுகம் பொன்னம்பலம்,
2. வைகாசி மாதம்:- கு சண்முகம் புவனேஸ்வரி குடும்பத்தினர்
3. ஆனிமாதம்:- மகோற்சவ உபயகாரர்,
4. ஆடிமாதம்:- திரு. த. கா. நடராசா
5. ஆவணிமாதம்:- திரு. வே. செல்வரத்தினம்
6. புரட்டாதி மாதம் திரு. சி. கா. சுப்பிரமணியம்
7. ஐப்பசி மாதம்:- திரு. கு. ச. கணபத்ப்பிள்ளை
8. கார்த்திகை மாதம்:- திரு. செ. தங்கராசா,
9. மார்கழி மாதம்:- திரு. க. மு. சுப்பிரமணியம்
10. தைமாதம் திரு. கே ஆர். கந்தசாமி
11. மாசி மாதம்:- திரு. ஐ. பொன்னையா
12. பங்குனி மாதம்:- திரு. க. சுப்பிரமணியம் குடும்பத்தினர்

### நித்தி பூசை உபயகாரர்கள்

1. சித்திரை மாதம்:- திரு பரமு சந்தையா, திருமதி. இராமு சதாசிவம்
2. வைகாசி மாதம்:- திருமதி எஸ். மார்க்கண்டு குடும்பத்தினர்
3. ஆனி மாதம்:- திரு ஆறுமுகம். திரு சிவகுருநாதன் திரு. கு. ச. கணபதிப்பிள்ளை
4. ஆடிமாதம்:- திரு. ஆ. வீரகத்தி கதிரவேலு
5. ஆவணிமாதம்:- திரு. த. கா. முருகேசு
6. புரட்டாதி மாதம்:- திரு. ப. பொ. ஆறுமுகம்
7. ஐப்பசி மாதம்:- திருமதி மாதவி தில்லையம்பலம்
8. கார்த்திகை மாதம்:- திரு. தில்லையம்பலம் கனகசுந்தரம்
9. மார்கழி மாதம்:- திருமதி மாதவி தில்லையம்பலம்
10. தைமாதம்:- திரு. பொ. சுப்பிரமணியம் (ஆசிரியர்)
 ,, வே. செல்வரத்தினம்
11. மாசிமாதம்:- ,, தா. துரைராசா
 ,, க. தம்பையா (ஆசிரியர்)
12. பங்குனி மாதம்:- ,, ச. மு. சுந்தரம்பிள்ளை குடும்பத்தினர்

### இக்கோவிலில் நடக்கும் விசேட தினங்கள்

1. வைகாசி:- விசாகத்திருவிழா
2. ஐப்பசி வெள்ளித் திருவிழா, கந்தசஷ்டி விரதம், கந்தபுராண படலம், சூரசம்ஹாரத் திருவிழா,
3. கார்த்திகை:- திருக்கார்த்திகைத் தீபவிழா, திருச்செந்தூர் புராணபடலம்
4. மார்கழி:- திருவெம்பாவை விரதம்
5. தை தைப்பூசத் திருவிழா, சண்முகப் பெருமான் மணவாளக்கோலத் திருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக மண்டலாபிஷேக உபயகாரர்கள்

1. கும்பாபிஷகக் குழுவும், பொதுமக்களும்
2. திரு. பொ சதாசிவம் குடும்பம், நந்தாவில்
3. ,, ச. மு. பேரம்பலம் ,, பொன்னுவளே
4. ,, ஆ. நாகலிங்கமும், கந்தையா குடும்பங்கள், பொன்னுவளே
5. ,, சி. ச. கனகரத்தினம் குடும்பம், விளானே
6. ,, மு. பாலசிங்கம் குடும்பம், குண்டங்கரை
7. , ஆ. சுப்பிரமணியம் ,, விளானே
8. ,, A. S. கந்தையா பாலசுப்பிரமணியம், பாலவோடை
9. ,, C. S. ஆறுமுகம்
10. ,, தா. ஆ. குமாரசுவாமி குடும்பம், பொன்னுவளே
11. களபூமி இளைஞர்கள்,
12 ,, க. சுப்பிரமணியம், திக்கரை
13. ,, வெற்றிவேலு ஆறுமுகம், குண்டங்கரை
14. ,, ஆ. சோமசுந்தரம், விளானே
15. ,, S. K. பொன்னம்பலம், கொழும்பு
16. ,, க. சேனுதிராஜா, பொன்னுவளே
17. ,, S பரமலிங்கம், விளானே
18. ,, ந. சண்முகநாதன், பொன்னுவளே
19. ,, சி. சண்முகம், விளானே
20. ,, இ. பொன்னம்பலம், பாலாவோடை
21. ,, நா: பாலசுப்பிரமணியம்; பாலாவோடை
22: ,, K: K: V: பஞ்சலிங்கம், பாலவோடை
23. ,, K: காசிப்பிள்ளை, வளுப்போடை
24: ,, S: K: ஆறுமுகம், விளானே
25: ,, வே: கேதீஸ்வரன், பொன்னுவளே
26: ,, ஐ: க: பொன்னையா, பாலாவோடை
27: ,, K: K: V: குலரத்தினம், ,,
28: ,, வே சின்னத்தம்பி, பொன்னுவளே
29: ,, K: K: K: சிவபாலன், பொன்னுவளே
30: ,, V: R: தம்பிப்பிள்ளை, பாலாவோடை
31: ,, வே: இராசரத்தினம், பாலாவேடை
32: ,, K: R: கந்தசாமி ,,
33: ,, மு: தர்மராசா, ,,
34: ,, செ: சிவபாதசுந்தரம்; பொன்னுவளே
35: ,, ச: கணபதிப்பிள்ளை; விளானே
36: ,, சு: செல்லத்துரை; இடைப்பிட்டி
37: ,, சு: தெய்வேந்திரம்; பொன்னுவளே
38: ,, சி: நேசேந்திரம், விளானே
39: ,, வே: தம்பிராசா; கருவியாந்தனே
40: ,, ஆ. சின்னத்தம்பி, பொன்னுவளே
41. ஆசாரிமார் குடும்பம், காளிகோவிலடி
42. திரு. ஆ. சுப்பிரமணியம், நாவாந்துறை
43. ,, நா. செல்லத்துரை, பொன்னுவளே
44. ,, கா. தியாகராசா, விளானே
45. மண்டலாபிஷேகம். திருப்பணிச்சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best wishes from :

KALA TRADERS,

151, Dam Street,

COLOMBO - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best Compliments from :

**QUADIR STORES,**

*No. 21, Old Moor Street,*
*COLOMBO - 12.*

T'Phone : 432119 - 25146.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best wishes from :

# Lanka Asiatic Corporation

*General Merchants, Commission Agents*
*& Dealers in Ceylon Produce.*

**32, Old Moor Street,**
**COLOMBO - 12.**

**Phone : 432473**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best Compliments from :

VIEMAAL & CO.,

No. 1, Dam Street.

COLOMBO - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments*
*from:*

**The Auto Printers,**

122, Central Road,
*COLOMBO* - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best wishes*

*from :*



**K. K. KRISHNAPILLAI & CO,**

*171, 4th Cross Street,*

*COLOMBO - 11.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best Compliments
from :

☎
21693 - 23461

**A. S. P. SIVANPILLAI,**

**Importers, General Merchants
& Commission Agents.**

214, Keyzer Street,
COLOMBO - 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best Compliments from :

# MARIGOLD PROPERTY DEVELOPERS,

## Your Ultimate Choice in Apartments

**Office :** ( HOTEL TAJ SAMUDRA )

25, Galleface Centre Raod,
COLOMBO - 3.

Telephone :
546622

Fax :
546348

( Member of S. Arumugam & Bros Group )



ARCHIVES

UNIVERSITY OF JAFFNA * LIBRARY *

University of Jaffna
249716
Library

249716

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES



With the Best

Compliments

from

# MURUGAN STORES

27. STANLEY ROAD - JAFFNA


Donated ... ATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்நகரில் உங்களுக்குத் தேவையான
சகலவித
பலசரக்குப்பொருட்கள், பால்மாவகைகள்,
சவர்க்கார வகைகள், ஜாம்வகைகள்

**L. P. காஸ்**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்.

## சிற்றி ஏஜன்சி

*154, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
தொலைபேசி: 22564

## சிற்றி ஏஜன்சி

*158, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
தொலைபேசி: 24817

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org